# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 | கதிர் 143 | சித்திரை 05 ஆம் நாள் | புதன்கிழமை | 18 ஏப்ரல் 2018 | வள்ளுவர் ஆண்டு 2049

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 32


## ஆட்சிக்கான மோதல் இன்றுடன் முடிகிறது

யாழ்ப்பாணம், ஏப். 18
வடக்கில் தொங்கு நிலையிலுள்ள சபைகளின் தவிசாளர் தெரி >> 06

## மகிந்த அணியுடன் கூட்டுச்சேர்ந்து ஆட்சியமைக்க முயன்ற கூட்டணி

வவுனியா, ஏப். 18
வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் பதவியை, மகிந்த அணியான சிறி >> 06

# மகிந்த அணியுடன் இணைந்தமையை மக்கள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள்

### ஈ.பி.ஆர்.எல்.எவ். செயற்பாடு தொடர்பில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. விசனம்

வவுனியா, ஏப். 18
மகிந்த அணியுடன் இணைந்து ஆட்சி அமைக்க முற்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் நடவடிக்கையை மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவோ மன்னிக்கவோ மாட்டார்கள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். வவுனியா வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர், உபதவிசாளர் தெரிவு முடிவடைந்த பின் >> 06

### வவுனியா வடக்கில்

# அதிர்ஷ்டத்தில் ஆட்சியை பிடித்தது கூட்டமைப்பு

வவுனியா, ஏப்ரல் 18
வவுனியா வடக்குப் பிரதேச சபையின் ஆட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிர்ஷ்டத்தில் கைப்பற்றியது. உபதவிசாளர் பதவியை போட்டியிட்டு 8 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிகொண்டது. >> 25

### வவுனியா தெற்கில்

# தமிழர் கூட்டணியை தோற்கடித்து ஆட்சி பீடமேறியது கூட்டமைப்பு

வவுனியா, ஏப்ரல் 18
வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையில், தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தோற்கடித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றியது. உபதவிசாளர் பதவியை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடம் தோல்வியடைந்ததன் மூலம் கூட்டமைப்புப் பறிகொடுத்தது. >> 04

## கூட்டமைப்புக்கு முன்னணி ஆதரவு

வவுனியா, ஏப். 18
வவுனியா வடக்குப் பிரதேச சபையின் உபதவிசாளர் தெரிவின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப் >> 25

### கூட்டமைப்பை எதிர்ப்பதற்கு

## சு.கவுக்கு முட்டுக்கொடுத்தது தமிழர் விடுதலைக் கூட்டணி

வவுனியா, ஏப். 18
வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை >> 06

## கூட்டணிக்கு கொள்கைகள் இல்லை என வெளியேறியது சிவகரன் அணி

மன்னார், ஏப். 18
கொள்கை கொள்ளையடிக்கப்பட்டதால் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து நாம் வெளியேறுகின்றோம் என்று அதன் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான சனநாயக தமிழ் >> 06

## சபை நடவடிக்கைக்கு இடையூறு: ஆணையாளர் கடும் எச்சரிக்கை

### 'கப்சிப்பாகினர்' கட்சிகளின் முக்கியஸ்தர்கள்

வவுனியா, ஏப். 18
வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் தெரிவுக்கான அமர்வு நேற்று இடம்பெற்றபோது, சபை நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பார்வையாளர்களாகக் கலந்து கொண்ட கட்சிகளின் முக்கியஸ்தர்கள் நடந்து கொண்டனர். வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் >> 06

## ராணுவம் வைத்திருந்த பிரதேசத்தை சீரமைக்க ரூ.1,600 மில்லியன் தேவை

### விடுவித்த பகுதிகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளமையே காரணம்



யாழ்ப்பாணம், ஏப். 18
வலி.வடக்கில் கடந்த 13ஆம் திகதி விடுவிக்கப்பட்ட பகுதிகளின் மறுசீரமைப்புக்கு உடனடியாக ஆயிரத்து 600 மில்லியன் >> 06

## 13,014 ஏக்கர் நிலமே முப்படையின் வசமாம்!

யாழ்ப்பாணம், ஏப்.18
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான 13 ஆயிரத்து 14 ஏக்கர் நிலமே படையினர் வசம் உள்ளது என்று மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.
வடக்கு, கிழக்கு மாகா >> 06

## வெளிமாவட்ட மீனவருக்கு வடமராட்சியில் அதிர்ஷ்டம்

யாழ்ப்பாணம், ஏப்.18
யாழ்ப்பாணம் வடமராட்சிக் கடற்பரப்பில் கரை வலைத் தொழிலில் ஈடுபடும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவருக்கு நேற்று 20 ஆயிரம் கிலோ மீன்கள் அகப்பட்டுள்ளன. >> 04

## அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அழுத்தம் கொடுக்கவேண்டும் பிரிட்டன்

### *ஜனநாயகப் போராளிகள் கட்சி கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஏப்.18
போரில் நேரடியாகப் பங்குபற்றியவர்கள் மறுவாழ்வின் அடிப்படையில் விடுவிக்கப்படும் நிலையில், போர்ச் சூழலில் பலதரப்பட்ட காரணங்களுக்காகவும், காரணமின்றியும் >> 04

## ராணுவத்தின் வசமுள்ள காணிகள் தொடர்பில் கொழும்பில் ஆராய்வு

### *விடுவிக்கும் நடைமுறைகளை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கு குழுவும் அமைப்பு*

யாழ்ப்பாணம், ஏப்.18
வடக்கு மாகாணத்தில் இராணுவம் கையகப்படுத்தியுள்ள நிலங்கள் >> 04

## அரைநாண்கொடிகள் தாலிக்கொடிகளாகின

### தென்மராட்சியில் அடகு வைத்து நூதனமான முறையில் திருட்டு

>> 06

## தமிழர் உரிமையை மீட்க இந்தியா உதவவேண்டும்

### வடக்கு முதலமைச்சர் கோரிக்கை

சென்னை, ஏப். 18
இந்தியாவில் இலங்கைத் தமிழர்களை வைத்து அரசியல் செய்வது ஒன்றும் பெரிய விடயம் அல்ல. இலங்கைத் தமிழர்கள் உரிமையை மீட்டெடுக்க இந்திய நடுவண் >> 04

## காணிகளை விடுவிப்பதற்காக தொடர் அழுத்தம் கொடுப்போம்

### மாவை எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18
பலாலி வானூர்தி தளம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் அமைந்துள்ள ஆயிரத்து 65 ஏக்கர் காணிகள் தவிர்ந்து >> 06




# இலங்கைக்கு நிதி வழங்க கடும் நிபந்தனை விதித்தது அமெ.

கொழும்பு,ஏப்.18
2018 ஆம் ஆண்டுக்கான எஞ்சிய காலப்பகுதிக்கான நிதியை இலங்கைக்கு வழங்குவதற்காக அமெரிக்கா கடும் நிபந்தனைகளை விதித்துள்ளது. அமெரிக்கா காங்கிரஸால் அங்கீகாரம்வழங்கப்பட்டு அமெரிக்க அரசதலைவர்கையொப்பமிட்டுள்ள சட்டவரைவு குறித்தே அமெரிக்கா கடும் நிபந்தனைகளை விதித்துள்ளது.

இலங்கையின் ஜனநாயக திட்டங்களுக்காக அமெரிக்கா 35 மில்லியன் டொலரைவழங்கியுள்ளது. காணாமற்போனோர் குறித்த விவகாரத்துக்குத் தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகளுக்காகவே இந்த நிதி பயன்படுத்தப்படும்.

இதேவேளை, ஒதுக்கீடு செய்யப்பட்டஇந்தநிதியைப் பெறுவதற்காக இலங்கை மனித உரிமைகள் சபையின் தீர்மானத்துக்கு ஏற்ப நம்பகதன்மையுள்ளபொறிமுறையை ஏற்படுத்துவதற்குஇணங்கியுள்ளதுஎன அமெரிக்க இராஜாங்க அமைச்சர் உறுதிசெய்ய வேண்டும் என காங்கிரஸ் நிபந்தனை விதித்துள்ளது.

அமெரிக்க அயலுறவுத் துறை அமைச்சர் அதை உறுதிசெய்து நிதி ஒதுக்கீட்டு குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்றநிபந்தனையும்விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சித்திரவதைகள் குறித்து விசாரணைகள் மேற்கொள்வதற்கும்பொது மக்களின் நிலங்களை விடுவிப்பதற்கும் இணங்கியுள்ளது என அமெரிக்க இராஜாங்க செயலாளர் உறுதி செய்யவேண்டும்.

இலங்கை குறிப்பிட்ட நிதியைப்பெறுவதற்காககாணாமல்போனோர்குறித்தஅலுவலகத்தை அமைக்கவேண்டும். போரின் இறுதித் தருணத்தில் படையினரிடம் சரணடைந்தவர்களின் பெயர் விபரங்களை வெளியிடவேண்டும். படையினரின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் எனவும் காங்கிரஸ் நிபந்தனை விதித்துள்ளது.

இலங்கையின் படையினருக்குஎன 5இலட்சம்டொலரையேஒதுக்கீடுசெய்துள்ள அமெரிக்கா அதனை மனிதாபிமானமற்றும்இயற்கை இடர்களைக்கையாள்வதற்கான பயிற்சிகளுக்கும் கடலோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குமே பயன்படுத்தவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

பாலியல் வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோ கங்களில் ஈடுபட்ட இலங்கையைச் சேர்ந்தஅமைதிப்படையினருக்கு எதிராக இலங்கை அரசு வலுவான நடவடிக்கையை எடுத்தால் மாத்திரமே அமைதிப்படை நடவடிக்கைகளுக்கான நிதியை இலங்கைக்கு வழங்க வேண்டும் எனவும் அமெரிக்ககாங்கிரஸ்நிபந்தனை விதித்துள்ளது. (ற-ரி2)

## காத்தான்குடியில் 10 வீதத்தினர் போதைப் பொருளுக்கு அடிமை

*மருத்துவர் எம்.எஸ்.எம்.ஜாபிர் தெரிவிப்பு*

மட்டக்களப்பு, ஏப்.18
மட்டக்களப்பு காத்தான்குடியில் 10 வீதமானோர் கேரளக்கஞ்சா, ரமடோன்போதைப்பொருள்பாவனைக்கு அடிமையாகியுள்ளனர் என்று காத்தான்குடி ஆதார மருத்துவமனையின்மருத்துவஅத்தியட்சகர்மருத்துவர் எம்.எஸ்.எம்.ஜாபிர் தெரிவித்தார்.

தேசிய போதைப்பொருள்த் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:
போதைப்பாவனையிலிருந்துமீட்பதற்காககாத்தான்குடியில்ஒருநிலையம்உள்ளது. பலபோதைப்பொருள்கள் பாவனையில் இருக்கிறன. சமூகவலைத்தளங்களில் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டமை தொடர்பான செய்திகள் வெளியாகுகின்றன.

போதைப் பொருள் பாவனையில் இருந்து இளைஞர்களைமீட்டெடுக்கவேண்டியது அனைவரதும்கடமை என்றார். (ற)

## சுதாகரனின் பிள்ளைகளை ஏமாற்றிவிட்டார் மைத்திரி

*முன்னாள் எம்.பி. கருணாகரன் குற்றச்சாட்டு*

மட்டக்களப்பு, ஏப்.18
தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரனின் இரண்டு குழந்தைகளும்அரசதலைவரைச்சந்தித்தபோதுசித்திரைப் புதுவருடத்துக்கு முன்பாக தந்தையைப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்வோம் எனக் கூறியிருந்தார். ஆனந்தசுதாகரன்இன்னமும்விடுவிக்கப்படாதநிலையில் அந்தக்குழந்தைகளைஏமாற்றியஒருஅரசதலைவராகவே மைத்திரியை நாங்கள் பார்க்கின்றோம்.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் தெரிவித்தார்.

வாழைச்சேனை கிண்ணையடி மில்லர் விளையாட்டுக் கழகத்தின் சித்திரை புத்தாண்டு விளையாட்டு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

> “மூன்று வருடங்களாக ஆட்சியில் இருக்கும் அரசதலைவர் எந்தவொரு உறுதி மொழியையும் நிறைவேற்றாத அரச தலைவராகவே இருக்கின்றார்.

அவர் தெரிவித்ததாவது,
“மூன்று வருடங்களாக ஆட்சியில் இருக்கும் அரச தலைவர் எந்தவொரு உறுதி மொழியையும்நிறைவேற்றாத அரச தலைவராகவே இருக்கின்றார்.

அரசியல் கைதியான ஆனந்த சுதா கரன் தனது மனைவியின் மரணச் சடங்குக்குச் சென்ற வேளைகுழந்தைகள்கட்டி அணைத்துகதறியதையும், பெண் குழந்தை தகப்பனுடன் சிறைச்சாலைக்குச் செல்வதற்குப் பேருந்தில் ஏறியதையும் நாங்கள் கண்ணுற்றோம். உலகில் வாழும் அனைத்துத் தமிழ் மக்க ளும் கண்ணீர் விட்டு அழும் வேதனையான விடயமாக இந்த சம்பவம் இருந்தது.

ஒட்டுமொத்தமாக இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் சிங்களபெரும்பான்மைக்கட்சிகளைச்சேர்ந்ததலைவர்கள் சிறுபான்மை இன மக்களை இந்த நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து ஏமாற்றிக் கொண்டுவருகின்றார்கள் என்பதை மீண்டும் உணர வேண்டியதாக உள்ளது.

எமதுஉரிமைகள்மறுக்கப்படுமாகஇருந்தால்இந்தநாட்டின் இரண்டாம் தர குடிமக்களாக மதிக்கப்பட்டுக் கொண்டிருந்தோமானால் ஜனநாயக போராட்டம் எந்த வடிவத்தில் உருமாறும்,எதிர்காலசந்ததியினர்இந்தஜனநாயகபோராட்டத்தில் எந்தவிதத்தில் கையில் எடுப்பார்கள் என்று கூட எமக்குத் தெரியாது - என்றார். (ற-ரி5)



## ஆனந்தசுதாகரனின் விடுதலைக்காக மனு

*அரச தலைவரிடம் ஒப்படைப்பதற்காக வடக்குக் கல்வி அமைச்சரிடம் கையளிப்பு*

யாழ்ப்பாணம், ஏப்.18
ஆனந்தசுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு மாகாண அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் இட்ட மூன்று லட்சம் கையொப்பங்கள் அடங்கிய படிவங்களும், அரசதலைவருக்கு சமர்ப்பிப்பதற்கான மனுவும் நேற்று வடக்கு மாகாண பதில் முதலமைச்சரும், வடக்கு மாகாண கல்வி அமைச்சருமான க.சர்வேஸ்வரனிடம் ஆனந்தசுதாகரனின் குழந்தைகள் கையளித்தனர்.

கையெழுத்து சேகரிப்புக்கான ஏற்பாடுகளை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் முன்னெடுத்திருந்தது.

“இந்தக் குழந்தைகளின் தந்தையின் விடுதலைக்காக நாம் முழு முயற்சியுடன் பாடுபடுவோம். இங்கு ஒப்படைக்கப்பட்ட மூன்று இலட்சம் கையெழுத்துகளும் மிகவும் பெறுமதி வாய்ந்தவை. இவை அனைத்தும் வடபுலத்து கல்விச் சமூகத்தால் முன்னெடுக்கப்பட்ட பெரியதொரு முயற்சி. இதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முன்னெடுத்தமை பாராட்டுக்குரியது" என்று மனுவைப் பெற்றுக் கொண்ட பதில் முதலமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சரின் பிரேத்தியேக செயலாளர் ந.அனந்தராஜ் அவர்களும், கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி.சாந்தசீலனும், மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும், வடக்கு மாகாணத்தின் பன்னிரெண்டு வலயக் கல்விப் பணிப்பாளர்களும், வடக்கு மாகாணத்தின் உயர் அதிகாரிகளும், வலயங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும், கோட்டக் கல்விப் பணிப்பாளர்களும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தாய்ச்சங்க உறுப்பினர்களும், பிராந்திய தலைவர், செயலாளர்களும், அதிபர்களும், ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். (ற-ரி5)

## மாடுகள்திருடியகுற்றச்சாட்டு இளைஞருக்கு விளக்கமறியல்

திருகோணமலை, கந்தளாய்ப் பகுதியில் மாடுகளைத் திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபரை இம்மாதம் 20 ஆம் திகதி வரைவிளக்கமறியலில்வைக்குமாறுகந்தளாய்நீதிமன்றநீதிவான்நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

கந்தளாய்ப் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய சந்தேகநபர் புத்தாண்டு தினத்தில் விற்பனை செய்வதற்காக மூன்று மாடுகளை திருடினார் என்று பொலிஸார் தெரிவித்தனர். மாட்டு உரிமையாளரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ற,ரி2)

## நீராடச் சென்ற இளம்பெண் சாவு

கினிகத்தேன, யடிபேரிய பகுதி களனி கங்கையில்நீராடச்சென்ற இளம்பெண் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கண்டியில்இருந்து குடும்பத்துடன் சுற்றுலா சென்ற24வயதுடையபெண்ணொருவரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம்நேற்றுமதியம்இடம் பெற்றது. குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து காணாமல் போன இளம்பெண்ணைத் தேடினர்.

நீரில் மூழ்கிய இடத்திலிருந்து சிறு தூரத்தில் அவரின்சடலம்கண்டுபிடிக்கப்பட்டதுஎன்று தெரிவிக்கப்பட்டது.

அவர்கள்நீராடியஇடத்தில்அபாயகரமானது என்ற அறிவிப்பு பல கையும் பொருத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ற,ரி2)

## கேரளக் கஞ்சா வைத்திருந்த நபருக்கு விளக்கமறியல்

திருகோணமலை, ஏப்.18
திருகோணமலை, தம்பலாகாமம் பகுதியில் 310 கிராம் கேரளக் கஞ்சாவைதன்வசம்வைத்திருந்தமுதியவரை விளக்கமறியலில்வைக்குமாறு நீதிவான் உத்தரவிட் டார். முள்ளிப்பொத்தானைபகுதியைச் சேர்ந்த ஒருவரையே இம்மாதம் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் நேற்று முன்தினம்உத்தரவிட் டார். சந்தேகநபர் 96 ஆம் கட்டைப்பகுதியிலிருந்து 8ஆம்கொலனிக்குமோட்டார்சைக்கிளில்கேரளக்கஞ்சாவைகொண்டு சென்றபோதேகடந்தஞாயிற்றுக்கிழமைகைதுசெய்யப்பட்டார்எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ற,ரி2,40)

## கஞ்சா தோட்டம் முற்றுகை

### பொலிஸ் அதிரடிப் படையினரால் அழிப்பு

புத்தளம், ஏப்.18
ஹம்பேகமுவ, கல்கொட்டுகந்த பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசத்தில் பயிர் செய்யப்பட்டு வந்த கஞ்சா தோட்டம் ஒன்று பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினரால் அழிக்கப்பட்டது.

பொலிஸ் அதிரடிப் படையின் புத்தள முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போதே வனப் பிரதேசத்தில் இரண்டு இடங்களில் கஞ்சா பயிரிடப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அனைத்துகஞ்சாசெடிகளையும்பொலிஸ்சிறப்பு அதிரடிப் படையினர் தீ வைத்து அழித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இதுவரை கைதுசெய்யப்படாதநிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ற-ரி5)

## ரணில் மீதான தீர்மானத்துக்கு முன்னின்றதாலேயே கைதானேன்

### மகிந்த அளுத்கமகே கூறுகிறார்



கொழும்பு, ஏப்.18
**தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவருவதற்கு முன்னணியிலிருந்து செயற்பட்டமைக்காகவே என்னைக் கைது செய்வதற்கான ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.**

இவ்வாறுமகிந்தஆதரவுஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நிதிமோசடிக்குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மகிந்த ஆதரவு ஒன்றிணைந்த எதிரணியின்நாடாளுமன்றஉறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கொழும்பு கோட்டை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போதே நீதிவான் லங்கா ஜயரத்ன இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

பிணைநிபந்தனைகளைஏற்றுக்கொள்ளாமையால் நேற்றுமுன்தினம் விளக்கமறியலில்வைக்கப்பட்டிருந்தார்.

2014ஆம் ஆண்டு விளையாட்டுத்துறை அமைச்சராக இவர் பதவி வகித்த காலத்தில் கரம் போர்டுகளை கொள்வனவு செய்து, 39 மில்லியன் நிதியை அரசுக்கு நட்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில் இவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதற்காக முன்னாள் அமைச்சர் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முன்னிலையான போதே நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அவரதுவெளிநாட்டுபயணங்களுக்கும் நீதிவான் தடைவிதித்ததுடன், அவரது வெளிநாட்டு கடவுச்சீட்டை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். நீதிமன்ற பிணை நிபந்தனைகளை நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே ஒப்புக்கொள்ள மறுத்ததால், அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

நேற்றுபிணையில்வெளியே வந்ததையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தார்.

அவர்தெரிவித்ததாவது:
பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவில் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் என்னைக் கைது செய்வதற்கான ஆலோசனையை ஐக்கியதேசியக்கட்சியிலுள்ளஓர் அமைச்சரே தொலைபேசியின் ஊடாக வழங்கியிருந்தார் - என்றார். (ற-ரி5)

## மீண்டும் நான் பிறந்ததை போன்று உணர்கின்றேன்

### வடக்கு ஆளுநர் நெகிழ்ச்சி

யாழ்ப்பாணம், ஏப்.18
வடக்கு மாகாணத்துக்கு மீண்டும் ஆளுநராக நியமனம் பெற்றுவந்தமை மீண்டும் பிறந்ததைப் போல உணர்கின்றேன் என்று வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநராக மீளவும் நியமிக்கப்பட்டுள்ள றெஜினோல்ட் கூரே நேற்றுத் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

மாகாண ஆளுநர் மாற்றத்தின் போது வடக்கு மாகாண ஆளுநராக இருந்த ரெஜினொல்ட் குரேயும் அரச தலைவரால்இடமாற்றப்பட்டிருந்தார். எனினும்பலதரப்பினர்களும்



அரசதலைவரிடம்கோரிக்கைவிடுதமைக்குஅமையஅவர் மீண்டும் வடக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்ற குரேக்கு பலாலியில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக அமைந்துள்ள மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு வந்த அவருக்கு மாலைகள் அணிவித்தும் பொன்னாடைகள் போர்த்தியும் வரவேற்பு வழங்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்துமீளவும்வடக்குமாகாண ஆளுநருக்கான தன்னுடைய கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றார். அதன்பின்னர்ஊடகங்களுக்குக்கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
பெரியளவிலான எதிர்பார்ப்புடன்வடக்குமக்களின்தேவைகளைநிறைவேற்றவந்தநான்திடீர்என்றுமத்தியமாகாண ஆளுநராக மாற்றம் பெற்று செல்வது எனக்கு மிகவும் மன வேதனையை அளித்திருந்தது.

அந்த துக்கத்துடன் பணியை அங்கு பொறுப்பேற்றுக் கொண்டபோதும் வட பகுதி மக்களின் அழுத்தமான கோரிக்கைஎன்னைமீண்டும்வடக்குக்குஅழைத்துள்ளது. நான் விரும்பும் வடபகுதி மக்களுடன் கடமையாற்ற ஆளுநராக நியமித்தமைக்கு அரச தலைவருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோன்று என்னை மீண்டும் அழைப்பதற்காகமுயற்சித்தஅனைத்துஉள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

மீண்டும் நான் பிறந்து வந்ததாக இந்தத் தருணத்தை உணர்ந்து கொள்கின்றேன். கடந்த நாள்களை விட இன்னும்அதிகஉற்சாகத்துடன்வடக்குமக்களின்அபிவிருத்திக்காக எனது பணிகளை ஆற்றுவேன். என்றார்.

அதன்பின்னர் ஆளுநர் நல்லூர் கந்தன் ஆலயத்திற்கு சென்றுவழிபாடுகளில்ஈடுபட்டார். யாழ். பச்சைப்பள்ளிவாசலுக்கு சென்று ஆசிபெற்றுக் கொண்டு, யாழ் ஆரியகுளம் சந்தியில்அமைந்துள்ளநாகவிகாரைக்குசென்று ஆசிபெற்றுக் கொண்டார். இறுதியாக யாழ். மறைமாவட்ட ஆயர் ஞானப்பிரகாசம் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடி ஆசிகளை பெற்றுக்கொண்டார். (ற-8)



## கொளுத்தும் வெயிலால் மண் பானைக்கு மவுசு!

### சூடு பிடிக்கின்றது விற்பனை

யாழ்ப்பாணம், ஏப்.18
சித்திரை வெயில் கொளுத்தும் நிலையில் அதைச்சமாளிக்கமக்கள்மண்பானைகளை நாடத் தொடங்கியுள்ளனர். குழாய் பொருத்தப்பட்டுநவீன அவதாரத்துடன் மண் பானைகளும் சந்தைகளுக்கு வந்துள்ளன. தென்மராட்சியில் பானை விற்பனை சூடு பிடித்துள்ளதுஎன்றுதெரிவிக்கப்படுகின்றது.

வெப்பமான காலங்களில் குளிர்ச்சியான குடிதண்ணீரைப் பெற முன்னோர்கள் மண் பானைகளையே பயன்படுத்தினர். மண் பானைகளில் சேமிக்கப்படும் குடி தண்ணீர் குளிர்ச்சி நிறைந்து காணப்படும். காலப்போக்கில் இந்த வழக்கம் மெல்ல மெல்ல மறைந்தது. பிளாஸ்ரிக் குடங்களின் வருகையுடன்மண்பானைகளின்பாவனை இல்லாமல் போனது என்றே கூறலாம். போத்தல் தண்ணீர் விற்பனைக்கு வந்ததும் இப்படியான இயற்கையான குளிர்விக்கும் முறைஅனைவருக்கும்மறந்துபோனது.

தற்போது கடும் வெப்பமான காலநிலை நிலவுகின்றது. மக்கள் வெயிலைத் தாங்க முடியாது பழைய முறைகளை மீண்டும் கையிலெடுக்கத் தொடங்கியுள்ளனர். மண் பானைகளைத்தேடிக்கொள்வனவுசெய்யவும் தொடங்கியுள்ளனர்.விற்பனைஅதிகரித்துள்ளதால் உள்ளூர் முயற்சியாளர்களும் உற்சாகமடைந்துள்ளனர்.

"வழக்கமாகபொங்கல்பண்டிகையின்போதே மண் பானை விற்பனை நடக்கும். அதனால் தைமாதத்திலேயேஅதிகபானைகள்உற்பத்தி செய்வோம். தற்போது கடும் வெப்பமான காலநிலை காணப்படுகின்றது. மக்கள் மண் பானைகளை நாடுகின்றனர். அதனால்மண் பானைகளைஅதிகமாகதயார்செய்கின்றோம். குழாய் பொருத்தப்பட்ட நவீனப்படுத்தப்பட்ட மண் பானைகளையும் உற்பத்தி செய்கின்றோம். அவற்றுக்குத் தனி மவுசு இருக்கின்றது." என்று மண் பானை தயாரிப்பவர்கள் கூறினார்கள். (ற-21)

## புதிய பணிப்பாளர் நியமனம்



கொழும்பு, ஏப்.18
இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு புதிய பணிப்பாளர் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

புதியபணிப்பாளர்சபையின் தலைவராகப் பேராசிரியர் ரொஹான் சமராஜீவநியமிக்கப்பட்டுள்ளார். பேராசிரியர் ரொஹான் சமராஜீவ தேசிய தொலைத்தொடர்பு ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர்நாயகமாக இதற்கு முன்னர் பணியாற்றியுள்ளார். (ற,ரி2)

## கற்றல் நடவடிக்கை 23 ஆரம்பம்

கிளிநொச்சி, ஏப்.18
கிளிநொச்சி அறிவியல் நகரில் உள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய, தொழில்நுட்பபீடங்களில் கற்றல் நடவடிக்கைகள் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகும் என்று பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

விடுதி வசதி பெற்ற மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் 21, 22ஆம்திகதிகளில்விடுதிக்குத்திரும்பமுடியும்என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-21)

## கல்வி வலயங்களை அமைக்க கல்வி அமைச்சரிடம் கோரிக்கை

திருகோணமலை, ஏப்.18
திருகோணமலை மாவட்டத்தில் மேலும் இரண்டு கல்வி வலயங்களை உருவாக்க நாடாளுமன்றஉறுப்பினர்இம்ரான்மகரூப், கல்விஅமைச்சரிடம்கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் ஐந்து கல்வி வலயங்களுக்குப் புறம்பாக மேலும் இரண்டு கல்வி வலயங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்றஉறுப்பினர்இம்ரான்மகரூப் பால், கல்வி அமைச்சர் அகிரவிராஜ்காரியவசத்திடம் எழுத்து மூலமான கோரிக்கை ஒன்று விடுக்கப்பட்டது. கிண்ணியா, கந்தளாய், திருகோணமலை வலயக் கல்விப் பிரிவில் உள்ள சில பகுதிகளைப் பிரித்து, தம்பலகாம கல்வி வலயம்.

அதேபோன்று திருகோணமலை மற்றும் திருகோணமலைவடக்குகல்விவலயத்தில் உள்ள சில பகுதிகளைப் பிரித்து குச்சவெளி கல்விவலயம்எனஇருகல்விவலயங்களை உருவாக்கநடவடிக்கைஎடுக்குமாறுஅந்தக் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இதனை ஆராய்ந்த அமைச்சர், நடவடிக்கைஎடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார். (ற,ரி2,40)

## நிர்வாகிகள் தெரிவு

அளவெட்டி, ஏப்.18

யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் சங்க தலைவர் க.சுதாகரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு நடைபெற்றது. அதன்படி தலைவர் க.சுதாகரன், உபதலைவர் சு.சிறீகாந், செயலாளர் பி.சாந்தினி, பொருளாளர் சு.சிவலிங்கமும் நிர்வாக உறுப்பினர்களாக வி.நிர்மலன், இ.மகாலிங்கம், இ.கஜன், நா.பார்த்தீபன், கணக்காய்வாளர் பொ. யேசுராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (63)

### சாவகச்சேரி எல்லைக்குட்பட்ட கிராமங்களில்

# வடிகாலமைப்புகள் சீரின்மையால் தொற்று நோய்கள் ஏற்படும் அச்சம்

தென்மராட்சி, ஏப். 18

**சாவகச்சேரி பிரதேச சபையின் பெரும்பாலான கிராமங்களில் குளங்கள் இருந்தும் முறையான வடிகால் அமைப்புகள் இல்லாத காரணத்தால் மழைகாலங்களில் மழைவெள்ளம் பல இடங்களிலும் தேங்கி நின்று நோய் பரவ ஏதுவாகின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.**

இந்த நிலையைத் தடுக்க நீர்ப்பாசனத் திணைக்களம், பொறியியல் திணைக்களம், விவசாயத் திணைக்களம் மற்றும் மத்திய மாகாண அரசுகள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் கிராமங்களில் உள்ள குளங்களைப் சீரமைப்பதோடு தொடர் வடிகால்களை அமைத்து, மழை நீர் தேங்காதவாறு செய்ய வேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி பிரதேச சபையின் கன்னி அமர்வில் உறுப்பினர் வை. விக்னேஸ் வரன் முன்மொழிந்தார்.

இந்த முன்மொழிவை சபை ஏற்று அதனை பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்று மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுடன் நோய் தொற்றுக்களை தடுக்கவும் வழிசெய்ய வேண்டும் என்றும் முன்மொழிவில் குறிப்பிட்டார்.

பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கொடிகாமம் நகரில் வடிகால்கள், பெருந் தெருக்கள் அதிகார சபையால் அமைக்கப்பட்டுள்ள போதிலும், முறையான கட்டுமானம் மேற்கொள்ளாததால் மழை வெள்ளம் நகரின் வெளிப்பகுதியில் உள்ள குடியிருப்பு களுக்குள் புகுந்து வெள்ளக்காடாக காணப்படுகிறது.

அதனால் பல குடும்பங்கள் குடியிருப்புகளை விட்டு வெளியேறும் நிலை வருடாந்தம் ஏற்படுகிறது. அத்துடன் மிருசுவிலில் சில பகுதிகள் உசன், மந்துவில், இயற்றாலை, சரசாலை, மட்டுவில், கைதடி, நுணாவில், நாவற்குளி, போன்ற இடங்களிலும் குடியிருப்புகளும் விவசாய நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கி விவசாயிகளுக்கும் குடியிருப்பாளர்களுக்கும் சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன.

எமது சபையானது மக்களின் வாழ்வாதாரத்துக்கு முன்னுரிமை வழங்க விரும்புவதால் அவர்கள் நோய்நொடி இல்லாமல் வாழ்வதற்கு நாம் அனைத்துத் திணைக்களம், மாகாண மற்றும் மத்திய அரசுகளின் ஒத்துழைப்பைப் பெற இந்த முன்மொழிவை தீர்மானமாக மாற்றி அதனை பிரதேச மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் அங்கீகாரம் பெற்று மத்திய மாகாண அரசுகளிடம் நிதி உதவி பெற்று செயற்படுத்த வேண்டும் என்றார்.

உறுப்பினரின் கருத்துகளைச் சபையினர் ஏற்றுக்கொண்டனர். அதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார். (9)

---

## ராணுவத்தின்...

தொடர்பில் அனைத்து மாவட்டச் செயலர்களுடன் அரச தலைவரின் செயலாளர் சந்திப்பு நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பு நேற்று அரச தலைவர் மாளிகையில் நடந்துள்ளது.

இந்தச் சந்திப்பில் மாவட்டச் செயலர்கள், இராணுவ அதிகாரிகள், வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர்கள், வடக்கு மாகாண முதலமைச்சர் அமைச்சின் செயலாளர், மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இராணுவத்தால் இதுவரை விடுவிக்கப்படாத நிலங்கள் மற்றும், இராணுவம் விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவித்த நிலங்கள் தொடர்பில் மாவட்ட ரீதியாக ஆராயப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வலி.வடக்கு மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் சில பகுதிகளை விடுவிப்பதற்காக படைநிலைகளை இடமாற்றுவதற்கு மேலும் 800 மில்லியன் ரூபா நிதி தேவை என்றும், அடுத்த அமைச்சரவையில் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளத்தில் 26 வீடுகளுடன் கூடிய காணிகளை விடுவிக்க கடற்படை இணக்கம் தெரிவித்திருந்தபோதும், மாற்று ஏற்பாட்டுக்கான நிதி கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டதுடன், இந்த வீடுகளுக்குப் பதிலாக உரிமையாளர்களுக்கு ஏற்கனவே கடற்படையினர் அமைத்து வழங்கிய வீடுகளை மீளப் பெற வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டுவாகல் கடற்படை முகாம் அமைந்துள்ள நிலத்தில் 200 ஏக்கரை கடற்படையினருக்கு வழங்க உரிமையாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும், கேப்பாபிலவில் இருவர் வழங்க விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும் படைத்தரப்பால் சுட்டிக்காட்டப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் படைத் தலைமையகம் அமைந்துள்ள 75 ஏக்கர் நிலத்தை விடுவிக்க முடியாது என்றும் படைத்தரப்பு தெரிவித்தது. மக்களுக்குச் சொந்தமான காணிகளைச் சரியாக இனங்கண்டு அவற்றை விடுவிப்பதற்கான நடைமுறைகளை ஆராய்ந்து ஒரு மாதத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்க குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்களுக்குச் சொந்தமான உறுதிக் காணிகளில் இன்னமும் 4 ஆயிரத்து 599 ஏக்கர் நிலம் படையினர் வசமுள்ளது. அவற்றில் 4 ஆயிரத்து 201 ஏக்கர் நிலம் வலி.வடக்கில் உள்ளது. எஞ்சிய 398 ஏக்கர் நிலம் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் காணிகளில் 2 ஆயிரத்து 900 ஏக்கர் நிலம் இராணுவத்தினரிடம் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-105)

## தமிழர்...

அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தமிழகத்தில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

தென்காசி, குற்றாலம் பகுதிகளில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்ற முதல்வர், நெல்லை மாவட்டத்துக்கு நேற்றுச் சென்றார். அங்கு நெல்லையப்பர் கோவில் அர்ச்சகர் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பாளையங்கோட்டையில் உள்ள அரச சித்த மருத்துவக் கல்லூரிக்குச் சென்ற முதல்வர் விக்கினேஸ்வரனுக்கு மாணவிகள் வரவேற்பளித்தனர். பின்பு சித்தமருத்துவ கல்லூரியில் உள்ள அகத்தியர் கோவிலில் நடைபெற்ற வழிபாடுகளிலும் அவர் கலந்து கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களுக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் கருத்துத் தெரிவித்தார்.

"இலங்கைத் தமிழர்கள் உரிமையை மீட்டெடுக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியாவில் இலங்கை தமிழர்களை வைத்து அரசியல் செய்வது ஒன்றும் பெரிய விடயம் அல்ல. தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளின் தற்போதைய நிலை தொடர்பில் இந்திய அரசு ஆய்வு செய்ய வேண்டும். அவர்கள் வாழ்வு மேம்பட இன்னும் அதிகமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய அரசு பல நன்மைகள் செய்தாலும் இன்னும் கூடுதல் உதவிகள் செய்யக் கூடிய வாய்ப்பு இந்திய அரசுக்கு உள்ளது." என்று அவர் தெரிவித்தார். (ற-5)

## அரசியல்...

நெடுநாள்கள் சிறையில் வாடும் அரசியல்கைதிகளை ஏதாவது ஒரு பொறிமுறையில் உடனடியாக விடுவிப்பதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கைக்கான பிரிட்டன் தூதரக அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளது ஜனநாயகப் போராளிகள் கட்சி.

இலங்கைக்கான பிரிட்டன் தூதரக அதிகாரிகளுக்கும் ஜனநாயக போராளிகள் கட்சியினருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் திருகோணமலையில் நடந்துள்ளது. அந்தச் சந்திப்புத் தொடர்பில் அந்தக் கட்சியினர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது,

போர் ஓய்வுக்குக்குப் பின்னர் விடுதலைப் புலிகளதும் அதன் போராளிகளதும் தற்போதைய அரசியல் பொருளாதாரச் செயற்பாடுகள் தொடர்பிலும் தாயக அரசியல் பரப்பில் போராளிகளது பங்குபற்றுதல், அதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

தொடர்ச்சியாக இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் பேணப்பட வேண்டுமாயின் அதீத இராணுவப் பிரசன்னம் அகற்றப்படுவதோடு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் அக்கறையுடனும் பொறுப்புடனும் தீர்வுகளைப் பெற்றுத்தரவல்ல ஒரு பொறிமுறைக்கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும். அதனோடு தமிழர்களுக்கான ஓர் நியாயப்பாடான தீர்வு இலங்கையில் எட்டப்படும்வரை தமிழர்கள் பிரிட்டனில் இருந்து திருப்பி அனுப்பப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று எம்மால் கோரப்பட்டது.

இலங்கையில் மிக மோசமான போர்க்காலப்பகுதியில் புலம்பெயர்ந்த தமிழ் மக்களை அன்புடன் அரவணைத்துப் பாதுகாத்த பிரிட்டன் அரசுக்கும் அதன் மக்களுக்கும் ஜனநாயக போராளிகள் கட்சியின் சார்பில் நன்றியும் வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டது. என்றுள்ளது. (ற-21,ரி3)

## வெளி மாவட்ட...

அவற்றின் பெறுமதி சுமார் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபா எனக் கூறப்படுகின்றது.

புத்தளம் உடப்பு பகுதியைச் சேர்ந்த முல்லைத்தம்பி என்பவர் வடமராட்சி கிழக்கு ஆழியவளைக் கடற்பரப்பில் கரைவலை தொழில்செய்து வருகிறார். அங்குள்ள மீனவர் ஒருவரின் அனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்தியே அவர் தொழிலில் ஈடுபடுகிறார்.

நேற்றுக் கரைவலைத் தொழிலில் ஈடுபட்ட போதே அவருடைய வலையில் பெருமளவான மீன்கள் சிக்கின என்று தெரிவிக்கப்பட்டது. அந்த மீன்கள் பாரை இனத்தைச் சேர்த்தவை எனவும் ஒரு மீன் சுமார் 4 முதல் 5 கிலோகிராம் எடை கொண்டவை என்றும் கூறப்பட்டது.

மீனவரிடம் இருந்து அனைத்து மீன்களும் நேற்றே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. உடனடியாக அவருக்கு 30 இலட்சம் ரூபா கிடைத்தது என்றும், எஞ்சிய தொகை பின்னர் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது என்றும் கூற்ப்பட்டது. (ற-21,173,37)

## தமிழர்...

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உபதவிசாளர் தெரிவுக்கான அமர்வு நேற்று பி.ப. 2.30 மணியளவில் சபையின் மாநாட்டு மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம் பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 11 உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 5 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலா 4 உறுப்பினர்களும், சுயேச்சைக்குழு, ஈ.பி.டி.பி.யின் தலா 2 உறுப்பினர்களும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலா ஒவ்வொரு உறுப்பினருமாக சபையின் 30 உறுப்பினர்களும் அமர்வில் கலந்து கொண்டனர்.

**தவிசாளர் தெரிவு**

தவிசாளர் தெரிவுக்குப் பெயர்களை முன்மொழியுமாறு ஆணையாளர் கோரினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் து.நடராசசிங்கத்தை அதே கட்சியைச் சேர்ந்த ப.சத்தியநாதன் முன்மொழிய அந்தக் கட்சியின் த.யோகராஜா வழிமொழிந்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் த.சிவராசாவை, அந்தக் கட்சியின் வி.சசிதரன் முன்மொழிய, அதே கட்சியைச் சேர்ந்த ஆ.அருளானந்தம் வழிமொழிந்தார். பகிரங்க வாக்கெடுப்பை 28 உறுப்பினர்கள் கோரினர்.

கூட்டமைப்பின் சார்பில் முன்மொழியப்பட்டது. நடராசசிங்கத்துக்கு 14 வாக்குகள் கிடைக்கப் பெற்றது. கூட்டமைப்பின் 11 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினரும், சுயேச்சைக் குழுவின் 2 உறுப்பினர்களும் ஆதரவளித்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் முன்நிறுத்தப்பட்ட த.சிவாராசாவுக்கு 13 வாக்குகள் கிடைக்கப் பெற்றது. கூட்டணியின் 4 உறுப்பினர்களும், பொதுமக்கள் முன்னணியின் ஒரு உறுப்பினரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 3 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 3 உறுப்பினர்களும், ஈ.பி.டி.பியின் 2 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

கூட்டமைப்பின் நடராசசிங்கம் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். தவிசாளர் தெரிவின்போது, சுதந்திரக் கட்சியின் 2 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஒரு உறுப்பினரும் நடுநிலமை வகித்தனர்.

உபதவிசாளர் தெரிவின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிர்த்துப் போட்டியிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் வெற்றி பெற்றார். (ற-5,110)

# நவீன இலத்திரனியல் உலகத்தில் கல்வியை எதிர்கொள்வது மிகப்பெரிய சவால்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஏப் 18**
**இன்றையநவீனஇலத்திரனியல் உலகத்தில் கல்வியை எதிர்கொள்ளல் என்பது மிகப்பெரியசவாலாகும்என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**



புலோலி அபிவிருத்தி நிதியத்தின் கல்விக்குக் கைகொடுப்போம் என்ற நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தொலைக்காட்சிகளின்நவீனத்துவதொடர்வரவுகள், கணினிகளினூடான ஈர்ப்பு. இணையத்தளங்கள்ஊடானஆர்வம், முகநூல்களுக்கூடான மாணவர்களின் செயற்பாடுஎன்பனபிள்ளைகளின்கற்றல்நடவடிக்கைகளில் பெரும் தாக்கத்தை செலுத்துகின்றது. கையடக்கத்தொலைபேசிகள், கணினிகள் என்பன மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்வகையில்உறிஞ்சிஎடுக்கின்றது. இந்த சூழ்நிலையில் மாணவர்கள் பாடசாலைக் கல்வி, பாடசாலையின்உடல்உளம்சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுதல் பெருமளவில் தடுக்கப்படுகிறது. இவ்வாறான சூழலில் ஏழைமாணவர்களின்நலன்கருதிபுலோலி அபிவிருத்தி நிதியம் எடுத்திருக்கும் முயற்சியை உளமார பாராட்டுகிறேன்- என்றார்.
வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் சுரேஸ்குமாரின்நெறிப்படுத்தலில்புலோலி அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் மருத்துவக் கலாநிதி முல்லை பரமேஸ்வரன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.
இந்த நிகநிகழ்வுக்கு மாகாணசபை உறுப்பினர் கணபதிப்பிள்ளை தர்மலிங்கம், புலோலி அபிவிருத்தி இணையத்தின் இணைப்பாளர் தம்பையா சிவகுருநாதன், வடமராட்சிதெற்குமேற்குபிரதேசசபையின் தவிசாளர்த. ஐங்கரன், பண்டிதர்பரந்தாமன் உட்பட அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## சைவப் புலவர் தேர்வுகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம். ஏப்18
அகில இலங்கை சைவப் புலவர்சங்கத்தின்சைவப் புலவர் இளஞ் சைவப் புலவர்தேர்வுக்கானபரீட்சைகள் நாளை வியாழக் கிழமை தொடக்கம் 22 ஆம் திகதி வரை நடைபெறுமென சங்கச் செயலாளர் எஸ். ரீ. குமரன் அறிவித்துள்ளார்.
பரீட்சைகள்யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை , கொழும்பு லண்டன் ஆகிய இடங்களில் நடாத்தப்படுமென பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.
நாளை சாத்திரம் 20 ஆம் திகதி இலக்கணம் 21ஆம் திகதி வரலாறு மற்றும் இலக்கியம் 22 ஆம் திகதி உரைநடை ஆகிய பாடங்களுக்குபரீட்சைகள்நடாத்தப்படுமெனவும் அறிவித்துள்ளார்.
பரீட்சைகள்யாழ்ப்பாணத்தில் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்திலும் மட்டக்களப்பில் ஆனைப்பந்திபெண்கள்வித்தியாலயத்திலும் கொழும்பில் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலும் திருகோணமலையில் இராமகிருஷ்ண மிசன் கோணேஸ்வரா இந்துக் கல்லூரியிலும் லண்டனில் மனோபாக் சைவ முன்னேற்ற சங்க மண்டபத்திலும்நடைபெறவுள்ளதெனவும் இம்முறை பரீட்சையில் 113 பேர் இளஞ் சைவப் புலவர் பரீட்சைக்கும் 82 பேர் சைவப் புலவர் பரீட்சைக்கும் தோற்றவுள்ளனர் எனவும் அறிவித்துள்ளார். (9)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 18
கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம்இன்றுபுதன்கிழமை ஆரம்பமாகிதொடர்ந்து12 தினங்கள் இடம்பெறவுள்ளது.
எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சித்திரை பூரண தினத்தில் திரு வூஞ்சலுடன் உற்சவம் நிறைவு பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (114)

★★★★

யாழ்ப்பாணம்.மார்ச்.18
அச்சுவேலி வடக்கு (சரசாளி) அருள்மிகு சித்திர வேலாயுதர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வியாழக் கிழமைகாலை9மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் 29 ஆம் திகதி தீர்தோற்சவமும் இடம்பெறும்என அறிவிக்கப்பட்டுள்ளது.

## விண்ணப்பங்கள்கோரல்

யாழ்ப்பாணம், ஏப்.18
வடக்குமாகாணபண்பாட்டலுவல்கள்திணைக்களத்தால் "சிறந்த நூலுக்கான பரிசுப்போட்டி -2017" வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள"கலைஇலக்கியநாடகமன்றங்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டி", "முதலமைச்சர் விருது-2018", "இளம் கலைஞர் ஊக்குவிப்புப் பரிசு-2018"என்பவற்றிற்காகவிண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன.
இவற்றுக்கான முடிவுத் திகதி எதிர்வரும் 20.04.2018 ஆகும். இவற்றிற்கானவிண்ணப்பங்களினையும்மேலதிகவிவரங்களையும்கரவெட்டிப்பிரதேசசெலககலாசார உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளலாம் என பிரதேச செயலாளர் :ஈ. தயாரூபன் அறிவித்துள்ளார். (21)

இந்த ஆண்டு காலபோக நெற்செய்கைக்காக

## ஐயாயிரம் புசல் விதை நெல் கொள்வனவு

யாழ்ப்பாணம்ஏப்.18
யாழ். குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் சீக்கோ இந்த ஆண்டு காலபோக நெற்செய்கைக்காக ஐயாயிரம் புசல்விதை நெல்லை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தியுள்ளது.
இந்த விதை நெல் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளர் ரி. ரவிமயூரன் தெரிவித்தார்.
கடந்த 2017ஆம் ஆண்டு காலபோகத்தின் போதும் 5 ஆயிரம் புசல் விதை நெல் கொள்வனவு செய்யப்பட்டு செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டன.
இந்த ஆண்டு காலபோகத்திற்கும் இதே அளவிலான விதை நெல் பெறப்பட்டு அவை முளை திறன் உள்ளதா என ஆராய்ச்சிமேற்கொள்ளப்பட்டுஉறுதிசெய்யப்பட்ட பின்னரேசெய்கையாளர்களுக்குவிநியோகிக்கப்படும்.
அதேசமயம் விதை நெல் உள்ள விவசாயிகள் தமது நெல்லை சீக்கோவில் உள்ள நெல் தூற்றும் இயந்திரத்தின்ஊடாகஅதைதூற்றிசுத்தப்படுத்திக்கொள்ளமுடியும் எனவும் அவர் தெரிவித்தார். (17)

## ஆண்டு விழாவும் நினைவு தினமும்

யாழ்ப்பாணம்,ஏப்18
தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் 72 ஆவது ஆண்டு விழாவும் முன்னாள்தலைவர்சிவஸ்ரீ. சிவ. கணேசலிங்கக்குருக்களின் 11ஆவது நினைவு தினமும் தெல்லிப்பழை காசிவிநாயர் ஆலய சிவகடாஷக் குருக்கள் இசைஅரங்கில் தலைவர்சிவஸ்ரீசு. தியாகராஜக்குருக்கள் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.
இந்தநிகழ்வுக்குமுதன்மைவிருந்தினராக சின்மயாமிஷன்சுவாமிசிதாகாஷானந்த கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி மதிப்பளித்தார்.











தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் கல்லுண்டாய் வெளியிலுள்ள திண்மக் கழிவுகள் தரம்பிரிக்கும் இடம் மற்றும் காக்கைதீவிலுள்ள திண்மக் கழிவுகள் மீள்சுழற்சி நடைபெறும் இடம் ஆகியவற்றைப் பார்வையிட்டனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் யாழ்ப்பாண மாநகர உறுப்பினருமான வி. மணிவண்ணன் தலைமையிலான இந்தக் குழுவினருடன் மாநகர ஆணையாளர் ஜெயசீலன் உள்ளிட்ட மாநகர சபை அதிகாரிகள் சிலரும் பங்குபற்றியிருந்தனர். (21)

## ஆட்சிக்கான...

வுகள் இன்றுடன் முடிவுக்கு வருகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் சபைகளின் தவிசாளர் தெரிவுகள் இன்று இடம்பெறவுள்ளது.

பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றது. வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களில் 4 உள்ளூராட்சி மன்றங்கள் தவிர்ந்த ஏனையவற்றில் தொங்கு ஆட்சியே அமைந்தது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் தொங்கு ஆட்சி அமைந்த சபைகளில் தவிசாளர் தெரிவு கடந்த 26ஆம் திகதி ஆரம்பமானது. முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச சபைகளின் தவிசாளர் தெரிவு இன்று இடம்பெறவுள்ளது. இன்றுடன் தவிசாளர் தெரிவு நடவடிக்கைகள் நிறைவுக்கு வருகின்றன.

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் அமர்வு காலை 10மணிக்கும், துணுக்காய் பிரதேச சபையின் அமர்வு பி.ப. 2.30 மணிக்கும் இடம்பெறவுள்ளது. (ற-5)

## கூட்டணிக்கு...

அரசுக் கட்சியின் பொதுச் செயலர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கொள்கையில்லை. சனநாயகத் தன்மை இல்லை. சர்வாதிகாரம் காணப்படுகின்றது. எந்த விதமான நிபந்தனையும் இல்லாமல் அரசுடன் சரணாகதி அரசியல் நடத்துகின்றது. மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கவில்லை. இவ்வாறு அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களுடன் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தமிழ்த் தேசிய விடுதலை கூட்டமைப்பை ஏற்படுத்தி தமிழர் விடுதலை கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தில் ஐந்து கட்சிகள் இணைந்து ஒப்பந்தத்தின் அடிப்படையில் போட்டியிட்டோம்.

உள்ளூராட்சி மன்றங்களில் எவருக்கும் ஆதரவு வழங்குவதில்லை எனும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு மாறாக வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எவ். நடந்து கொண்டது அரசியல் அநாகரிகம்.

கொள்கையில்லாமல் கூட்டமைப்பு கூட்டு வைக்கிறது என்று குற்றம்சுமத்தி விட்டு அதே வேலையை எம்மால் செய்ய முடியுமா?. பதவி பெறுவது தான் முக்கியம் என்றால் எதற்காக இந்த கூட்டில் நாம் தொடர வேண்டும்.

கொள்கையில்லாத தமிழ் தேசிய நீக்கத்தை ஏற்படுத்தும் நோக்கிலான கூட்டில் நாம் தொடர விரும்பவில்லை. வவுனியாவில் பொது எதிரியாகிய தேசிய கட்சிகளுடன் கை கோர்த்தமையை வன்மையாக கண்டிக்கின்றோம்.

தமிழ்த் தேசியக் விடுதலைப் போக்கை கொள்கையற்ற பதவி ஒரு போதும் சமப்படுத்தப் போவது இல்லை. பதவி பெறுவது விடுதலை அரசியலுக்கு அறமும் இல்லை.

இன அழிப்பை ஏற்படுத்திய தேசிய கட்சிகளுடனும் காட்டிக் கொடுத்து கூட்டிக் கொடுத்த தேச விரோத ஈ.பி.டி.பி., கருணா குழு போன்றவற்றுடன் வாக்களித்த மக்களின் விருப்புக்கு மாறாக ஆட்சி அமைத்த தமிழத் தேசியக் கூட்டமைப்பின் அநாகரிகப் பிற்போக்கு தனத்தை நாமும் பின் பற்றுவது அதை விட அசிங்கமாகும்.

தமிழ்த் தேசியத்துக்கு மாறானவர்களுடன் இணைந்து பதவி இலாபம் தேடியதால் இந்தக் கொள்ளையற்ற கூட்டில் தொடர முடியாது என்று நாம் தீர்மானித்து கூட்டணியில் இருந்து இன்று முதல் உத்தியோகபூர்வமாக வெளியேறுகின்றோம்.

அரசியலில் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆதாய சூதாடியாக இருக்க விரும்பவில்லை என்பதில் திடமான கொள்கையில் பயணிப்பவர்கள் நாம். இவ்வாறான பதவி, சுகபோகங்களுடன் கூட்டிணைந்தமைக்காக மக்களிடம் மன்னிப்புக் கோருகின்றோம். காலம் இவர்களுக்கு தகுந்த பதில் வழங்கும் என்பதில் எமக்கு மாற்றுக் கருத்து இல்லை என்றுள்ளது. (ற-5.56)

## சபை...

டிறஞ்சன் இது தொடர்பில் கடும் எச்சரிக்கை விடுத்ததும் அவர்கள் அமைதியாகினர்.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் தெரிவுக்கான அமர்வு, சபை மண்டபத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

அமர்வு ஆரம்பித்தவுடன் பார்வையாளர்களாக அதிகமான மக்கள் பிரதிநிதிகள் மண்டபத்துக்குள்ளே வந்திருந்தனர். அனைவருக்கும் இருக்கை போதுமானதாக இருக்கவில்லை.

"நீங்களாக உணர்ந்து வெளியில் சென்றால் நல்லதாக இருக்கும்" என்று உள்ளூராட்சி ஆணையாளர் பார்வையாளர்களாக வந்த மக்கள்பிரதிநிதிகளான கட்சியின் முக்கியஸ்தர்களிடம் கூறினார். ஆனால் யாரும் வெளியில் செல்லவில்லை. சிறிது நேரத்தில் அமர்வு ஆரம்பமானது.

அமர்வு ஆரம்பித்த பின்னர் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் பிரதேச சபை உறுப்பினர்களிடம் சைகைகள் மூலம் பேச்சு நடத்திக் கொண்டு இருந்தனர். இதனை அவதானித்த உள்ளூராட்சி ஆணையாளர், அமர்வுக்கு வந்த பின்னர் இவ்வாறு செயற்படுவது நடைமுறையில் இல்லாத விடயம். இதனால் நான் சபை அமர்வை நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்று எச்சரித்தார். சபை அமைதியாகியது. அமர்வு தொடர்ந்தது.

இந்த அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், காதர் மஸ்தான், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், மாகாணசபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ஜயதிலக்க, தர்மபாலா, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சோ.மயூரன், சிறிரெலோ கட்சியை சேர்ந்த ப.உதயராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-5.110)

## அரைநாண்...

சாவகச்சேரி, ஏப்.18

வெள்ளி அரைநாண்கொடிகளைத் தாலிக்கொடிகள் என்று நூதமாக ஏமாற்றி அடகு வைத்த சம்பவம் தென்மராட்சியில் நடந்துள்ளது.

வெள்ளி அரைநாண்கொடிகளுக்கு தங்க முலாமிட்டு கச்சிதமாகக் காரியத்தை நிறைவேற்றிக் கொண்டுள்ளனர் அந்த நூதனத் திருடர்கள்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள மூன்று நிதி நிறுவனங்களில் தாலிக் கொடிகள் அடகு வைக்கப்பட்டிருந்தன. அந்தத் தாலிக் கொடிகள் மீட்கப்படவில்லை. அதனால் நிதி நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் அடகு வைத்தவரின் வீட்டுக்கு நேரடியாகச் சென்று விசாரித்துள்ளனர்.

அவர்களுக்கு அங்கு அதிர்ச்சியே காத்திருந்தது. எவர் பெயரில் அவை அடகு வைக்கப்பட்டிருந்தனவோ அவர் 3 ஆண்டுகளுக்கு முன்னரே இறந்துவிட்டார் என்று அயலவர்கள் கூறினர். இறந்தவரின் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்தியே இவை அடகு வைக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. அப்போதுதான் நிதி நிறுவனத்தைச் சேர்ந்தவர்களுக்குஎங்கோ தவறு நடந்துள்ளது புரிந்துள்ளது.

அவர்கள் உடனடியாகத் திரும்பி தாலிக்கொடிகளைச் சோதித்துள்ளனர். அங்கும் அவர்களுக்கு அதிர்ச்சி. அவை வெள்ளி அரைநாண் கொடிகள். அவற்றுக்கு தங்கமுலாமிட்டு தாலிக்கொடிகள் போன்று மாற்றி அடகு வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அங்குள்ள இயந்திரங்களால் கண்டுபிடிக்க முடியாதவாறு நூதமாக அவை உருமாற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நிதிநிறுவனங்கள் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-21,9)

## மகிந்த...

லங்கா பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்ட ணியின், ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் கைப்பற்ற முனைந்தனர். இருப்பினும் இறுதியில் அது தோல்வியில் முடிந்தது.வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் பதவிக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டது. அவரை எதிர்த்து, தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் களமிறங்கினார். வாக்கெடுப்பு பகிரங்கமாக நடைபெற்றது.

கூட்டமைப்பு உறுப்பினருக்கு 11 வாக்குகள் கிடைத்தன. கூட்டமைப்பின் 8 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும், ஐக்கிய தேசிய முன்னணியின் ஒரு உறுப்பினரும் ஆதரவளித்தனர். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். வேட்பாளருக்கும் 11 வாக்குகள் கிடைத்தன. அவரது கட்சியைச் சேர்ந்த 3 உறுப்பினர்களும், மகிந்த அணியான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியைச் சேர்ந்த 5 உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 2 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினரும் ஆதரித்தனர். (ற-5.110)

## 13,014 ஏக்கர்...

ணங்களில் இராணுவத்தினரின் வசமுள்ள காணிகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்றது. அதன்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 ஆயிரத்து 599.66 ஏக்கரும், முல்லைத்தீவில் ஆயிரத்து 150 ஏக்கரும், வவுனியாவில் ஆயிரத்து 872 ஏக்கரும், மன்னாரில் 2 ஆயிரத்து 391 ஏக்கரும், கிளிநொச்சியில் ஆயிரத்து 515 ஏக்கருமாக வடக்கில் 11 ஆயிரத்து 528.66 ஏக்கர் நிலம் முப்படையினரின் வசம் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் 563 ஏக்கரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 766 ஏக்கரும், அம்பாறையில் 156.40 ஏக்கருமாக கிழக்கு மாகாணத்தில் ஆயிரத்து 485 ஏக்கர் நிலம் முப்டையினர் வசமுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் இந்தத் தரவுகளில் அரச திணைக்களங்கள், அமைச்சுக்களுக்கான நிலங்கள் உள்ளடக்கப்படவில்லை. முல்லைத்தீவு மாவட்டம் உட்படச் சில மாவட்டங்களின் தரவுகள் பிழையாக உள்ளன என்று பல தரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளனர். (ற-105)

## சு.கவுக்கு...

யின் உபதவிசாளர் தெரிவின்போது, சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரை தமிழர் விடுதலைக் கூட்டணியில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் 4 பேரும் ஆதரித்து அவரை வெற்றி பெறச் செய்தனர். சுதந்திரக் கட்சி உறுப்பினரை எதிர்த்துப் போட்டியிட்ட கூட்டமைப்பு உறுப்பினர் தோல்வியடைந்தார்.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவு நேற்றுப் பி.ப. 2.30 மணிக்கு இடம்பெற்றது. தவிசாளர் பதவியைக் கூட்டமைப்பு கைப்பற்றியது.

உபதவிசாளர் பதவிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் வே.குகதாசனை, அந்தக் கட்சியின் உறுப்பினர் க.பார்த்தீபன் முன்மொழிந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் அ.அமிலியா வழிமொழிந்தார். அவரை எதிர்த்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் வெ.மகேந்திரனை, தமிழர் விடுதலைக் கூட்டணியிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் த.சிவராசா முன்மொழிய, சுதந்திரக் கட்சி உறுப்பினர் கே.ஞானமலர் வழிமொழிந்தார்.

பகிரங்க வாக்கெடுப்பை 29 உறுப்பினர்கள் கோரினர். பகிரங்க வாக்கெடுப்பாகத் தெரிவு நடத்தப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னிறுத்திய உறுப்பினருக்கு 14 வாக்குகள் கிடைத்தன. கூட்டமைப்பின் 11 உறுப்பினர்களும், சுயேச்சைக் குழுவின் 2 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினரும் வாக்களித்தனர். சுதந்திரக் கட்சி முன்னிறுத்தி உறுப்பினருக்கு 15 வாக்குகள் கிடைத்தன. சுதந்திரக் கட்சியின் 5 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் 4 பேரும், ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் 2பேரும், ஐக்கிய தேசியக் கட்சியின் 3 உறுப்பினர்களும், மகிந்த அணியான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் ஒரு உறுப்பினரும் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் நடுநிலமை வகித்தார். (ற-5.110)

## மகிந்த அணியுடன்...

னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

நாங்கள் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு கூடுதலான ஆசனங்களைப் பெற்றிருந்தோம். இருப்பினும் அதிர்ஷ்டத்தின் மூலம் இன்று நீதி வென்றிருக்கின்றது. இந்த வன்னி மண்ணிலே எங்களை அழித்து ஒழித்து நிர்க்கதியாக்கிய-மகிந்தவின் கட்சியோடு இணைந்து ஆட்சியமைக்க ஆதரவு கேட்ட செயற்பாட்டை தமிழ் மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் நாங்கள் ஈ.பி.டி.பியுடன் இணைந்து ஆட்சியமைக்கவில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் சுயமாகவே செயற்பட்டார்கள். அது அவர்களுடைய சொந்த விருப்பம்.

வவுனியா நகர சபையில் தவிசாளராக தமிழர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு வாழ்த்துக்களைக் கூறிக் கொள்கின்றேன் - என்றார். (ற-5.110)

## காணிகளை...

ஏனைய காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். காணிகள் விடுவிப்புக்கு தொடர்ச்சியாக நாம் நடவடிக்கை எடுப்போம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

வலி.வடக்கில் கடந்த 13ஆம் திகதி விடுவிக்கப்பட்ட பிரதேசங்களை, நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சோ.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சே.கலையமுதன் ஆகியோர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்தப் பிரதேசம் விடுவிக்கப்படாது என்பது தான் எல்லோருடைய எதிர்பார்ப்பாகவும் இருந்தது. இந்த ஆட்சி வந்ததன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரச தலைவரிடமும், ஆட்சியாளர்களிடமும் வற்புறுத்தியதன் அடிப்படையிலும் பெரும்பாலான நிலங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. அதை நாங்கள் வரவேற்கின்றோம்.

மக்கள் தமது நிலங்களை அடையாளம் காண்பதற்கு காடுகளுக்குள் செல்கின்றார்கள், கண்டு பிடிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றார்கள். அவர்களின் மகிழ்ச்சியையும் நாங்கள் கண்டுள்ளோம்.

இந்தப் பகுதியை அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கை எடுப்போம். மக்களுக்கு இதனை நாம் கூறியுள்ளோம் - என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், "வலி.வடக்கில் 6 ஆயிரத்து 348 ஏக்கர் பிரதேசத்தை முன்னைய அரசு சுவீகரிப்பதற்கான அறிவித்தலை ஒட்டி ஆக்கிரமித்து வைத்திருந்தது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது இந்தப் பகுதி விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த விடுவிப்புக்களை வரவேற்கிறோம். மிகுதிப் பகுதிகளையும் உடன் விடுவிக்கவேண்டும் என்பதும் எமது கோரிக்கையாகவுள்ளது. எமது கட்சி சார்பில் காணி விடுவிப்புக்கான செயலணி ஒன்றை வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் நிறுவி அரசு கொடுக்கும் உதவிகளுக்கு மேலதிகமாக, உள்நாட்டில், வெளிநாட்டில் இருந்து பெற்று இதற்கு ஒத்துழைப்புக் கொடுப்போம்"- என்றார். (ற-5)

## ராணுவம் வைத்திருந்த...

ரூபா நிதி தேவை என்று யாழ்ப்பாண மாவட்டச்செயலகத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளின் பற்றைகளைத் துப்புரவு செய்தல், பொது இடங்களை மறுசீரமைத்தல், வீடுகள் அமைத்தல், வீடுகள் திருத்துதல் போன்றவற்றுக்கு இந்த நிதி தேவைப்படுகின்றது என்று மாவட்டச் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி, யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், யாழ்ப்பாண மாவட்டச் செயலக மேலதிக மாவட்டச் செயலர் (காணி) சு.முரளிதரன் ஆகியோர் விடுவிக்கப்பட்ட பகுதிகளைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டனர். தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இது தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெற்றது.

விடுவிக்கப்பட்ட பகுதிகள் முற்றாகவே அழிவடைந்து போயுள்ளன. அவற்றை மீளக்கட்டியெழுப்பினால்தான் மக்கள் மீள்குடியமர்வார்கள். மக்களின் மீள்குடியமர்வுக்குத் துரிதமாக ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று மாவட்டச் செயலகத்தால், அமைச்சின் செயலருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆயிரம் வீடுகள் புதிதாக அமைப்பதற்கும், 250 வீடுகள் திருத்துவதற்கும், 300 மலசல கூடங்கள் அமைப்பதற்கும், 300 கிணறுகள் மறுசீரமைப்பதற்கும், வீதிகள், பாடசாலைகள், கோயில்கள், பொதுநோக்கு மண்டபங்கள் என்பவற்றை மீளக் கட்டுவதற்கும், காடு மண்டிய பிரதேசத்தை துப்புரவு செய்வதற்கும் சுமார் ஆயிரத்து 600 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கை தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ற-5)

# மைத்திரிபால நாடு திரும்பியதும் கூட்டரசுக்கான புதிய உடன்பாடு



கொழும்பு, ஏப். 18

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பிய பின்னர், ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில், புதிய கூட்டு உடன்பாடு கையெழுத்திடப்படவுள்ளது.

பொதுநலவாய உச்சி மாநாட்டில் பங்கேற்க, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன லண்டன் சென்றார். எதிர்வரும் 22ஆம் திகதி அவர் நாடு திரும்பவுள்ளார்.

அதன் பின்னர், கூட்டு அரசு தொடர்பான புதிய உடன்பாடு, இரண்டு கட்சிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்படும் என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இரண்டு கட்சிகளும் இணைந்து முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்கியதாக இந்த உடன்பாடு அமையும்.

கடந்த காலத்தில் ஏற்பட்டது போன்ற சிக்கல்கள் ஏற்படாத வகையில் புதிய வழிகாட்டல் முறைகளையும் இந்த உடன்பாடு கொண்டிருக்கும்.

புதிய உடன்பாட்டைத் தயாரிக்கும் நடவடிக்கையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் சரத் அமுனுகம தலைமையிலான குழு ஈடுபட்டுள்ளது, என்றும் அவர் தெரிவித்தார். (5)

## மைத்திரியின் நடவடிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது

*மக்கள் விடுதலை முன்னணி காட்டம்*

கொழும்பு, ஏப். 18

நாடாளுமன்றம் மே மாதம் 8 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளமை அரச தலைவர் மைத்திரியின் தன்னிச்சையான செயற்பாட்டின் உச்சக்கட்டமாகவே காணப்படுகின்றது. தனது சிறப்பு அரசியல் அதிகாரங்களைக் கொண்டு நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தாலும் அதற்கான சரியான காரணங்களைக் குறிப்பிடுவதும் அவரது பொறுப்பாகும்.



இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சுமத்தியுள்ளது.

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்ததாவது:

அரச தலைவர் சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தின் கூட்டத்தொடரை ஒத்திவைக்கும்போது அதற்கான காரணத்தையும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிப்பதும் அவரது பொறுப்பாகவே காணப்படுகின்றது. ஆனால் அரச தலைவர் மைத்திரி தனது விருப்பத்தின் பேரில் செயற்பட்டுள்ளதுடன், அவரது சார்பில் செயற்படும் நிர்வாகிகளும் தான்தோன்றித்தனமாகவே செயற்படுகின்றனர்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் ரணில் வென்றிருந்தாலும், கூட்டு அரசு பெரிய விளைவுகளை எதிர்கொண்டது. கூட்டு அரசிலிருந்து 16 உறுப்பினர்கள் வெளியேறியுள்ளமை கட்சிகளின் பலவீனத்தன்மையை வெளிப்படுத்துகின்றது. கூட்டு அரசு பெரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள வேளையில் அரச தலைவர் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்துள்ளமை அரசியல் கட்சிகளின் மத்தியில் மாறுபட்ட கருத்துக்களைத் தோற்றுவித்தது.

தமது கட்சியில் காணப்படும் குறைபாடுகளைச் சீர் செய்வதற்கான கால அவகாசத்தை ஏற்படுத்தவே நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தார் என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது - என்றார்.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பத்தைத் தீர்த்துக்கொள்ளும் நோக்கத்திலே மைத்திரி நாடாளுமன்ற அமர்வை பிற்படுத்தினார். இந்த நடவடிக்கையானது வன்மையாகக் கண்டிக்கத்தக்கதுடன் பிழையான முன்னுதாரணமாகும். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பம் காரணமாகக் கூட்டு அரசு தொடர்ந்து செல்லமுடியாது. அவர்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையின் பிரதி பலனாகவே ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானமும் கொண்டுவரப்பட்டது. தற்போது நாடாளுமன்ற அமர்வும் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (5)

## 2020 வரையில் ஆட்சியை தொடர்வதில் சிக்கலில்லை

*அமைச்சர் வஜிர தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 18



2020ஆம் ஆண்டு வரையில் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியை நடத்துவதில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை.

இவ்வாறு அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அரசுக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்தும் எதிர்காலத்தில் ஐக்கிய தேசிய முன்னணியின் செயற்பாடுகள் குறித்தும் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய நிலையில் ஐக்கிய தேசிய முன்னணியே அதிக ஆசனங்களை நாடாளுமன்றத்தில் கொண்டிருக்கின்றது. ஐக்கிய தேசிய முன்னணி மட்டுமே 2020ஆம் ஆண்டு வரையில் அரசை அமைப்பதற்கான பலத்தைக் கொண்டிருக்கின்றது. நாம் தொடர்ந்தும் ஆட்சியை முன்னெடுத்துச் சொல்வோம். ஆட்சியைத் தொடர்வதில் எமக்கு எந்தத் தடங்கலும் இல்லை. (5.31)

## 60 நாள்களில் நீரில் மூழ்கி 93 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 18

இந்த ஆண்டின் முதல் 60 நாள்களில் 93 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

கடந்த ஆண்டில் 728 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன், இதில் 150 பேர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. 728 பேரில் 100 பேர் 19 வயதுக்கு குறைந்தவர்களெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு 877 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன், இதில் 177 பேர் பெண்களெனவும், இதில் 105 பேர் 19 வயதுக்குக் குறைந்தவர்களெனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (5)

## பாதுகாக்கப்பட்ட வனத்தில் கஞ்சா பயிர்ச் செய்கை

கொழும்பு, ஏப். 18

ஹம்பேகமுவ, கல்கொட்டுகந்த பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசத்தில் பயிர் செய்யப்பட்டு வந்த கஞ்சா தோட்டத்தைப் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினரால் அழிக்கப்பட்டது.

பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையின் புத்தளமுகாம் அதிகாரிகளுக்குகிடைத்த தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில், வனப் பிரதேசத்தில் இரண்டு இடங்களில் கஞ்சா பயிரிடப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அனைத்துக் கஞ்சா செடிகளையும் தீவைத்து அழிப்பதற்குப் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினர் நடவடிக்கை எடுத்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கொட்டுகந்த வனஜீவராசிகள் காரியாலயம் ஆரம்பித்துள்ளதாகப் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (5)



## நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க ஜே.வி.பிக்கு மகிந்த அணி ஆதரவு



நிறைவேற்று அதிகாரமுள்ள அரச தலைவர் ஆட்சியை இல்லாது ஒழிக்க மக்கள் விடுதலை முன்னணிக்கு, மகிந்த அணி ஆதரவளிக்கும் என்று அந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். மக்கள் விடுதலை முன்னணியால் தனிநபர் திருத்தமாக, 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு நாடாளுமன்றுக்குக் கொண்டு வரப்படவுள்ளது. நிறைவேற்று அரச தலைவர் முறைமையை இல்லாதொழிக்கும் வகையில் அந்தச் சட்ட வரைவு உள்ளது. இந்தச் சட்டவரைவுக்கு நாடாளுமன்றத்தில் மகிந்த அணி ஆதரவு வழங்கும் என்று தெரிவித்தது. இதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக மகிந்த அணி கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு மக்கள் விடுதலை முன்னணி ஆதரவளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களுக்கு புதிய இலக்கம்

கொழும்பு, ஏப். 18

ஊழியர் சேமலாப நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்யும் ஊழியர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கமே இனி உறுப்பினரின் இலக்கமாகப் பயன்படுத்தப்படவுள்ளது.

இந்தப் புதிய உறுப்பினர் இலக்கம் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் வழங்கப்படும் என்று தொழில் ஆணையாளர் நாயகம் ஏ.விமலவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதற்காக தொழிலாளர் மற்றும் தொழில் வழங்குநர்களின் விவரங்கள் அடங்கிய தரவுகளைத் திணைக்களத்தின் கணினியில் புதுப்பிக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல நிறுவனங்களில் பணிபுரிந்துள்ள ஊழியர்களுக்குப் பல இலக்கங்கள் காணப்படுகின்றன.

நிதியத்தின் பயன்களைப் பெற்றுக் கொள்ளும் போது, இது சிக்கலாக அமைகின்றது.

இந்த நெருக்கடியைத் தீர்க்கும் ஒரு நடவடிக்கையாக ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர் இலக்கமாக அவரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது - என்றார். (5)



## புனாணையில் தீவைத்து எரிக்கப்பட்ட சொகுசு பஸ்!

*சாரதியும் நடத்துனரும் காயங்களுடன் தப்பினர்*

மட்டக்களப்பு, ஏப். 18

மட்டக்களப்புப் புனாணை காட்டுப் பகுதியில் ஓடிக் கொண்டிருந்த பேருந்து தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் புனாணைப் பொலிஸ் சோதனைச் சாவடியிலிருந்து மட்டக்களப்புப் பக்கமாகச் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள காட்டுப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

முன் கூட்டிய ஆசனப்பதிவு செய்யப்பட்ட பயணிகளை ஏற்றி வருவதற்காகப் பொலன்னறுவையிலிருந்து கல்முனை நோக்கிப் பேருந்து சென்று கொண்டிருந்தபோது இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பேருந்தைப் பின் தொடர்ந்து வந்த நால்வர் பேருந்தைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டுத் தலைமறைவாகினர்.

பேருந்து தீவைக்கப்பட்டதில் சாரதியும் அதன் உரிமையாளருமான மாதங்கொட்ட, மன்னம்பிட்டியைச் சேர்ந்த எச்.ஏ.சோமசிறி சாமர புஸ்பகுமார (வயது - 30) மற்றும் அவரது உதவியாளரும் நடத்துனருமான வாழைச்சேனையைச் சேர்ந்த எம்.முஹம்மத் (வயது-25) ஆகியோர் சிறிய காயங்களுடன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (5)

கேலிச்சித்திரம்




# தலைவர் பிரபாவின் பெயரை மகனுக்கு வைத்த 'கேப்டன்'

## நடிகர் சத்தியராஜ் புகழாரம்

சென்னை, ஏப். 18

நடிகர் விஜயகாந்த்தான் நிஜக் கதாநாயகன். தனது மகனுக்குத் தலைவர் பிரபாகரனின் பெயரைச் சூட்டியவர். இவ்வாறு நடிகர் சத்தியராஜ் புகழாரம் சூட்டியுள்ளார்.



நடிகர் விஜயகாந்த் சினிமாவில் காலடி எடுத்து வைத்து 40 ஆண்டுகள் கடந்து விட்டன. இதனையொட்டிச் சிறப்பு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதில் கலந்து கொண்டு பேசிய நடிகர் சத்தியராஜ் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

"நடிகர் விஜயகாந்த் தான் நிஜக் கதாநாயகன். மகனுக்குத் தலைவர் பிரபாகரன் பெயரைச் சூட்டியவர். ஈழப் போர் உச்சம் பெற்றிருந்த காலப் பகுதியில் மணிவண்ணன் நாடகத்தை நடத்தியிருந்தார். இதன் போது பல நடிகர்களும் தயக்கம் காட்டியிருந்தனர்.

ஆனால் விஜயகாந்த் அதில் நடித்தார். அதில் கிடைத்த பணத்தை அவர்களுக்குக் கொடுத்து உதவினார்" என்றும் சத்தியராஜ் குறிப்பிட்டுள்ளார். (5)

# பொதுத் தேர்தலை ஏன் ஒத்திப்போடுகின்றீர்கள் ?

## அரசிடம் கேள்வி எழுப்புகிறார் மகிந்த



கொழும்பு, ஏப். 18

நாட்டுக்குத் தற்போது உறுதியான அரசே அவசியம் என்பதால், அரசு உடனடியாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு உறுதிப்பாடற்ற நிலையில் இருப்பதன் காரணமாக வெளிநாட்டு முதலீடு உள்பட அனைத்துத் துறைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன.

வெளிநாட்டு முதலீடுகளை வரவழைக்க வேண்டுமாயின் உறுதிப்பாடான அரசு அவசியம். மேலும் உறுதியான அரசு இல்லாத காரணத்தினால் மக்களும் தமது பணிகளைச் செய்யததில்லை. அரசு மக்களைச் சந்திக்க அஞ்சவில்லை என்றால், நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி மக்களின் கருத்தை அறிய வேண்டும் - என்றார். (5)

# தெற்கு நெடுஞ்சாலை வருமானம் புத்தாண்டுக் காலத்தில் வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 18

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கடந்த ஒரு வார காலத்தில் 105 மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்தது.

கடந்த ஆண்டு இதே காலப் பகுதியில் 230 மில்லியன் ரூபா கிடைக்கப் பெற்றிருந்த நிலையில், இந்த ஆண்டு அந்தத் தொகை 125 மில்லியன் ரூபாவினால் குறைவடைந்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனங்களின் ஊடாக இவ்வாறு வருமானம் ஈட்டப்பட்டது.

குறிப்பிட்ட காலப்பகுதியில் 3 லட்சத்து 72 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் இந்த வீதியைப் பயன்படுத்திக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமை 23 மில்லியன் ரூபாவும், சனிக்கிழமை 14 மில்லியன் ரூபாவும் வருமானம் கிடைத்துள்ளது. கடந்த சனிக்கிழமை தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் 23 வாகன விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கடந்த ஆண்டில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் குறித்த காலப்பகுதியில் மட்டும் 230 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டிருந்தது என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (5)



# தெற்கு அதிவேக வீதியில் பழுதடையும் வாகனங்கள்

கொழும்பு, ஏப். 18

அதிவேக வீதிகளில் பயணிக்கும் வாகனங்கள் இயந்திரக் கோளாறுக்கு உள்ளாவதால், பெரிய பிரச்சினை ஏற்படுவதாக, அதிவேக வீதிப் பராமரிப்பு மற்றும் மேற்பார்வைப் பணிப்பாளர் எஸ்.ஓபநாயக்க தெரிவித்தார்.

புத்தாண்டுக் காலத்தில் அதிவேக வீதியில் பயணித்த வாகனங்களுள் 70 க்கும் மேற்பட்ட வாகனங்கள் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு, வீதியின் பல இடங்களிலும் நிறுத்தி வைக்கப்பட்டன. வாகனங்களை அகற்றுவதற்கு, அதிவேக வீதி ப்ணியாளர்கள் நடவடிக்கை எடுத்தனர். இவற்றை வீதிகளில் நுழைப்பது பெரிய பிரச்சினையாகவுள்ளது, என்றும் அவர் குறிப்பிட்டார். (5)

# ஊட்டச்சத்து குறைபாடு தென்னாசியாவில் இலங்கை இரண்டாமிடம்

கொழும்பு, ஏப். 18

சனத்தொகைக்கு நிகராக, ஊட்டச்சத்துக் குறைப்பாட்டில் தென்னாசியாவில் இலங்கை இரண்டாம் இடத்தில் உள்ளதாக, ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக உணவு நிறுவனத்தின் உணவு பாதுகாப்பு மற்றும் போசாக்கு தொடர்பிலான, 2017 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 2014 - 2016 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள சனத்தொகைக்கமைய, 22.1 சதவீதமானோர் ஊட்டச்சத்துக் குறைபாடுடையவர்களாகக் காணப்படுவதாக, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

# அமெரிக்கத் தரைப் படையின் உயர்மட்டக்குழு இலங்கையில்

கொழும்பு, ஏப். 18

அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் தரைப் படையைச் சேர்ந்த 17 அதிகாரிகளைக் கொண்ட குழு இலங்கை வந்துள்ளது.

தரைப்படைகள் பசுபிக் திட்ட அமர்வுகளில் பங்கேற்கவே இந்தக் குழு கொழும்பு வந்துள்ளது.

இந்தக் குழுவுக்கு, அமெரிக்க இராணுவ பசுபிக் கட்டளை பீடத்தின் வடக்குப் பகுதிப் பிரதிக் கட்டளைத் தளபதியான ஆஸ்திரேலிய இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் ரோஜர் ஜே நோபிள் தலைமை வகிக்கிறார்.

மேஜர் ஜெனரல் ரோஜர் ஜே நோபிள் மற்றும் மூன்று அதிகாரிகள் இராணுவத் தலைமையகத்தில், இராணுவத் தலைமை அதிகாரி டம்பத் பெர்னான்டோவை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அதையடுத்து, பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடந்த பூர்வாங்கக் கலந்துரையாடலில், அமெரிக்கத் தரைப் படைக் குழுவினர் பங்கேற்றனர்.

இந்தக் கலந்துரையாடலில் கருத்து வெளியிட்ட மேஜர் ஜெனரல் ரோஜர், நிபுணத்துவ ஆற்றல் தொடர்பாகவும், அமெரிக்கப் பங்காளர் ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புடன் தொடர்புடைய இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களுக்குத் தீர்வு காண்பது குறித்தும் கவனம் செலுத்தப்படும் என்று கூறினார்.

அத்துடன், பரஸ்பர நலன் மற்றும் கரிசனைக்குரிய பிராந்திய மற்றும் ஏனைய விவகாரங்கள் குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் இராணுவத் தரப்பில் மேஜர் ஜெனரல்கள் டம்பத் பெர்னான்டோ, தனஞ்ஜித் கருணாரத்ன, அருண வன்னியாராச்சி, மேர்வின் பெரேரா மற்றும் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். (5)



# அரசிலிருந்து மேலும் அமைச்சர்கள் விலகுவர்

அமைச்சர் பதவிகளிலிருந்து விலகிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் எதிர்க்கட்சி வரிசையில் அமரும் தினத்தில் தற்போது அரசில் அமைச்சர்களாகப் பதவி வகித்து வரும் மேலும் சிலர் எதிரணியில் அமர்வார்கள் என்று முன்னாள் அமைச்சர் லக்ஸமன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். அரச தலைவர் மைத்திரி நாடு திரும்பியதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழுக் கூடி அரசிலிருந்து விலக உத்தியோபூர்வமான அனுமதியை வழங்கும் என்றும் குறிப்பிட்டார். (5)

மாற்றுத் திட்டம் முன்வைக்கும்வரை

# புகையிலைச் செய்கையைத் தொடர அனுமதிக்கக் கோரிப் பிரேரணை



தென்மராட்சி, ஏப்.18
புகையிலைச் செய்கைக்கான மாற்று வாழ்வாதாரத் திட்டம் அரசால் இதுவரை முன்வைக்கப்படாததால் பிரதேசத்தில் புகையிலை உற்பத்தியை மாற்றுத்திட்டம் முன்வைக்கப்படும் வரையில்மேற்கொள்ள அனுமதிப்பது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும். இவ்வாறு சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர்தில்லைநாதர்தங்கவேலு பிரதேச சபையின் கன்னி அமர்வில் உரையாற்றி அதனை பிரேரணையாகவும்சபையில்சமர்ப்பித்தார்.
சாவகச்சேரிப் பிரதேச சபையின் கன்னியமர்வு அண்மையில் இடம்பெற்றது.
இதில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்ததாவது:
எதிர்வரும் 2020ஆம் ஆண்டுபுகையிலைஉற்பத்தியைத் தடை செய்தல் தொடர்பானஅரசின்நடவடிக்கையால்யாழ்ப்பாணமாவட்டத்தில் மாற்றுப்பயிர்களைப் பயிரிட்ட விவசாயிகள் கால நிலைமாற்றம், சந்தைவாய்ப்பின்மைகாரணமாகபோதிய வருமானத்தைப் பெறமுடியாது சிரமப்படுகின்றனர்.
இதுவரையில் புகையிலை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கான மாற்று வாழ்வாதாரத் திட்டம் எதுவும் முறையாக நடைமுறைப்படுத்தப்படாதநிலையேகாணப்படுகின்றது. இதன் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் புகையிலை உற்பத்தியாளர்கள் தொடர்ந்து குறிப்பிட்ட காலம் வரை புகையிலைப் பயிர்செய்ய அனுமதியினை அரசு வழங்கக் கோரி பிரேரணையைச்சபையில்சமர்ப்பிப்பிக்கிறேன் - என்றார்.
இதுதொடர்பாகஉரியதரப்பினருடன் பேசப்படும் என்று சபையின்தவிசாளர்க.வாமதேவன்தெரிவித்தார். (21,9)

வடக்கு மாகாணத்தில்

## மருத்துவம்சார் உதவியை வழங்க முன்வந்துள்ளது கியூமெடிக்கா

யாழ்ப்பாணம்.ஏப்.18
வடக்குமாகாணத்தில்மருத்துவம்சார்ந்தபல்வேறுஉதவித் திட்டங்களை வழங்குவதற்கு கியூ மெடிக்கா அரச சார்பற்ற நிறுவனம் முன்வந்துள்ளதாக மாகாண சுகாதாரஅமைச்சுதெரிவித்துள்ளது.
இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
மருத்துவம்சார்ந்தஉதவித் திட்டங்களை வழங்குவதற்கு கியூமெடிக்கா என்ற அரச சார்பற்ற நிறுவனம் முன்வந்துள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல்நேற்றுமுன்தினம்பிரதி முதன்மைச் செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், மாகாணசுகாதாரபணிப்பாளர், பிரதி முதன்மை செயலாளர், நிதி மற்றும் திட்டமிடல் பிரிவினர் ஆகியோர் இந்தக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.
கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்துக்குத் தேவையானஉதவிகள்தொடர்பில் அவர்களுக்குத்தெரிவிக்கப்பட்டது.
அதேபோன்று அவர்கள் தாம்வழங்கக்கூடியஉதவிகள் தொடர்பில் தெரிவித்தனர்.
வடக்கு மாகாணத்தில் சேவையாற்றக் கூடிய மருத்துவர்களை ஒப்பந்த அடிப்படையில்உள்வாங்குதல், மருந்துகளைப் பெற்றுக்கொள்ளல், கட்டடம்மற்றும் மருத்துவ உபகரணத் தொகுதிகளை வழங்கல் போன்ற பல்வேறு திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு அவர்கள் தயாராக உள்ளனர். எனினும்வெளியில் இருந்து மருத்துவர்களை உள்வாங்குதல், மருந்துப் பொருள்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள கொழும்பு சுகாதார அமைச்சின் அனுமதி பெறவேண்டும்.
ஆகவேகொழும்பு அமைச்சின் அனுமதிகளைப் பெற நடவடிக்கைகள்எடுக்கப்பட்டுள்ளனஎன்றுதெரிவிக்கப்பட்டது. (எ-7)

மாகாண சபை உறுப்பினர்கள்

# செயற்றிட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதில் பெரும் இழுபறி

**யாழ்ப்பாணம்.ஏப்.18**
**வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதிக்கான செயற்றிட்ட முன்மொழிவுகளை மாகாணசபையின் ஆயுட்காலம் முடிவுக்கு இன்னமும் 5 மாதங்கள் மட்டுமே உள்ள நிலையிலும் இதுவரை 14 உறுப்பினர்களே முழுமையாக சமர்ப்பித்துள்ளனர் என்று மாகாண பேரவைச் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியாக தலா 6 மில்லியன்ரூபாவழங்கப்படுகின்றது. இதற்கு அவர்கள் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவேண்டும். அதற்கான முன்மொழிவுகளைஅவர்கள்சபைக்கு வழங்கவேண்டும்.
வருட ஆரம்பத்தில் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம்விரைவாக முன்மொழிவு களை சமர்ப்பித்து வேலைகளை உடனடியாக ஆரம்பிக்க வழிவகைகள் செய்ய வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.
ஆனால்இதுவரையில்ஆயிரத்து655 முன்மொழிவுகள் கிடைத்துள்ளன. அவற்றில்14உறுப்பினர்கள்மாத்திரம் இதுவரையில் முழுமையான முன்மொழிவுகளையும்.17உறுப்பினர்கள் பகுதியான முன்மொழிவுகளையும் சமர்ப்பித்துள்ளனர்.
150 மில்லியன் ரூபாய்களுக்கான முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.
இன்னமும் 47 மில்லியனுக்கான முன்மொழிவுகள் கிடைக்கப்பெற வேண்டும். இது தவிர இரண்டு உறுப்பினர்கள் இன்னமும் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கவில்லை.
விரைவாகமுன்மொழிவுகளைசமர்ப்பித்து வேலைகளை ஆரம்பிப்பதன் மூலம்வருடஇறுதிக்குள்செயற்றிட்டங்களைநிறைவுசெய்யலாம்என்றுதெரிவிக்கப்பட்டது. (எ-7)

## சீரற்ற முறையில் உணவு வியாபாரம்

இருவருக்கு இன்று வழக்கு

யாழ்ப்பாணம்.ஏப்.18
யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியினை அண்டியநடமாடும்வண்டில்வியாபாரிகள்மற்றும்பழக்கடைகளுக்கு எதிராகசட்டநடவடிக்கைஎடுத்துள்ளதாக சபையின்பொதுசுகாதாரபரிசோதகர் பிரிவு தெரிவித்துள்ளது.
யாழ்ப்பாணம் நகர் பகுதியில் உணவு சார்ந்த விற்பனைகளில் ஈடுபடுபவர்களின்விற்பனைநிலையங்கள் நேற்றுமுன்தினம் மாநகர சபையின் பொது சுகாதார பரிசோதகர்களால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. மக்களுக்கு தேவையான உணவு, சிற்றுண்டி, பழங்கள் ஆகியவற்றை விற்பனை செய்யும்போது சுகாதாரத்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
இதனைக் கருத்தில் கொண்டு சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது சுகாதாரவிதிமுறைகளைப்பின்பற்றாது வண்டிலில் வடை வியாபாரத்தினை மேற்கொண்ட வியாபாரி ஒருவருக்கு எதிராகவும், அழுகிய பழங்களை விற்பனைக்காக வைத்திருந்த பழக்கடை உரிமையாளர்ஒருவருக்குஎதிராகவும்சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.
இவர்களின் வழக்கு இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

## யாழ்.சிறைச்சாலையின் புதிய அத்தியட்சகர் கடமையேற்றார்

யாழ்ப்பாணம், ஏப். 18
யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு பதவி உயர்வுடன்அத்தியட்சகராகஎம்.எப்.மெரிலோ நியமிக்கப் பட்டு நேற்று முன்தினம் கடமைகளைப் பொறுப் பேற்றார்.
நேற்றுமுன்தினம்பொறுப்பேற்றஅத்தியட்சகர் அம்பாந்தோட்டையிலுள்ள அங்குனகொலபலச் சிறைச்சாலையில் உதவி அத்தியட்சகராகப் பணியாற்றியவர் என்று சிறைச்சாலைத் தரப்பினர் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணச் சிறைச்சாலை யின் அத்தியட்சகராக இருந்த சி.பெரேரா நீர்கொழும்பு சிறைச்சாலைக்குஇடமாற்றம்செய்யப்பட்டார். வருடாந்த இடமாற்றஅடிப்படையில்இவர்கள்இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-4)

## வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர்கள் இன்று மாகாணக் கல்வி அமைச்சரை சந்திக்கின்றனர்

யாழ்ப்பாணம்.ஏப்.18
வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சேவைப் பிரமாணக் குறிப்பு இல்லாத நிலையில் அவர்களை கீழ் நிலையில் வைப்பதற்கு கல்வி அதிகாரிகள் சிலர் முயற்சிப்பது தொடர்பில்மாகாணக் கல்வி அமைச்சரை சந்திக்கவுள்ளதாக வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கத் தலைவர் சி.சிவரூபன் தெரிவித்தார்.
இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கைக் கல்வி வலயங்களில் சேவையாற்றி வரும் ஆசிரிய ஆலோசகர்களுக்கு இதுவரை சேவைப் பிரமாணக் குறிப்பெதுவும் நடைமுறைக்கு வராத நிலையில் உயர் கல்வி அதிகாரிகள் சிலர் எங்களை கீழ் நிலைக்கு தள்ளும் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றார்கள். இது அவர்கள் செய்யும் சில செயற்பாடுகளின் மூலம் தெரியவருகின்றது.
சில வலயப் பணிப்பாளர்கள் எமது கடமைப் பட்டியலில் இல்லாத கடமைகளை செய்யுமாறு பணித்து வருகின்றனர். அத்துடன் இந்த வருடம்முதல் மேற்பார்வைக்குச் செல்லும் பாடசாலைகளில் கைவிரல் அடையாளம் இடுமாறும் மாகாண கல்விப் பணிப்பாளர் பணித்துள்ளார். வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்களுக்கு இருவர் உட்பட நான்கு பேரின் சம்பளங்கள் முன்னறிவித்தல் மற்றும் விளக்க கோரல்கள் இன்றி நிறுத்தப்பட்டுள்ளன. அத்துடன் இடமாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன.
இவ்வாறு அதிகாரிகள் எம்மை கீழ் நிலையில் நடத்துவது தொடர்பில் மாகாண கல்வி அமைச்சருடன் இன்று புதன் கிழமை கலந்துரையாடவுள்ளோம் - என்றார். (7)

## தலைக்கவசம் அணியாதவரை ஏற்றிச் சென்றவருக்கு வழக்கு

ஏற்றிச் செல்லப்பட்டவர் விழ்ந்து காயமடைந்ததால்

சாவகச்சேரி, ஏப். 18
தலைக்கவசம் அணியாத மூதாட்டியை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற நிலையில் மூதாட்டி வீதியில் விழுந்து காயமடைந்தார். அதனால் அவரை ஏற்றிச் சென்ற மோட்டார் சைக்கிள் சாரதிக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.
அண்மையில் வரணி இயற்றாலையிலிருந்து கொடிகாமத்துக்குக் குறித்த மூதாட்டி சகோதரனுடன் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.
கொடிகாமம் நகரை அண்டிய பகுதியில் சாலையில் காணப்பட்ட பள்ளத்தில் மோட்டார் சைக்கிள் சில்லு இறங்கியதில் மூதாட்டி கீழே விழுந்தார். தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிளில் பயணித்ததால் தலையில் பலத்த காயமடைந்தார்.
அதே இடத்தைச் சேர்ந்த கனகசிங்கம் சின்னாச்சிப்பிள்ளை (வயது 68) என்பவரே காயமடைந்தார். அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
சம்பவம் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸார் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த மூதாட்டியின் சகோதரனைக் கைது செய்தனர். பின்னர் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தி னர். வழக்கை விசாரித்த நீதிவான் அவரை ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார். (எ-4,9)

# குப்பைகளை தரம் பிரித்துப்போட உழவியந்திரப் பெட்டிகள் அறிமுகம்

யாழ்ப்பாணம்.ஏப்.18
யாழ்ப்பாணம் மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவுகளை விரைவாக அப்புறப்படுத்துவதற்குதரம்பிரித்துக்குப்பைகள்போடக்கூடிய உழவு இயந்திரப் பெட்டிகள் சபையால் அறிமுகம் செய்யப்பட் டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கழிவுகளைத் தரம் பிரித்துப் போடுவது அவசியம். அப்போதுதான் அவற்றை மீள் சுழற்சிக்கு உட்படுத்த முடியும்.

இதனை அடிப்படையாகக்கொண்டு கழிவு சேகரிக்கப்படும் இடங்கள், நேரம் என்பன சபையால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் சிலர் கழிவுகளை உரிய இடத்தில் போடாமல் பொது இடங்களில் வீசி விட்டு செல்கின்றனர். இதனால்ஊழியர்கள்கழிவுகளைச் சேகரிப்பதில் பல அசௌகாரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். கழிவுகள் அகற்றப்பட்டுபிரதேசங்களைதூய்மையாக வைத்திருப்பதற்குமக்களும்ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

ஆரம்பத்தில் கழிவுகள் கொட்டப்படும் இடங்களுக்கு பிளாஸ்டிக்கினாலானதரம்பிரிக்கப்பட்ட குப்பை தொட்டிகள் வைக்கப்பட்டன. அதில் குப்பைகள் தேங்கும் போது ஊழியர்கள்அதனை எடுத்துச்செல்வர். இதன்போது கால தாமதம் ஏற்படுகின்றது.

இதனை கருத்தில் கொண்டு முதன்மைக் கழிவு சேகரிப்பு நிலையங்களில் தரம் பிரிக்கப்பட்டஉழவுஇயந்திரப்பெட்டிகள்வைக்கப்பட்டுள்ளன. இதனுள் மக்கள் குப்பையை போடுவதன் மூலம் குப்பை நிரம்பியதும் உழவுஇயந்திரபெட்டிஇயந்திரதொகுதியுடன் இணைக்கப்பட்டு உடனடியாக அப்புறப்படுத்தும்செயற்பாடுநடைபெறும்என்றுதெரிவிக்கப்பட்டது. (எ-7)



## அரச உதவியில் அமைக்கப்படும் வீடுகள் கட்டுவதற்கு மணல் இன்றி அவதி

பயனாளிகள் விசனம்

**யாழ்ப்பாணம்.ஏப்.18**
**யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் அமைக்கப்பட்டுவரும் வீடுகளுக்கு இன்னமும் மண் கிடைக்காமையால் பெரிதும் அல்லல்பட வேண்டியுள்ளது என்று பயனாளிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பயனாளிகள் தெரிவித்ததாவது:
தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக5லட்சம்ரூபாபெறுமதியானவீட்டினை அமைப்பதற்கு நாம் தெரிவு செய்யப்பட்டோம். தற்போது சங்கானை, சண்டிலிப்பாய், கோப்பாய், ஊர்காவற்றுறை ஆகியபிரதேசங்களில்வீடமைப்புக்கான அத்திபாரம் இடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆனால்இன்னமும்எமக்குமண்கிடைக்கவில்லை. அத்திபாரம் கட்டுவதற்கான மண்ணை வெளியில் அதிக விலைக்கு கொள்வனவுசெய்து கட்டுமான பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். ஒரு பார ஊர்தி மண் 36 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்கின்றோம். ஆனால் அதிகார சபையின் மூலம் 22 ஆயிரத்து 600ரூபாவுக்கு கொள்வனவு செய்து வழங்க முடியும்.

அத்திபாரம்கட்டலுடன்மேலதிககட்டுமானங்களை மேற்கொள்ள முடியாமல் அவதிப்படுகின்றோம். இந்தகட்டுமானங்களுக்கு நாகர் கோயில் மண் பெற்றுக் கொடுப்பது வழமை.

ஆனால்இன்னமும்அதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் எடுக்கவில்லை. அதிக விலை கொடுத்து மண்ணை வெளியில் எம்மால் வாங்க முடியாது. வீடுகட்டிமுடிப்பதற்கான மண்ணையும் அதிகளவில் பெற்றுக்கொள்ள முடியாது. ஆகவே மண்ணை பெற்றுக் கொடுப்பதற்கு உரிய அதிகாரிகள் முன்வர வேண்டும் - என்றனர்.

இது தொடர்பில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்ட பணிப்பாளர் எம்.ரவீந்திரனை தொடர்பு கொண்டுகேட்ட போது, 'வீடு கட்டுவதற்கான மண் நாகர் கோயில் பகுதியில் இருந்து பெறப்படுவது வழமை. மாவட்டச்செயலரின் ஊடாக இதனை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என்று தெரிவித்தார். யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையால்ஒருவீடுதலா5லட்சம் பெறுமதியில்640வீடுகள்நடப்புவருடத்தில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. மூளாய் 50, துணைவி 50, அராலி தெற்கு 114, அராலி கிழக்கு 105, அராலி மேற்கு70, ஈவினை 32, வரணி10, மந்துவில் 20, மெலிஞ்சிமுனை 30, நாரந்தனை 10, சின்னமடு 25, தோப்பு 10, பொக்கணை 36, அச்சுவேலி 25, சண்டிலிப்பாய் 10, கட்டுடை 10, காக்கை தீவு 30 உட்பட 640 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. (எ-7)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு நாளை நேர்முகத்தேர்வு

முல்லைத்தீவு ஏப்18
கடந்த மாதம் நியமனம் வழங்கப்படாது தவறவிடப்பட்ட தொண்டர் ஆசிரியர்களை நாளையதினம் நேர்முகத்தேர்வுக்காக கொழும்பு வருமாறு மத்தியகல்வியமைச்சுகடிதங்கள் அனுப்பியுள்ளது.

மத்திய கல்வியமைச்சின் செயலாளர் சுனில் கெட்டியாராட்சியின் கையொப்பத்துடன் அழைப்புக் கடிதங்கள் தொண்டர் ஆசிரியர்களின்தனிப்பட்டமுகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தேர்வின்போதுதொண்டர் ஆசிரியராகக்கடமையாற்றத் தொடங்கிய காலத்தை உறுதிப்படுத்தும் முகமாக சம்பவத்திரட்டினை உறுதிப்படுத்தி சத்தியக்கூற்று சமர்ப்பித்தல் வேண்டும் எனக் குறிப் பிடப்பட்டுள்ளது.

இத்துடன் தேசிய அடையாளஅட்டை, பிறப்புச்சான்றிதழ், ஜி.சி.ஈ சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சைப்பெறுபேற்றுச்சான்றிதழ்கள்என்பவற்றைஎடுத்துவருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் சிலருக்கு இக்கடிதம் கிடைக்கவில்லை என அறியமுடியகிறது. (எ-72)

## இன, மத, கட்சிப் பேதங்களை மறந்து அபிவிருத்திக்காக ஒன்றிணையுங்கள்!

வவுனியா நகரசபையின் புதிய தலைவர் கௌதமன் அழைப்பு



தவிசாளர்



உ[illegible]சாளர்

வவுனியா ஏப்18
இனமதபேதங்களைமறந்து நாட்டினதும் நகரங்களினதும் அபிவிருத்திக்காகவும் ஒற்றுமைக்காகவும் இணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வவுனியா நகர சபையின் புதிய தவிசாளர் இ.கௌதமன்.

வவுனியா நகரசபைக்கான தவிசாளர், உபதவிசாளர்தெரிவுக்கான முதலாவது சபை அமர்வு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிரஞ்சன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன்போதேபுதியதவிசாளராகதமிழர்விடுதலைக்கூட்டணியைச் சேர்ந்த இ.கௌதமன் தெரிவுசெய்யப்பட்டார். அதன்பின் உரையாற்றும் போதேஅவர்மேற்படிதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
எனக்கு வாக்களித்த, வாக்களிக்காதஉறுப்பினர்கள்அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இனி வருகின்ற காலத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களாகிய நாம் அனைவரும் வவுனியாநகரின்அபிவிருத்தியையும் வளர்ச்சியையும் மட்டும் நோக்கமாகக்கொண்டு செயற்படவேண்டும். தெரிவு செய்யப்பட்ட உங்கள் அனைவரது ஆதரவும் இங்கு இல்லாமல்நகரைஅபிவிருத்திசெய்ய முடியாது. எனவே உங்கள் அனைவரதும்ஆலோசனைகளையும் ஆதரவுகளையும் நான் எதிர்பார்த்துநிற்கிறேன் - என்றார்.

உப தவிசாளராக சிறிலங்கா கட்சியிலிருந்துதெரிவுசெய்யப்பட்ட சு.குமாரசாமி, "எனது நோக்குஅபிவிருத்திமட்டுமே. ஏற்கனவே3தடவைகள்நான் இந்த சபையிலே உறுப்பினராக இருந்திருக்கின்றேன். அந்தவகையில் பல அனுபவங்கள் எனக்கு இருக்கின்றன. தவிசாளராகவருவதற்குரிய தகுதிகள் அனைத்தும் எனக்கிருந்தும் கட்சியின் நலன்களுக்காக சில விட்டு கொடுப்புகளைச் செய்து உப தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டேன்.

இன.மத.கட்சி வேறுபாடுகளை மறந்து சபையை சரியாக வழிநடத்துவதற்கு நான் நிச்சயம் உதவி புரிவேன்" என்று தெரிவித்தார். (எ-110)

## பலசரக்குக் கடை துப்புரவில்லை; ரூ.50,000 தண்டத்துடன் மூடப்பட்டது

பருத்தித்துறை நீதிமன்று அதிரடி உத்தரவு

பருத்தித்துறை, ஏப். 18
சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய வர்த்தக நிலைய நடத்துநருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது பருத்தித்துறை நீதிமன்று. குறைபாடு களை நிவர்த்தி செய்யும்வரை நிலையத்தைச்சீல்வைத்துமூடுமாறும் உத்தரவிட்டது.

அதுட்டுமன்றி, சீர்கேடாக வர்த்தக நிலயங்களை வைத்திருந்த மேலும் ஒன்பது வர்த்தகர்களுக்கு 33 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரிவு 11 பொதுச்சுகாதாரபரிசோதகர்பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் அண்மையில் திடீர் பரிசோதனைகளைநடத்தினர். சுகாதாரத்துக்குக் கேடான வகையில் கடைகள் காணப்பட்ட 15 வர்த்தகர்களுக்குஎதிராகநீதிமன்றில்வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

அதில் சுகாதாரத்துக்குக் கேடான விதத்தில் வர்த்தக நிலையத்தை வைத்திருந்தமை, பதனிழந்தஉணவுப்பொருள்களைவிற்பனைக்காக வைத்திருந்தமை, திகதி காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனைக்காக வைத்திருந்தமை, பிழையான விதத்தில் சுட்டுத் துண்டிட்டு விற்பனை செய்தமை உள்ளிட்ட பத்துக் குற்றச்சாட்டுக்களுடன் வர்த்தகர் ஒருவருக்கு எதிராக பருத்தித்துறை பிரிவு 11 பொது சுகாதார பரிசோதகர் ஆ. ஜென்சன் றொனால்ட் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு கடந்த வாரம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வர்த்தகர் குற்றத்தைஒப்புக்கொண்டதையடுத்து50ஆயிரம்ரூபாதண்டம்விதித்துதிருப்திகரமானதிருத்தம் செய்யும்வரை வர்த்தக நிலையத்தைசீல்வைக்குமாறுசுகாதாரப் பகுதியினருக்கு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். அதன்படி வர்த்தக நிலையம் சீல் வைக்கப்பட்டது.

இதேவேளை பொது சுகாதாரப் பரிசோதகரால்தாக்கல்செய்யப்பட்ட15 வழக்குகளில் மேலும் எட்டு வழக்குகளுக்குரியவர்களுக்குமொத்தமாக 33 ஆயிரம்ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுஎன்றுமேலும்தெரிவிக்கப்பட்டது. (எ-4-9)




## சகலதுறைகளிலும் ஆர்வம் செலுத்த வேண்டும்

### இளைஞர்களுக்கு காத்தான்குடி நகர சபை உறுப்பினர் அறிவுரை

மட்டக்களப்பு, ஏப்.18

வளர்ந்துவருகின்றஎம்இளைஞர்சமூகம்விளையாட்டுத்துறையோடுமாத்திரமன்றி, கல்வி, மார்க்கம் சார்ந்த இரு விடயங்களிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் காத்தான்குடி நகர சபை உறுப்பினருமான ஷிப்லி பாறூக் தெரிவித்தார்.

கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்தின் நிர்வாகஎல்லைக்குட்பட்டஓட்டமாவடிப்பிரதேசத்திலுள்ள விளையாட்டுக் கழகமொன்றுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

"விளையாட்டுக்கழகங்கள்தங்களைவிளையாட்டுத் துறையோடு மாத்திரம் மட்டுப்படுத்திக் கொள்ளாமல் நம்சமூகம் சார்ந்த ஏனைய விடயங்களிலும்இளைஞர்களைஅதிகம்வளப்படுத்தவேண்டியதொரு தேவைப்பாடு இருக்கின்றது.

நம் மாவட்டத்தின் அரச புள்ளிவிவரங்களைப் பார்க்கின்றபோதுஎமதுமாவட்டத்திலுள்ளமூன்று முஸ்லிம் பிரதேசங்களில் கூடுதலான சமுகவிரோதச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன என்று தெரிகின்றன.

அதனால் சமூகத்தில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களுக்கு எவ்வாறான பங்களிப்புக்களை செய்ய முடியும் என்பதனையும் ஆராய்ந்து அந்தச்செயற்பாடுகளை செயற்படுத்த வேண்டும்" என்றார். (ற-ரி5)

## உணவகங்களில் பரிசோதனை

மட்டக்களப்பு,ஏப்.18

மட்டக்களப்பு நகரில் 50 க்கும் அதிகமான உணவகங்கள் நேற்றுப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

சுத்தமான, நல்ல பழுதடையாத உணவுப் பொருள்களை மக்கள் பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே சுகாதார அமைச்சால், இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் மருத்துவர் திருமதி கிறேஸ் நவரெட்ணராஜாதலைமையில்முன்னெடுக்கப்பட்ட இந்தப்பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. காலவதியான உணவுப் பதார்த்தங்கள், மரக்கறிகள் மற்றும் குளிர்பானங்கள் என்பனகைப்பற்றப்பட்டதுடன், தொடர்புபட்ட உரிமையாளர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ற.ரி2)



### தொடர் போராட்டத்தின் பின்னர்

# பல்கலை. ஊழியர்கள் மீண்டும் கடமைக்கு

கொழும்பு, ஏப்.18

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் நேற்று மீண்டும் கடமைக்குக்திரும்பியுள்ளனர் என்று பல்கலைக்கழக ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் 44 நாள்கள் தொடர் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இந்தக் காலப்பகுதியில் 15 பல்கலைக்கழகங்கள்உள்ளிட்டசகலஉயர்கல்விநிறுவனங்களின் கல்வி நடவடிக்கைகள்பாதிக்கப்பட்டன.

மாதாந்தநிலுவைக்கொடுப்பனவு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கல்வி சாரா ஊழியர்கள் இந்தப் பணிப்புறக்கணிப்பைமேற்கொண்டனர். 2016 ஆம் ஆண்டு உடன்பாடு காணப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என கல்வி சாரா ஊழியர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். கடந்த 12 ஆம் திகதி அவர்களது கோரிக்கைக்கான தீர்வு கிடைத்ததைத் தொடர்ந்து சேவைக்குத் திரும்பியுள்ளனர். (ற-ரி5)



## சுற்றுலாத் தளமாகும் பொகவந்தலாவ

### ரணில் தலைமையிலான குழு ஆய்வு

நுவரெலியா,ஏப்.18

நுவரெலியா, பொகவந்தலாவ பகுதியில் குழிப்பந்தாட்டகோல்ப்மைதானம், மற்றும் உல்லாச விடுதிகளை அமைப்பதற்கான இடங்களை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

கடந்தஉள்ளூராட்சிமன்றத்தேர்தல்காலத்தின்போதுபரப்புரைநடவடிக்கைகாகஹற்றனுக்குச்சென்றிருந்ததலைமைஅமைச்சர் நுவரெலியா மாவட்டத்தில் சில பகுதிகள் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் விரும்பத்தக்க பிரதேசங்களாக மாற்றியமைக்கப்படும்என்று தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, பொகவந்தலாவ பிரதேசத்தை உல்லாசப்பயணிகள் விரும்பதக்க பிரதேசமாக மாற்றியமைக்கும் நடவடிக்கை நேற்று தலைமை அமைச்சரால் ஆரம்பிக்கப்பட்டது.

பொகவந்தலாவபிரதேசத்தில்உள்ளகிறிஸ்தவ ஆலயம் ஒன்றுக்கும் இதன்போது அவர் பயணம் மேற்கொண்டார்.

வெகுவிரைவில் அப் பகுதியை சுற்றுலாப் பயணிகள்அதிகமாகவருகைதரும்பிரதேசமாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தலைமை அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போதுநுவரெலியாமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.பியதாஸ, ஹற்றன்டிக்கோயாநகரசபைப்பிரதித்தவிசாளர் ஏ.எம்.பாமிஸ் உள்ளிட்ட பலர் வருகை தந்திருந்தனர். (ற.ரி2)

## ஆணொருவரின் சடலம் மீட்பு

கொழும்பு, ஏப்.18

மகரகம, பொரலஸ்கமுவபகுதியில்குளத்தில் இருந்து நேற்று ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டது. பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே இந்தச் சடலம் மீட்கப்பட்டது. பன்னிபிட்டிய, பகுதியைசேர்ந்த56வயதுடையஒருவரேஇவ்வாறுசடலமாகமீட்கப்பட்டார். சடலம் களுபோவில மருத்துவமனையில் உடற்கூற்றுப்பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளதுடன்மகரகமபொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)



## அன்னை பூபதியின் நினைவிடத்தில் சிரமதானம்

மட்டக்களப்பு, ஏப்.18

மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர்களால் கல்லடியில் உள்ள அன்னை பூபதியின் நினைவிடத்தில் நேற்று சிரமதான நிகழ்வொன்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்புமாநகரசபைஅமர்வில்விடுக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையிலேயேசிரமதானம்மேற்கொள்ளப்பட்டது.

அதில் மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் எஸ்.சத்தியசீலன், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் மாநகரசபை ஊழியர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ற-ரி5)

## பெண்ணொருவர் சடலமாக மீட்பு

மாத்தறை,ஏப்.18

மாத்தறை, கொட்டவத்த பகுதியிலிருந்து பெண்ணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

திக்வெல்ல பிரதேசத்தை சேர்ந்த 35 முதல் 40 வயதிற்கு இடைப்பட்ட பெண்ணொருவரே சடலமாக மீட்கப்பட்டார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்தே சடலம் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த பெண் மனநிலை பாதிக்கப்பட்டவர் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார்விசாரணைகளைமுன்னெடுத்து வருகின்றனர். (ற.ரி2)

## யானைத் தாக்குதலில் இளைஞர் உயிரிழப்பு

புத்தளம்,ஏப்.18

காட்டு யானைத் தாக்குதலுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் நேற்றிரவு உயிரிழந்தார்.

கருவலகஸ்வெவ பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே உயிரிழந்தார்.

இச் சம்பவம் புத்தளம் அநுராதபுரம் வீதியில் மீஓயாவுக்கு அருகில் இடம்பெற்றது.

இரவுப் பொழுதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த இவர் காட்டு யானைத் தாக்குதலுக்கு உள்ளாகி படுகாயமடைந்த நிலையில் புத்தளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற.ரி2)

## விபத்தில் ஒருவர் உயிரிழப்பு; மூவர் காயம்

காலி, ஏப்.18

காலி மாத்தறைபிரதானவீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்தார். மூவர் காயமடைந்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவுநடந்தது.

மாத்தறை நோக்கிப் பயணித்தமுச்சக்கரவண்டியுடன் வான்மோதியேவிபத்துக்குள்ளானதுஎனத்தெரிவிக்கப்பட்டது.

விபத்தில்ஹபராதுவப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

விபத்தை ஏற்படுத்திய வான் தப்பிச் சென்றது எனவும் இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிகவிசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என வும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)



## தங்கத்தில் காலணிகள்

பாகிஸ்தானைச் சேர்ந்த தொழிலதிபர் சல்மான் சாஹித், அண்மையில் நடைபெற்ற திருமண நிகழ்வொன்றில் அணிந்திருந்த ஆடை பரபரப்பாகியிருக்கிறது.
தங்க இழைகளால் நெய்யப்பட்ட 'சூட்', அதுக்குப் பொருத்தமாகத் தங்கப் படிகங்களால் ஆன 'டை', தங்கத்தால் செய்யப்பட்ட காலணி போன்றவற்றை அணிந்திருந்தார். இதைப் பார்த்தவர்கள் ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்திருக்கிறார்கள். சூட், டை, காலணி எல்லாம் சேர்த்து 25 லட்சம் (பாகிஸ்தான் மதிப்பில்) செலவாகியிருப்பதாகச் சொல்கிறார்கள்.
"எனக்கு எப்போதும் தங்கக் காலணி அணிய வேண்டும் என்று விருப்பம். பொதுவாகத் தங்கத்தைக் கழுத்தில் ஆபரணமாக மக்கள் அணிகிறார்கள். செல்வம் உங்கள் கால் தூசிக்குச் சமமானது என்பதைச் சொல்வதற்காகவே நான் தங்கக் காலணிகளை அணிய விரும்புகிறேன்" என்றாராம் சல்மான் சாஹித். (ம)

# அமெ. அதிபராகப் பதவி வகிப்பதற்கு அறத்தின்படி ட்ரம்புக்கு தகுதியில்லை

### உளவுத்துறை முன்னாள் அதிகாரி ஜேம்ஸ் கோமே பரபரப்புக் கருத்து



வொஷிங்டன், ஏப். 18
''அமெரிக்காவின் அதிபராகத் தொடர்வதற்கு அறத்தின்படி ட்ரம்புக்குத் தகுதி இல்லை" என்று தெரிவித்தார் அமெரிக்க உளவுத் துறையின் முன்னாள் இயக்குனர் ஜேம்ஸ் கோமே.
அமெரிக்க அதிபர் தேர்தலில் ட்ரம்ப் தன்னை எதிர்த்து போட்டியிட்ட ஹிலாரி மீது ஏகப்பட்ட குற்றச்சா ட்டுக்களை வைத்தார். அவற்றில் ஒன்று. "ஹிலாரி தனது தனிப்பட்ட மின்னஞ்சலை அரச அலுவல்களுக்குப் பயன்படுத்தினார்' என்பதாகும். இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் கோமே அவசர அவசரமாக விசாரித்து "ஹிலாரி குற்றமற்றவர்" "என்று அறிவித்தார். இந்த அறிவிப்பு வந்ததுமுதல் ட்ரம்புக்கும் கோமேக்கும் இடையில் அவ்வப்போது கார சார விவாதங்கள் இடம்பெறும். அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்றதும் கோமே பதவி நீக்கம் செய்யப்பட்டார். இதையடுத்து அமெரிக்க ஊடகம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய செவ்வியிலேயே இந்தக் கருத்தைப் பதிவு செய்தார் கோமே.
"ட்ரம்ப் மருத்துவ ரீதியாக இந்த நாட்டின் அதிபராக பதவி வகிக்கத் தகுதி உடையவர்தானா? அல்லது, அவர் ஞாபகமறதி நோயின் ஆரம்பக்கட்டத்தில் இருக்கிறாரா? என்னும் சர்ச்சைக்குள் போக நான் விரும்பவில்லை.
ஆனால், தார்மீக ரீதியாக எமது நாட்டின் அதிபராகப் பதவி வகிக்க அவருக்குத் தகுதி இல்லை. எமது நாட்டின் மரியாதை மற்றும் அடிப்படை சித்தாந்தங்களுக்கு அதிபர் மதிப்பளிக்க வேண்டும். மிக முக்கியமாக உண்மையானவராக இருக்க வேண்டும். ட்ரம்ப்பால் இதையெல்லாம் கடைபிடிக்க இயலாது" என்று கோமே மேலும் தெரிவித்தார். (ம)

## ஆதாரங்களை அழிக்கவில்லை

*ரஷ்யா அறிவிப்பு*

சிரியாவின் கவுட்டா மற்றும் டௌமா நகர்களில், இரசாயனத் தாக்குதல் நடத்ததாகச் சொல்லப்படும் இடங்களில் தம்மால் எந்த ஆதாரங்களும் அழிக்கப்படவில்லை என்று தெரிவித்தார் ரஷ்ய அயலுறவுத் துறை அமைச்சர் செர்கெய்.
"தாக்குதல் நடத்தப்பட்டதாகச் சொல்லப்படும் இடத்தில் உள்ள ஆதாரங்களில் ரஷ்யா தலையிடவில்லை என்று நான் உத்தரவாதம் தருகிறேன். ஏப்ரல் 7ஆம் திகதியன்று இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன என்ற குற்றச்சாட்டை நாம் மறுப்பதில் உறுதியாக உள்ளோம். இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டது என ஊடக செய்திகளை வைத்தும் சமூக ஊடகங்களின் அடிப்படையிலும்தான் அமெரிக்க, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாடுகள் தாக்குதல் நடத்தியுள்ளன" என்று செர்கெய் மேலும் தெரிவித்தார். (ம)



# சிரியாவைச் சீண்டினால் எதிர்பாராத விளைவுகள்

### புடின் பகிரங்க எச்சரிக்கை



மொஸ்கோ. ஏப். 18
"அமெரிக்காவும் ஏனைய மேற்கத்தேய நாடுகளும் சிரியாவை மீண்டும் சீண்டினால், எதிர்பாராத விளைவுகளைச் சந்திக்க நேரிடும். அத்துடன் பன்னாட்டு உறவில் பெரும் விரிசல் ஏற்படும்" என்று தெரிவித்தார் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின்.
சிரியாவில் அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழு ஆதிக்கம் செலுத்தும் டௌமா மற்றும் கவுட்டா நகர்களில் கடந்த வாரம் இரசாயனத் (வேதியல்) தாக்குதல் நடத்தப்பட்டது. சிரிய அரசே இந்தத் தாக்குதலை நடத்தியது என்று உறுதிப்படுத்துகின்றன மேற்கத்திய நாடுகள். சிரியாவில் செயற்படும் போர்க் கண்காணிப்பகம், போர் இடம்பெறும் பகுதிகளில் மீட்புப் பணியில் ஈடுபட்டுவரும் 'வைட் ஹெல்மட்ஸ்' அமைப்பு ஆகியவை வழங்கிய தகவல்களும், சிரிய அரசுக்கு எதிராகவே உள்ளன.
இதையடுத்து கடந்த சனிக்கிழமை சிரியா மீது அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியன இணைந்து தாக்குதல் நடத்தின. சிரியாவுக்கு பெரும் ஆதரவு கொடுத்துவரும் ரஷ்யா, ஈரான் ஆகியன இந்தத் தாக்குதலுக்குக் கடும் கண்டனம் தெரிவித்திருந்தன. இந்தப் பின்னணியில் மேற்கத்திய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் பகிரங்க எச்சரிக்கையை விடுத்தார் ரஷ்ய அதிபர் புடின்.

> சிரியாவில் செயற்படும் போர்க் கண்காணிப்பகம், போர் இடம்பெறும் பகுதிகளில் மீட்புப் பணியில் ஈடுபட்டுவரும் 'வைட் ஹெல்மட்ஸ்' அமைப்பு ஆகியவை வழங்கிய தகவல்களும், சிரிய அரசுக்கு எதிராகவே உள்ளன.

"சிரியா மீது மேற்கத்திய நாடுகள் மீண்டும் தாக்குதல் நடத்தினால் கடும் விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும். அது பன்னாட்டு உறவில் மிகப்பெரும் குழப்பத்தை ஏற்படுத்தும். அத்துடன் சிரியா விவகாரத்தில் அரசியல் ரீதியாக தீர்வு காணும் வாய்ப்பை, மேற்கத்திய நாடுகளின் தாக்குதல் சிதைத்து விட்டது" என்று புடின் மேலும் தெரிவித்தார்.
ஈரான் அதிபர் ரவுகானியும் இவ்வாறானதொரு எச்சரிக்கையை ஏற்கனவே வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தன்சானியாவில் வெள்ளப்பெருக்கு

டார், ஏப்ரல் 18
தன்சானியா நாட்டின் டார் ஏஸ் சலாம் பகுதியில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்துவருவதை அடுத்து, அங்கு கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.
கடந்த இரண்டு வாரகாலமாக அங்கு மழை பெய்து வருகின்ற போதிலும் கடந்த நான்கு தினங்களாகப் பெய்த கனமழையே வெள்ளப்பெருக்கு ஏற்படக் காரணமாகியது என்று குறிப்பிடப்படுகிறது. பதிவாகிய தகவலின் அடிப்படையில் ஒன்பது பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் தேடப்பட்டு வருகின்றனர். இதனால் உயிரிழப்பு அதிகரிக்கும் அபாயம் உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.
நகரில் உள்ள முக்கிய சாலைகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. மழை தொடரும் என்பதால் வெள்ளம் அதிகரிகும் அபாயம் உள்ளது. இதனால் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் என்று அரசு அறிவித்துள்ளது.
மீட்புப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உலர் உணவுகள் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் விநியோகிக்கப்படுகின்றன. அபாயகரமான பகுதிகளில் இருப்பவர்கள் தற்காலிகத் தங்குமிடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)






வாடிக்கையாளர் அனைவருக்கும் அக்ஷய திருதியை திருநாள் வாழ்த்துக்கள்
நகைப் பிரியர்களின் நந்தவனம்
உதயா
ஜுவல்லர்ஸ்
தரம் மாறாத
தங்க நகைகளுக்கு
வரம்போல் ஓர் இடம்
அக்ஷய திருதியை
18.04.2018
மாற்றம் விரும்பும்
மங்கையருக்கு ஏற்றாற்போல்
வண்ண மயமான
காட்சிக் கூடத்தில்
எண்ணம் போல்
நகைகளைப் பெற்றிட
தன்னிகரில்லா நகைக் கூடம்
இன்றைய தினம்
தங்கத்தினை
கொள்வனவு செய்யும்
அனைத்து வாடிக்கை
யாளர்களுக்கும்
பெறுமதிமிக்க அன்பளிப்பு
பொருட்கள்
காத்திருக்கின்றன.
அக்ஷய திருதியையை முன்னிட்டு
விசேட சலுகைகளுடன்
நவீன டிசைன்களில் நகைகள்
பெற்றுக்கொள்ளுங்கள்
உதயா ஜுவல்லர்ஸ்
79 G. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4434, 021 221 6877


சகல செல்வங்களும் அனைவரது வாழ்விலும் நிறைவாய் பொழிந்திட பிரார்த்திக்கின்றோம்
யாழ் நகரில் புதுப் பொழிவுடன்
வெஸ்ரன் ஜுவல்லர்ஸ்
Western Jewellerss
அக்ஷய
திருதியை
இன்று
18.04.2018
ON 18TH OF APRIL
குறையாத செல்வத்தை வளமாக அள்ளித்தரும்
அதிசயத் திருநாளாம் அக்ஷய திருதியை
இன்று கொண்டாடப்படுகின்றது.
இத்திருநாளில் உங்கள் வாழ்வில் மேன்மேலும்
சுபீட்சத்தை உருவாக்கும் பெறுமதிமிக்க
நகைகளை எமது வெஸ்ரன் ஜுவலர்ஸில்
கொள்வனவு செய்து மகிழுங்கள். 2018
ஆண்டுக்கான
வெஸ்ரன் ஜுவலர்ஸின்
அக்ஷய திருதியை அன்று வழங்கப்பட இருக்கும்
மாபெரும் சலுகையை தவறவிட வேண்டாம்.
அக்ஷய
திருதியை
தினமான இன்று
18.04.2018
எம்மிடம் தங்கத்தை
கொள்வனவு
செய்யும்
வாடிக்கையாளர்
களில் குழுக்கல்
முறையில் தெரிவு
செய்யப்பட்டு
02 அதிஸ்ட
சாலிகளுக்கு 3
நாள்கள்
மலேசியா
சுற்றுப் பயணம்
மேற்கொள்ள
வாய்ப்பு
வழங்கப்படும்.
இல.81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 6916
ஒரு முறை விஜயம் செய்யுங்கள் மீண்டும் மீண்டும் வரத்தூண்டும்.
எம்மிடம் தங்க நகைகளை மிகவும் துல்லியமாக
தரம் பார்த்து சான்றிதளைப் பெற்றுக்கொள்ளலாம்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தமிழ்த் தேசியமும் கட்சிகளும் ஆபத்தில்

உள்ளூராட்சிச் சபைகளில் ஆட்சியைப் பிடிப்பது என்பது வடக்கு மாகாணத்தில் சதுரங்க ஆட்டம் போன்றாகிவிட்டது. சபை அமர்வு நடக்கும் வரைக்கும் யார் ஆட்சியைப் பிடிக்கப்போகிறார்கள் என்பது தெரியாதுவிறுவிறுப்பான, கடும்திருப்பங்கள்நிறைந்த திரைப்படம் மாதிரி நடக்கின்றதுஅதிகாரப் போட்டி. தமிழர்களின் விடுதலை, ஒற்றுமை, இறைமை, தேசியம் எல்லாம் காற்றில் பறக்க, ஆட்சி, அதிகாரத்தைப் பிடிப்பதுமட்டுமேநோக்கம்என்றுஎல்லாக்கட்சிகளும் நடந்துகொள்கின்றன. அதில் தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலும், தெற்கைத் தளமாகக் கொண்ட கட்சிகளுக்கு இடையிலும் எந்தவித வேறுபாடும் இல்லை.

இந்தப்போட்டிகளையும், அதிகாரமோதுகைகளையும் பார்க்கும்போது, ஒருவிதத்தில்தமிழ்அரசியல்பண்பாடு முற்றுமுழுதானமக்களாட்சிப்பண்புக்குள்சென்றுவிட்டதோஎன்று தோன்றுகின்றது. 30 வருடகால ''ஏகஅதிகாரச்செலுத்துகை''க்குப்பின்னர், ஆட்சிஅதிகாரத்தை சூட்சுமமாகவும் சூதுக்கூடாகவும் கைப்பற்றுகின்ற முழுமையானபோட்டிஅரசியலுக்குள்தமிழ்க்கட்சிகள் மூழ்கிப் போயிருக்கின்றமையை இந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் தோலுரித்துக் காட்டியிருக்கின்றன.

தூய தேசியவாதம், தமிழர் நலவாதம், தாயக மற்றும் தேசக் கோட்பாடுகள் எல்லாமும் கட்சிகளின் அரசியல் இருப்புக்கான வெற்றுக் குரல்கள் என்பதையும் இந்த அதிகாரப் போட்டி மக்கள் முன் நெட்டித்தள்ளியிருக்கிறது. எல்லாக் கட்சிகளும் தமது வேடம் கலைந்து அம்பலப்பட்டு நிற்கின்றார்கள். துரோகிகள் யார், வீரர்கள் யார், துரோகம் எது, வீரம் எது, போட்டி எது, சூது எது என்று எவரையும் எதையும் தனிமைப்படுத்த முடியவில்லை. எல்லாக் கட்சிகளுக்குள்ளும் இவை எல்லாமும் இருக்கின்றன. இங்கு எவரும் தூய்மைவாதிகள் கிடையாது என்பதை இந்தத் தேர்தல் நன்கு உணர்த்திவிட்டுப் போயிருக்கிறது.

தமிழ்க் கட்சிகளின் இந்தப் போக்கு, கிட்டத்தட்ட 3 தசாப்தங்களாகத் தமிழர்களை அடக்கி ஒடுக்கி இரண்டாம்நிலைக்குடிமக்களாக்குவதில் தொடர்ந்து விடாப்பிடியோடு செயற்பட்டு வந்த தெற்குக் கட்சிகளுக்கு, வடக்கில் உள்ளூராட்சி அதிகாரங்களை அள்ளி வழங்குவதற்கு வழி சமைத்துக் கொடுத்திருக்கிறது. வவுனியாவிலும் மன்னாரிலும் ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியைக் கைப்பற்றி இருக்கின்றன.

போருக்குப்பின்னரானசூழலில்தமிழ்அரசியலின்போக்கைத்தெளிவுபடுத்தக்கூடியமிகமுக்கியமானவிளைவாக இதனைப்பார்க்கலாம்.தெற்கிலேஇனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் தமிழர்களுக்கு எதிர்ப் பக்கத்தில் ஆளாளுக்கு ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லிக் கொண்டு சிங்களக் கட்சிகள் ஒன்றிணைந்து வரும் போது, தமிழ்க் கட்சிகள் தமக்கிடையிலான அதிகாரப் போட்டியின் காரணமாக வடக்கிலே தேசியக் கட்சிகள் காலூன்று வதற்கு இடமளித்திருக்கின்றன.

தமிழ்க் கட்சிகளின் இன்றைய இந்தப் போக்கு , அவற்றின் அரசியல் அடிநாதமாக இருக்கும் தமிழ்த் தேசியத்தில் மிக மோசமான பாதிப்பை, உடைப்பை ஏற்படுத்தும். கிடைத்திருக்கும் இந்தச் சிறு இடைவெளியூடாக இன்னும்பலமாகத்தமதுகால்களைஊன்றிநிற்பதற்குத் தேசியக்கட்சிகள்நிச்சயமாக முயலும். அதனைத்தடுக்கக்கூடிய வியூகமோ, தந்திரமோ தமிழ் அரசியல் கட்சிகளிடம் இருப்பதாகத் தோன்றவில்லை.

தமிழ்த்தேசிய அரசியலை இழந்த பின்னர், தமிழ் அரசியல்கட்சிகளுக்குஇங்கேவேலையும்இருக்காது. தேவையும் இருக்காது. இந்த ஆபத்தை உணர்ந்துகொள்ளாது அதிகாரப்போட்டியில்குதித்திருக்கும்தமிழ்க்கட்சிகள், அதற்கான விளைவுகளையும் பயனையும் விரைவில் அனுபவிக்கப் போகின்றன என்பது திண்ணம்.



# காணாமற்போனவர்கள் குறித்த மர்மம் துலங்குமா?

சேரலாதன்

காணாமல்போனவர்களில் பலர் தடுப்பு முகாம்களில் சுயநினைவில்லாத நிலையில் காணப்பட்டனர் என்று பூசா தடுப்பு முகாமிலிருந்து அண்மையில் விடுதலையான முன்னாள் போராளி ஒருவர் தெரிவித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

காணாமல் போனவர்களின் விவகாரம் தமிழர்கள் மத்தியில் பூதாகாரம் எடுத்துக் காணப்படுகின்றது. அவர்களின் உறவுகள் கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாகத் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். கண்ணீரும் கம்பலையுமாக இவர்கள் காணப்படுகின்றமை தாங்க முடியாத வேதனையை ஏற்படுத்தி வருகின்றது.

**பல்வேறு சந்தர்ப்பங்களில் படையினரால் கைது செய்யப்பட்டோரே காணாமல்போயினர்**

வீடுகளில் வைத்துக் கைது செய்யப்பட்டவர்களும், போர் முனையில் வைத்துக் கைது செய்யப்பட்டவர்களும், படையினரிடம் சரணடைவதற்காகச் சென்றவர்களும், போர் இடம் பெற்றுக் கொண்டிருக்கும்போது அச்சம் காரணமாகப் படையினரின் பிரதேசத்தினுள் உள்நுழைந்தவர்களுமெனப் பலர் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களின் உறவுகள் இவர்களை எங்கு தேடியும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனாலும் உறவினர்கள் இன்னமும் நம்பிக்கையை இழந்துவிடவில்லை. அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அரச தலைவர், "எங்கு தேடியும் காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால் அவர்களின் உறவுகளுக்கு நட்டஈடு வழங்குவது தொடர்பாக அரசு சிந்தித்து வருகின்றது" எனத் தெரிவித்தமை காணாமல் போனவர்களது உறவுகளுக்கு மிகக் கடுமையான வேதனையை ஏற்படுத்திவிட்டது. ஆனாலும் அதன் பின்னரும் அவர்கள் நம்பிக்கையை இழந்துவிடவில்லை.

**காணாமல் போனோரில் பலர் உயிருடன் உள்ளதான செய்தி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது**

தற்போது காணாமல் போனவர்களில் பலர் உயிருடன் இருப்பதாக வெளிவந்த செய்தி. அந்த உறவினர்கள் மத்தியில் ஒரு புறத்தில் மகிழ்ச்சியையும் மறுபுறத்தில் வேதனை கலந்த எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

அரசு இந்த விடயத்தில் இனியும் மெத்தனமாக இருக்க முடியாது. காணாமல் போனவர்கள் தமிழர்கள்தானேயென்ற அலட்சிய மனோபவம் அரசிடம் இனியும் இருக்குமேயானால், அதன் எதிர் விளைவுகள் மோசமானதாக அமைந்துவிடும்.

அண்மையில் இலங்கைக்குப் பயணம்மேற்கொண்டவெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் காணாமல் போனவர்கள் கண்டிபிடிக்கப்படுவதன் அவசியத்தை எதிர்கட்சித் தலைவரான சம்பந்தன் வலியுறுத்திக் கூறியுள்ளார். ஐ.நாவும் இந்த விடயத்தில் அதிக அக்கறை செலுத்தி வருகின்றது. இதனால் அரசு இனியும் மெத்தனமாக



இருந்துவிட முடியாது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகள்எவ்விதவிசாரணைகளுமின்றிப் பல ஆண்டுகளாகச் சிறைகளில் வாடி வருகின்றனர். பலர் பத்து ஆண்டுகளுக்கு மேலாகக்கூட இவ்வாறு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் குற்றவாளிகளென நிரூபிக்கப்பட்டால், தண்டனை வழங்கப்பட வேண்டும், நிரபராதிகள் எனக் காணப்பட்டால் விடுதலை செய்யப்படல் வேண்டும். இதில் ஒன்றையும் செய்யாது அரசு காலம் கடத்துவதை இனியும் அனுமதிக்க முடியாது.

**பெரும்பான்மை இனத்தவரால் கிள்ளுக் கீரையாகக் கருதப்படும்சிறுபான்மை இனத்தவர்கள்**

இந்த நாட்டைப் பொறுத்தவரையில், சிறுபான்மையின மக்கள் கிள்ளுக் கீரையாகவே கருதப்படுகின்றார்கள். அவர்களை மனிதர்களாகமதிக்கின்றமனோபாவத்தை இங்கு காணமுடியவில்லை. பௌத்த மதத்தைக் கடைப்பிடிப்பதாகக் கூறிக் கொள்பவர்கள், அதன் வழி நில்லாது அதர்மத்தைக் கையில் எடுத்துக்கொள்வது நல்லதல்ல. சிறுபான்மையினத் தலைவரான சம்பந்தனை எதிர்க் கட்சித் தலைவர் பதவியிலிருந்து அகற்ற வேண்டுமென ஒரு பகுதியினர் இனவாதக் கூச்சல் போடுகின்றனர். நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு கூட்டமைப்பு ஏதாவது நிபந்தனைகளை விதித்திருந்தால் அவை ஏற்றுக்கொள்ளப்படக் கூடாதென ஒரு சாரார் கூறி வருகின்றனர். ஆனால் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக இவர்கள் சிறிதுகூட அக்கறை காட்டுவதில்லை. மாறாகத் தமிழர்கள் படுகின்ற வேதனையில் இன்பம் காணத் துடிக்கின்றனர். இது எந்த வகையில் நியாயமெனத் தெரியவில்லை.

காணாமல் போனவர்களில் பலர் சுயநினைவின்றி தடுப்புக் காவலில் உள்ளதாக முன்னாள் போராளியொருவர் கூறியிருப்பது சாதாரணமானதொரு விடயமல்ல. இந்த விடயத்தில் அதிக கரிசனை காட்டப்படல் வேண்டும். ஆராய்ந்து பார்த்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரச தலைவரும், தலைமை அமைச்சரும், தாம் இந்த நாட்டின் தலைவர்கள் என்ற ரீதியில் உடனடியாகச் செயற்பட்டு நீதியை நிலைநாட்ட வேண்டும். காணாமல் போனவர்களும், அவர்களது உறவுகளும் விடுகின்ற கண்ணீரைச் சாதாரணமாகக் கருதிவிடக் கூடாது. அவர்களது கண்ணீருக்கு அதிக வலுவுள்ளது என்பதையும் மறந்துவிடக் கூடாது. இந்த விடயத்தில் எடுக்கப்படுகின்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் இந்த நாட்டின் மீதான தவறான அவப்பெயரைத் துடைத்தெறியும். உரியவர்கள் இதை உணர்ந்தால் அதுவே போதுமானது.

# நிலம் முழுவதையும் விடுவிப்பதில் இனியும் தாமதம் வேண்டாம்

இந்துமதி

வலிகாமம் வடக்கில் படையினரால் பொது மக்களிடமிருந்து அடாத்தாக அபகரித்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதிக் காணிகள் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மயிலிட்டி வடக்கு,தையிட்டி, மயிலிட்டி தெற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 683 ஏக்கர் பரப்பளவுள்ள காணிகள் இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளன. சுமார் 28 ஆண்டுகளாக இந்தக் காணிகள் படையினர் வசம் இருந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, இன்னமும் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவுள்ள காணிகள் படையினரால் விடுவிக்கப்படாத நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரையில் 3 ஆயிரம் ஏக்கர் என்பது மிகப்பெரிய தொகையாகும்.



செயலிழந்துபோய் பின்னர் உருக்குலைக்கப்பட்ட காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை

தமிழர்களின் காணிகளை அடாத்தாகப் பிடிப்பதும், அங்கு வேறு இன மக்களைக் குடியேற்றுவதும் இந்த நாட்டின் பேரினவாத அரசுகளுக்குக் கைவந்த கலையாகும். காலம் காலமாக இது ஒழுங்காக நிறைவேற்றப்பட்டு வருகின்றது. தமிழர்களுக்கெனத் தனியான நிலம் இருக்கக் கூடாது என்ற தீய நோக்குடன் இந்தச் செயற்பாடு இடம் பெற்று வருகின்றது.

**வடபகுதி மக்களில் வலிகாமம் வடக்கு மக்களே போரினால் பெருமளவில் பாதிப்புக்கு உள்ளாகினர்**

போரினால் குடாநாடு முழுவதும் பாதிப்புக்களை எதிர் கொண்டாலும், வலிகாமம் வடக்கு மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டார்கள். பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்களுக்குச் சொந்தமான பெருமளவான காணிகள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டன. எஞ்சிய பகுதியிலும் வாழமுடியாத நிலை உருவானதால், அங்கு வசித்த மக்கள் அனைவருமே இடம் பெயர்ந்து சென்றனர். பெருமளவு மக்களின் வாழ்வாதாரமாகத் திகழ்ந்த காங்கேசன்துறை சீமெந்து ஆலை, முற்றாகவே முடங்கிப் போனது. காங்கேசன் துறைமுகத்துக்குப் பொருள்களை ஏற்றிக் கொண்டு கப்பல்கள் வரும்போது பொருள்களை இறக்கும் பொருட்டு பெருமளவு தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்படுகின்றமை வழக்கமாகும். இதனால் பெருமளவு குடும்பங்கள் நன்மை பெற்றன. மயிலிட்டிக் கடற்பரப்பு அதிகமான மீன் வளத்தைக் கொண்டது. அவற்றின் சுவையும் அதிகமெனக் கூறுவார்கள். பாலூட்டும் தாய்மார்களுக்கு அதிக போசனையை வழங்கும் பொருட்டு சுறா மீனைக் கொள்வனவு செய்வதற்காக மக்கள் மயிலிட்டிக்குச் சென்ற காலமும் ஒன்றிருந்தது. இதைவிட பலாலி மண்ணில் விளைந்த மரவள்ளிக் கிழங்கு தனியானதொரு சுவை கொண்டிருந்தது. ஏனைய மரக்கறி வகைகளும் தனியான சிறப்பைக் கொண்டிருந்தன.

**யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ் நாட்டுக்கு இலகுவாக வானூர்திப் பயணம் மேற்கொண்ட காலமொன்று முன்னர் இருந்தது**

கொழும்பு, திருச்சி இடையிலான வானூர்தி சேவை பலாலி ஊடாக இடம் பெற்றதால், வடபகுதி மக்கள் இந்தியாவுக்கு எளிதில் பயணங்களை மேற்கொள்ள முடிந்தது. தற்போதையதைப் போன்று கொழும்பு சென்று அங்கிருந்து இந்தியாவுக்குச் செல்ல வேண்டிய அவலநிலை அப்போது காணப் படவில்லை. போர் ஆரம்பித்ததும் இந்த வசதிகளையெல்லாம் வட பகுதி மக்கள் இழந்தனர். ஆரம்பத்தில் படையினரின் தேவைகளுக்காகவே பலாலி வானூர்தி நிலையம் செயற்பட்டு வந்தது. போர் ஓய்ந்த பின்னர், பொது மக்கள் மட்டுப்படுத்தப்பட்ட பயணங்களை கொழும்புக்கு மேற்கொள்ள முடிந்தது. ஆனால் கொழும்பு, பலாலி ஊடாக இந்தியாவுக்குச் சென்று வருவதற்கான வானூர்தி சேவைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படாமல் உள்ளமை மிகப்பெரிய குறையாகவே காணப்படுகின்றது.

வலிகாமம் வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து சென்ற மக்களில் பெரும் பகுதியினர் தமது சொந்த இடங்களில் மீள் குடியமராது வெவ்வேறு இடங்களில் வாழ்வதைக் காண முடிகின்றது.

**இனவாதம் பேசும் பெரும்பான்மை இனத்தவர்களது தவறுகளை அமைச்சர் ராஜித சுட்டிக்காட்டு**

இந்த நிலையில்தான், அமைச்சரும், அமைச்சரவையின் இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன பொருத்தமான நேரத்தில் மிகச் சரியானதொரு கருத்தைத் தெரிவித்து இனவாதத் தரப்பினரது வாய்க்குப் பூட்டுப் போட்டிருக்கிறார். வடபகுதி மக்களின் காணிகளைப் படையினர் அடாத்தாகப் பிடித்து வைத்திருப்பதைப் போன்றதொரு நிலை தெற்கில் காணப்படுமாயின், என்ன நடந்திருக்குமென அவர் கேள்வி எழுப்பியிருக்கிறார். அவரது கேள்வியில் உள்ள நியாயத்தை தெற்கில் உள்ள இனவாதிகள் புரிந்து கொள்வார்களா? என்பது சந்தேகமான விடயமாகும். தமிழர்களின் காணிகளை அடாத்தாகப்பிடிப்பதும், அங்கு வேறு இன மக்களைக் குடியேற்றுவதும் இந்த நாட்டின் பேரினவாத அரசுகளுக்குக் கைவந்த கலையாகும். காலம் காலமாக இது ஒழுங்காக நிறைவேற்றப்பட்டு வருகின்றது. தமிழர்களுக்கெனத் தனியான நிலம் இருக்கக் கூடாது என்ற தீய நோக்குடன் இந்தச் செயற்பாடு இடம் பெற்று வருகின்றது. ஆரம்பத்தில் கிழக்கில் ஆரம்பித்த இந்த நடவடிக்கை, தற்போது வடக்குக்கும் பரவலாக்கப்பட்டுள்ளது. ஆகப் பிந்தி இந்த விடயத்தில் முல்லைத்தீவு மாவட்டம் பலிக்கடாவாக ஆக்கப்பட்டுள்ளது.

ஓர் இனத்தொகுதி மக்களின் நிலத்தை வஞ்சகமாக அபகரித்து வைத்திருப்பதும், அந்த இனத்தின் அடையாளங்களை அழிப்பதற்கு முற்படுவதும் மிகக் கேவலமான செயல்களாகும். இனம், மதம், மொழி என்ற வேறுபாடுகளால் மனித குலம் பிளவுபட்டு நிற்பதும் இறைவனுக்கு ஒவ்வாத செயல்களாகும். ஆனால் இந்த நாட்டில் இது தொடர்வதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

வலி வடக்கில் 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு, வெறும் 683 ஏக்கரை விடுவிப்பது எற்புடையதல்ல. ஆக்கிரமிக்கப்பட்ட முழு நிலமும் விடுவிக்கப்படுவதுதான் நீதியானது.

## ஆசிரியருக்கான கடிதம்

# மனிதத்துவம் இன்னமும் வாழ்கிறது

முச்சக்கரவண்டிகளில் மீற்றர் மற்றும் கட்டண அறவீடு தொடர்பாக பயணிகளுக்கு காட்சிப்படுத்தல் முக்கியமே. ஒரு சிலரின் கட்டண அறவீடு அதிகமென சில பயணிகள் குறை கூறலாம்; மறுப்பதற்கில்லை. சாரதிகளில் மனிதாபிமான, இரக்கமுள்ள சாரதிகளும் எம் மத்தியில் இருப்பதும் உண்மையே. எனக்கு ஏற்பட்ட மறக்க முடியாத அனுபவமொன்றை இங்கு குறிப்பிடுகிறேன்.

மிகவும் கடுமையான உடல் நலப்பாதிப்பால் வடமராட்சி துன்னாலை அல்லையம்பதியில் ஒரு வீட்டில் வறுமையோடும் நோயோடும் போராடிக் கொண்டிருந்தேன். என்னால் பயணிகள் பஸ்களில் பயணிக்க முடியாத நிலை. சிறப்புச் சிகிச்சைக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள மருத்துவமனைக்கு வருமாறு தெரிவிக்கப்பட்ட நிலையில், அதிலும் அதிகாலை 7 மணிக்கு நிற்குமாறு கிளினிக் அட்டையில் குறிப்பிடப்பட்டிருந்த நிலையில், நண்பர் ஒருவரிடம் முச்சக்கரவண்டி ஒன்றை ஒழுங்கு செய்து உதவுமாறு கோரியிருந்தேன். அதிகாலை சுமார் 5.30 மணிக்கு வீட்டுக்கு முச்சக்கர வண்டி கொண்டுவரப்பட்டு குறிப்பிட்ட 7 மணிக்கு யாழ்ப்பாணம் சென்றடைந்தது.

மருத்துவமனையில் சுமார் 9 மணிவரை இருந்தபோதும், சாரதி வெளியிலே காவல் காத்த நிலை! எனது சிகிச்சை முடிந்து சுமார் 10 மணியளவில் வெளியே வந்து நான் வசித்த வீட்டுக்கு வந்துசேர மதியம் 12 மணி ஆகியிருக்கும். சாரதியோ எந்தவிதத்திலும் வெறுப்பாகவோ, மனம் நொந்தோ கதைக்கவில்லை.

எனது உடல் இயலாமையையும் வறுமை நிலையையும் ஓரளவு அந்தச் சாரதி புரிந்திருப்பார் போலும். "தம்பி, எவ்வளவு கூலி தர வேண்டும்?" எனக் கேட்டேன். தனது தலையைத் தடவியபடி, 'ஏதாச்சும் தாருங்கள்' என பதில் வந்தது. இரண்டு 500 ரூபாத் தாள்களைக் கொடுத்தேன். ஒரு ஐநூறு ரூபாத் தாளை மாத்திரம் எடுத்துக்கொண்டு "எனக்கு பெற்றோல் காசு போதும். நீங்கள் உங்கள் உடல் நிலையையும் நோயையும் கவனியுங்கள். ஏதாச்சும் அவசரமானால் (தனது தொலைபேசி எண்ணையும் தந்துவிட்டு) அழையுங்கள்" எனக்கூறிவிட்டுப் புறப்பட்டார்.

இப்படியான மனமிரக்கமுள்ள சாரதிகளும் எம் மத்தியில் இருப்பதை மறுப்பதற்கில்லை. இந்தச் சம்பவம் எனது வாழ்நாளில் மறக்கமுடியாத ஒரு சம்பவமாக மனதில் பதிவாகிவிட்டிருந்தது.

எமது போராட்டம் மௌனிக்கப்பட்ட 2009ஆம் ஆண்டு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இத்தனை ஆண்டுகள் கழிந்து, அண்மையில் முச்சக்கரவண்டிக் கட்டண அறவீடு தொடர்பாக உதயனில் வெளியான வாதப் பிரதிவாதங்கள் எனது பழைய நினைவுகளைக் கிளறியதன் காரணமான கருத்து வெளிப்பாடே இந்தக் கடிதம்.

அன்பு, *வரணி.*



## சீனுராமசாமி இயக்கத்தில் சமுத்திரக்கனி

'கண்ணே கலைமானே' படத்தைத் தொடர்ந்து மற்றொரு படத்திலும் சீனு ராமசாமி இயக்கத்தில் நடிக்கிறார் சமுத்திரக்கனி.
சீனு ராமசாமி இயக்கத்தில் உருவாகிவரும் படம் 'கண்ணே கலைமானே'. உதயநிதி ஸ்டாலின் கதா நாயகனாகவும் தமன்னா நாயகியாகவும் நடித்துள்ளனர். இந்தப் படத்தின் படப்பிடிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.
இந்தப் படத்துக்குப் பின்பும் மற்றொரு படத்தில் சமுத்திரக்கனியை இயக்குகிறார் சீனு ராமசாமி.




## இன்றைய நாள்

**மேடம்:** பேச்சில் வசீகரம் நிறைந்திருக்கும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். பணவரவும் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர்.

**இடபம்:** நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். நண்பர், உறவினரின் மத்தியில் மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில் லாபம் திருப்திகரமாக இருக்கும். சேமிப்பு அதிகரிக்கும். குழந்தைகள் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மிதுனம்:** வீண்பேச்சுப் பேசுபவரை நெருங்க வேண்டாம். தொழிலில் உற்பத்தி விற்பனை சராசரி அளவில் இருக்கும். பெண்களுக்கு நகை பணத்தில் கவனம் தேவை.

**கடகம்:** பிறர் மனம் அறிந்து செயல்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இலாபம் சராசரியாக இருக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் உண்டாகும். ஒவ்வாத உணவை தவிர்ப்பது நல்லது.

**சிங்கம்:** உற்சாகத்துடன் இருக்க முயற்சி செய்வீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை செழிக்கும். இலாபம் பன்மடங்கு உயரும். சுபவிஷயத்தில் முன்னேற்றம் உண்டாகும்.

**கன்னி:** புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். எதிர்பார்த்த சுபசெய்தி வர தாமதமாகலாம். உணவு விஷயத்தில் விழிப்புடன் இருக்கவும்.

**துலாம்:** சுற்றத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் புதிய சாதனை ஏற்படும். ஆதாயம் பன்மடங்கு பெருகும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** செயல் நிறைவேற கூடுதல் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாரான அளவில் இருக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். உறவினரிடம் உதவி கிடைக்கப் பெறலாம். .

**தனுசு:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில் வியாபா ரத்தில் வளர்ச்சி உண்டாகும். இலாபம் பெருகும். பிள்ளைகளின் செயல்பாடு மன நிறைவை ஏற்படுத்தும்.


**மகரம்:** பிறரது பேச்சை பொருட்படுத்த வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இடையூறுகளை உடனே சரி செய்யவும். இலாபம் சுமாரான அளவில் கிடைக்கும்.

**கும்பம்:** மனம் தெளிந்த நீரோடை போல இருக்கும். தொழில்வியாபாரம் வியத்தகு அளவில் அபிவிருத்தியாகும். ஆதாயம் அதிகரிக்கும்.

**மீனம்:** தேவைக்கு மட்டும் பேசுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையால் அவதிப்படலாம்.

## பேமிலி மேன்

கல்யாணத்திற்கு முன்பு, தான் உண்டு தன் வேலையுண்டு என முழித்துக் கொண்டிருந்த மேன்.
கல்யாணத்திற்கு பின்பாக பொண்டாட்டியைச் சமாளிக்க முடியாமல் "பேய்" முழி முழிக்கும் மேனைத் தான் "பேய் முழி மேன்" என்கிறோம்.
இதுவே காலப் போக்கில் மருவி 'பேமிலி மேன்' (FAMILY MAN) என்றானது.




நண்பர்: வாங்க உட்காருங்க வெயிலுக்கால இருந்து வந்திருக்கீங்க..வந்து பான்ல உட்காருங்க..

வந்தவர்: ஏன் உங்க வீட்டில கதிரை இல்லையா?



வெட்டி வீழ்த்தும் போது உன்னால்
தடுக்க முடியவில்லை!
வெயில் வாட்டி வதைக்கும் போது
என்னால் தடுக்க முடியவில்லை!

**மரங்கள்**



**பங்காளி @Arun_Pangali**
வெட்டப்பட்ட மரங்களின் ஆவியே அனலாய் முகத்தில் அறைகிறது.

**சாய்ராம் @SairSairam**
ஒரே நாளில் விடுதலை
தபால் பெட்டியில் அடைக்கப் பட்ட காகிதக் கைதிகளுக்கு!

**கோழியின் கிறுக்கல்!!@Kozhiyaar**
எம்மை சுற்றி நடக்கும் எதையும் மாற்ற முடியாது என்பதை உணர்வதே அனுபவம் எனப்படுவது!!

தோழி: இவ்வளவு பெரிய கட்டுப் போடுற அளவுக்கு உன் புருசனுக்கு காதில எப்படி அடிபட்டது?

தோழி: நீதானே சொன்னா தோசைக்கல் வாங்கினதை புருசன் காதில போட்டிடுன்னு...

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | | 3 | 2 | | 6 | 7 | 8 |
| | | 6 | | 9 | | | 2 | 3 |
| | | 2 | 8 | | | | | |
| | | | | | | 8 | | 5 |
| | 9 | | | | 5 | | | |
| 5 | | | 4 | | | | | |
| | | 5 | | | | | 3 | |
| | 7 | | | 3 | | | | 9 |
| | 4 | | | | | 7 | 8 | 2 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 6 | 7 | 1 | 4 | 3 | 2 | 8 |
| 2 | 7 | 3 | 8 | 5 | 9 | 1 | 4 | 6 |
| 8 | 1 | 4 | 2 | 3 | 6 | 7 | 5 | 9 |
| 9 | 6 | 7 | 4 | 2 | 8 | 5 | 1 | 3 |
| 1 | 2 | 5 | 3 | 9 | 7 | 6 | 8 | 4 |
| 4 | 3 | 8 | 1 | 6 | 5 | 9 | 7 | 2 |
| 3 | 5 | 1 | 6 | 8 | 2 | 4 | 9 | 7 |
| 7 | 8 | 9 | 5 | 4 | 3 | 2 | 6 | 1 |
| 6 | 4 | 2 | 9 | 7 | 1 | 8 | 3 | 5 |

நேற்றைய விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

இப்போது வெளியே தலை காட்ட முடியாத பிரச்சினை.

வெயில்

உதயன்
புதன் பொய்கை
ஏப்ரல் 18 2018
Uthayan Print newuthayan.com @UthayanPrint

ராஜேஸ்மணாளன்

# தங்கத் தமிழுக்கு சிங்கையில் விழா




‘தமிழுக்கு அமுதென்று பேர் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்’ தமிழ் மொழியைச் சிறப்பிக்கும் பாரதிதாசனின் கவிவரிகள் இவை. இந்தியாவின் தமிழ்நாட்டில் தமிழ் எப்படி வளர்கிறதோ, அதைப்போல தமிழுக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து, அதை வளர்க்கும் ஒரு நாடாகத் திகழந்து வருகின்றது சிங்கப்பூர்.


**உலகில் தமிழில் வெளியான முதலாவது அஞ்சல்த் தலை**

அஞ்சல்த் தலைகள் கடிதங்களை உரியவருக்குக் கொண்டு சேர்ப்பதற்கு மட்டும் பயன்படாமல் ஒரு நாட்டின் பண்பாடு, பொருளியல், அடையாளம், நல்லிணக்கம், பன்முகச் சூழல் ஆகிய கூறுகளை வெளிப்படுத்தும் காகிதச் சின்னங்களாகவும் வலம் வருகின்றன. 1967ஆம் ஆண்டு ஓகஸ்ட் ஒன்பதாம் திகதியன்று தனது தேசிய தினத்தைக் கொண்டாடிய சிங்கப்பூர், அன்று 50 சத அஞ்சல் தலையை தமிழில் வெளியிட்டு, தமிழுக்குப் பெருமை சேர்த்தது. ‘உயிரோட்டமுள்ள சிங்கப்பூரை உருவாக்குக’ என்று அந்தத் தபால் தலையில் தமிழில் எழுதப்பட்டுள்ளது. இதுவே உலக அளவில் தமிழ் மொழியில் வெளியான முதலாவது அஞ்சல் தலையாகும். தேசிய தின அணி வகுப்பின் ஓர் அங்கத்தை இந்த அஞ்சல்தலை சித்தரிக்கிறது. அது மட்டுமின்றி சிங்கப்பூர் நாட்டவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அணிவகுத்து நாட்டின் பொருளியல் வளர்ச்சிக்கு வித்திட வேண்டும் என்ற கருத்தையும் இந்த அஞ்சல் தலை வெளிப்படுத்துகின்றது. இதே வாசகம் சிங்கப்பூரின் மற்ற அதிகாரத்துவ மொழிகளிலும் வெளிவந்தது. ஒவ்வொரு மொழியின் அஞ்சல் தலைக்கும் அதன் நிறம் மட்டுமே வேறுபட்டிருந்தது. நான்கு அதிகாரத்துவ மொழிகளில் வெளியீடு கண்ட முதல் அஞ்சல் தலைத் தொகுப்பும் இதுவே.




இந்தியாவில் 1960ஆம் ஆண்டு திருவள்ளுவரும், 1968ஆம் ஆண்டில் தமிழ் கருத்தரங்கமும் அஞ்சல் தலையில் இடம்பெற்றிருந்தாலும், அதில் தமிழ் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். 2010ஆம் ஆண்டு செந்தமிழ் மாநாட்டுக்காக வெளியிடப்பட்ட அஞ்சல் தலையில் கூட திருவள்ளுவரின் படத்துடன் தமிழ்ச் சொற்கள் ஏதும் இடம்பெறவில்லை. 1966ஆம் ஆண்டு கம்பருக்கும், 1970ஆம் ஆண்டில் அண்ணாதுரைக்கும், 1978ஆம் ஆண்டு பெரியாருக்கும், 1989ஆம் ஆண்டு நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் ஆகியோருக்கு வெளியிடப்பட்ட அஞ்சல் தலைகளிலும் தமிழ் எழுத்துக்கள் இல்லை என்பது வருந்தத்தக்க விடயம். அறிஞர் அண்ணாத்துரைக்காக வெளியிடப்பட்ட அஞ்சல் தலையில் அவரின் தமிழ் கையொப்பம் பதியப்பட்டிருந்தது சிறப்பான ஒன்று. 1961களில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வி. நவரத்தினத்துக்காக தமிழ் அஞ்சல் தலையை வெளியிட்டாலும், அது அலுவலகரீதியான ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இந்தத் தரவுகளின் அடிப்படையில் சிங்கப்பூரே தமிழுக்காக அஞ்சல் தலை வெளியிட்ட முதல் நாடாகக் கருதப்படுகின்றது.

> “1967ஆம் ஆண்டு ஒகஸ்ட் ஒன்பதாம் திகதியன்று தனது தேசிய தினத்தைக் கொண்டாடிய சிங்கப்பூர், அன்று 50 சத அஞ்சல் தலையை தமிழில் வெளியிட்டு, தமிழுக்குப் பெருமை சேர்த்தது. ‘உயிரோட்டமுள்ள சிங்கப்பூரை உருவாக்குக’ என்று அந்தத் தபால் தலையில் தமிழில் எழுதப்பட்டுள்ளது. இதுவே உலக அளவில் தமிழ் மொழியில் வெளியான முதலாவது அஞ்சல் தலையாகும்.



**தமிழ் வளர் இயக்கத்தால் தமிழ் மொழி வாரம்**

ஆங்கிலம், மன்டரின், மலே, தமிழ் ஆங்கிய நான்கு மொழிகளை தன் அலுவலக மொழிகளாக அங்கீகரித்துள்ள நாடுதான் சிங்கப்பூர். எனினும் முதன்மை மொழி இங்கு ஆங்கிலமாகவே இருக்கின்றது. இங்கு தமிழ் வாழும் மொழியாகத் திகழவேண்டும் என்பதில் அங்குள்ளவர்கள் முனைப்பாக இருக்கிறார்கள். இந்த முனைப்பில் உருவாகியதுதான் ‘தமிழ்மொழி வாரம்’. 2007ஆம் ஆண்டு முதல் தடவையாக, சிங்கப்பூரின் தமிழ்வளர் இயக்கத்தால் இந்த நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் மொழி வீழும் மொழியாக இருக்காமல், வாழும் மொழியாக இருக்க உதவுவதே இவர்கள் நோக்கமாக இருக்கின்றது.

இதுவே காலப்போக்கில் வளர்ச்சி கண்டு இன்று ஒரு மாத காலக் கொண்டாட்டமாக மாறியிருக்கின்



றது. அரச ஆதரவோடு வளர் தமிழ் இயக்கம் கடந்த பத்து ஆண்டுகளாக இந்தத் தமிழ் மொழி விழாவை நடத்தி வருகின்றது.

வளர் தமிழ் இயக்கத்தலைவர், 2018ஆம் ஆண்டு முதல் இளங்கலை தமிழ் மொழி இலக்கிய மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகையாக வழங்கப்படவிருப்பதாக இந்த ஆண்டு தெரிவித்திருக்கிறார். சிங்கப்பூரில் தமிழ்மொழியை வாழும் மொழியாகவும் பயன்பாட்டு மொழியாகவும் நிலைபெறச் செய்வதோடு, அனைத்து வயதினரையும் தமிழால் ஒன்றிணைத்து, சிங்கப்பூரில்தமிழ்மொழியை ஓங்கச்செய்வதே வளர்தமிழ் இயக்கத்தின் தலையாய நோக்கமாகும். தமிழ் மொழி கற்றல் வளர்ச்சிக் குழு 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அமைக்கப்பட்டது. தமிழ்மொழியின் பயன்பாட்டை மேம்படுத்தவும் பள்ளிகளில் தமிழ்மொழி கற்றலை ஆதரிக்கவும் தமிழ்ச் சமூக அமைப்புகளின் ஆதரவுடன் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதே இந்தக் குழுவின் நோக்கமாகும்.

**இந்த ஆண்டுக்கான தமிழ் மொழி விழா**

செம்மொழிகளுள் ஒன்றாகிய தமிழ்மொழி, எக்காலத்திற்கும் உகந்த மொழியாக வளர்ந்துள்ளது. இதே தன்மையில், எதிர்காலத்திலும் தொடர்ந்து வளர்ந்து, சிறப்பும் செழிப்பும் நிறைந்த மொழியாகத் திகழ வேண்டும் என்பதையும் சிங்கப்பூரில் தமிழ்மொழியின் இந்த நீடித்த வளர்ச்சியைக் குறிக்கும் நினைவூட்டலாகவும் தமிழ் வளர் இயக்கம் என்ற பெயர் அந்த அமைப்புக்குச் சூட்டப்பட்டுள்ளது.

'தமிழில் பேசுவோம், தமிழை நேசிப்போம்' என்ற முழக்க வரியைக் கொண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த விழாவை, இந்த முறை சிங்கப்பூரின் வர்த்தக மற்றும் தொழில்த்துறை அமைச்சர் எஸ்.ஈஸ்வரன், ஏப்ரல் 2ஆம் திகதி அன்று அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்தார்.

பள்ளி மாணவர்கள் தங்களின் விவாதிக்கும் திறனை மெருகூட்ட, 'சொற்களம்' எனும் நிகழ்ச்சி வழி வகுக்கிறது. மாணவர்களைக் கதை சொல்ல ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகள், கலையார்வத்தைத் தூண்டக் கூடிய நிகழ்ச்சிகள், சிந்திக்கவைக்கும் சொற்பொழிவுகள், மூத்த எழுத்தாளர்களுடனான இலக்கியக் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், ஆடல், பாடல் நிகழ்ச்சிகள் என 'இயல், இசை, நாடகம்' என முத்தமிழுக்கும், சிங்கப்பூர் ஒரு மாத காலம் விழா எடுத்து, பத்தாவது ஆண்டாக 'தமிழ் மொழி விழாவைக்' கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

தொழில் நுட்பம் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் இந்த காலத்திற்கு ஏற்றால் போல், நிகழ்ச்சிகளாக, 'மின்னியல் தமிழ் புத்தாக்க உத்திகளும் யதார்த்த விளைவுகளும்', தமிழ் இணையக் கருத்தரங்கம், 'சிங்கப்பூர் தமிழ் இணையத்தில் சிங்கப்பூர் தமிழ் இலக்கியங்கள் ஓர் ஆய்வு' போன்ற நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. இனிய தமிழ் இனிச் சாகாது என்பது, அங்குள்ள தமிழ் ஆர்வலர்களது செயற்பாடுகளில் துல்லியமாகத் தெரிகின்றது.

**எதிர்காலத்திலும் தொடர்ந்து வளர்ந்து, சிறப்பும் செழிப்பும் நிறைந்த மொழியாகத் திகழ வேண்டும் என்பதையும் சிங்கப்பூரில் தமிழ்மொழியின் இந்த நீடித்த வளர்ச்சியைக் குறிக்கும் நினைவூட்டலாகவும் தமிழ் வளர் இயக்கம் என்ற பெயர் அந்த அமைப்புக்குச் சூட்டப்பட்டுள்ளது.**



# ஐஸ்வர்யம் தரும் அட்சய திருதியை

இரா. நிசாந்தன்



இந்துக்களின் இறை வழிபாட்டோடு தொடர்புடைய மங்கலகரமான நாள்களில் அட்சய திருதியை தினமும் சிறப்புறுகின்றது. அட்சயம் என்றால் வளருதல், குறைவில்லாது இருத்தல், நிறைதல், பெருகுதல் என பல பொருள் கொண்டு அமையப் பெறு கின்றது. வருடத்தின் சித்திரை மாத அமாவாசைக்கு அடுத்து வரும் மூன்றாவது நாளான திருதியைத் திதியில் இந்த மங்கலகரமான நாள் அமைவுறுகின்றது.

**குபேரன் நல்வாழ்வு பெற்ற நாள்**

செல்வத்தின் அதிபதியாக விளங்குபவள் மகாலட்சுமி. அந்த மகாலட்சுமிக்கு அடுத்த நிலையில் செல்வங்களை பாதுகாக்கும் பொறுப்பினைப் பெற்றவன் குபேரன். இராவணனின் சகோதரனான இந்தக் குபேரன் சிவபெருமானைக் குறித்து தவம் புரிந்து எம்பெருமான் திருவருளால் சங்கநிதி, பதுமநிதி எனும் இரு நிலைகளை அடைந்து மகாலட்சுமிக்கு துணையாக செல்வங்களை அளிக்கும் பேற்றினைப் பெற்றுக் கொண்டது இன்றைய நாளிலேயாகும். ஆகவேதான் இன்றைய நாளில் லட்சுமி குபேரனை வழிபாடியற்றி வருவது வழக்கமாக உள்ளது.

**அட்சய திருதியை நாளில் நடந்தேறிய சிறப்புக்கள்**

இன்றைய அட்சய திருதியை நன் நாளில் பல சிறப்புக்கள் இழையோடியுள்ளன. மகாவிஸ்ணுவின் அவதார அம்சமாக பரசுராமர் பூமியில் அவதாரம் செய்த நாள் இன்றாகும், மேலும் பகீரதனின் கடும் முயற்சியால் புனித கங்கை தேவலோகத்தில் இருந்து பூமிக்கு வந்தடைந்ததும், வேத வியாசர் துணை கொண்டு விநாயகர் மகாபாரத காவியத்தை எழுதியமையும், சூரியபகவானிடம் இருந்து பாண்டவர்களில் மூத்தவன் தருமன் அட்சய பாத்திரம் பெற்றதுவும், காசியில் 'அன்னபூரணித் தாய் தன் அண்ணன் திருமாலின் துணை கொண்டு எம் பெருமான் சிவனது பிச்சைப் பாத்திரம் (திருவோடு) உணவு அளித்து அவர் சாபம் தீர்த்துக் கொண்ட நாளும் இன்றேயாகும். இவ்வாறு சிறப்பான அம்சங்கள் இன்றைய நாளிலேயே நடைபெற்றன என புராணங்கள் விதித்துரைக்கின்றன.

**குசேலன் செல்வ வளம் பெற்ற நாளாக அமைதல்**

குசேலர் தன் குடும்ப வறுமை போக்க தன் நண்பன் கண்ணபிரானைக் காண சென்று கண்ணன் அருளால் நீங்காத செல்வம் பெற்றுக் கொண்ட நாள் இன்றாகும். தன் வாழ்வில் மிகுந்த வறுமையை அடைந்த குசேலர் ஒரு முறை துவாரகையில் ஆட்சி புரியும் தன் நண்பனாகிய கண்ணனைச் சந்திக்கச் செல்கின்றான். அப்போது கண்ண னுக்காக அன்புடன் சிறிதளவு அவலையும் எடுத்துச் சென்றான். கண்ணனும் விருப்புடன் குசேலன் கொண்டு சென்ற அவலில் ஒரு பிடி உண்டார். அந்தக் கணமே கண்ணன் திருவருளால் குசேலர் பெரும் செல்வந்தனாக செல்வ வளம் படைத்தவனாக மாறினான். இத்தகு சிறப்பு நிகழ்வு நடைபெற்றது இன்றேயாகும்.

**அட்சய திருதியை நாளில் என்ன பொருள்கள் வாங்கலாம்**

இன்றைய அட்சய திருதியை நாளானது, மங்கலகரமான எந்தப் பொருள் வாங்கினாலும் எமது இல்லத்தில் செல்வவளம் பெருகும் என்பது நம்பிக்கை. பொதுவாக தங்கம் வாங்குவது மட்டுமே சிறப்பினைத் தரும் எனும் கருத்து தவறானதாகும். எல்லோராலும் தங்கம் வாங்க முடியாதே? அவ்வாறு தங்கம் வாங்க முடியாதவர்கள் தம் அன்றாட தேவைகளுக்குரிய அரிசி, மஞ்சள், உப்பு, தானியங்கள், பூசைப் பொருட்கள், சக்கரை, குங்குமம், முதலிய பொருட்களை எளிதாக இந்த நாளில் வாங்குவது நன்மை பயக்கும். எந்தப் பொருள் வாங்கினாலும் அது நன்மையைக் கொடுக்கும் என்பதே உண்மை.



**சுப காரியங்களை ஆரம்பித்தல் நன்று**

மேலும் இன்றைய நாளில் வங்கியில் புதிய கணக்கினை ஆரம்பித்தல், புதிதாக வியாபாரம் தொடங்குதல், கல்வி நடவடிக்கைகள் ஆரம்பித்தல், தான தருமம் செய்தல், உறவினர் வீடுகளுக்கு சென்று உறவினைப் பலப்படுத்தல் போன்ற நற்காரியங்களிலும் நாம் ஈடுபடவேண்டும். இவை தவிர இந்த நாளில் ஏழை எளியவர்க்கு அன்னதானம் வழங்குவதால் எமது வாழ்வில் நன்மைகள் வந்து சேரும். இல்லாதவர்களுக்கு எம்மிடம் இருப்பதில் சிறிதளவைக் கொடுப்பதால் அது எமக்குப் பயனைத் தந்திடும். நாம் எவ்வளவு பணம் கொடுத்து ஆடம்பரமாக பொருள் வாங்கினாலும் அதில் கிடைக்காத மனத் திருப்தியும், நன்மையும் எதுவும் இல்லாதவர்களுக்கு எம்மிடம் இருப்பதில் சிறிதளவினைக் கொடுப்பதிலே கிடைத்திடும். இத்தகு சிறப்புடைய இந்த நாளில் இறை வழிபாடு செய்வது மிகவும் சிறப்புடையதாகும். குறிப்பாக மகாலட்சுமி செல்வத்தின் அதிபதியாக விளங்குவதால் மகாலட்சுமியை இந்த நாளில் வழிபட வேண்டும். இதனால் நம் வீட்டில் லட்சுமி கடாட்சம் கிடைக்கப் பெறும். அத்துடன் குபேரனையும் நினைத்து வழிபாடியற்றுதல் சிறப்புடையதாகும். ஆகவே இத்தகு சிறப்புக்கள் இழையோடுகின்ற அட்சய திருதியை நன்நாளாகிய இன்று, ஆலயம் சென்று இறைவழிபாடியற்றி, எழை, எளியவர்களுக்கு தான தர்மம் அளித்தல் நன்று.



## கொழும்புக்கு நாம் அடிமையில்லை

சிறைக்கதவுகள் நீதிக்காகத் திறந்திட வேண்டும்
சித்திரைப்பெண்ணே அதற்காகப் பிறந்திடவேண்டும்
முறையாகத் தீர்வொன்று கிடைத்திட வேண்டும்
மூவினமும் ஆட்சியிலே இடம்பெறவேண்டும்

திறைசேரியில் விளம்பியே உட்காரவேண்டும்
தினசரிப் பத்திரிகையால் தர்மம் ஓங்கவேண்டும்
குறையொன்றும் இல்லையெனக் குடிகள் வாழவேண்டும்
கொழும்புக்கு நாம் அடிமையில்லை இது புரியவேண்டும்

கே.எஸ்.சிவஞானராஜா

## விளம்பியே வருக...

சித்திரை மகளே வருக
சிறப்புகள் பலவொடு
சிங்காரமாய் வருக

சலித்துப் போன வாழ்வினில்
சாகசங்கள் பல செய்து
சரித்திரம் படைத்திட

இருளின் வலியை இதயம்
உணர்ந்து பெருமூச்செறியும்
நிலையை மாற்றிட

வறுமையினைப் போக்கு
வன்முறைகள் நீக்கி
புண்ணியங்கள் செய்திட


சாதிபேதங்கள் ஒழிந்து
நிறமொழி சமர்கள்
வேருடன் சிதறிட

மனிதம் மரிக்கும் மண்ணிலே
மனித நேயம் மறந்து
சமரஸம் அல்லாபிக்க

சாலை யோரப் போதி மரங்களின்
உதிர்த்திடும் சருகுகளும்
அன்பு கொண்டு ஒளியேந்திட

விளம்பிய எலுடியலாய்
புது மழலையின்
புன்னகைபாய் வருக வருக

ரவீந்திரகலா சிறிபாஸ்கரன்



## ஈகையை இலக்காய் கொள்வாய்!



சித்திரை மகளேயுந்தன்
சீர்த்திகொள் வருகையாலே
இத்தரை இறும்பூதெய்த
ஈகையை இலக்காய்க் கொண்டு
நித்திரை நிலையை நீக்கி
நீதியின் நிலைக்களனாய்
சத்தியம் தவறாவண்ணம்
சமத்துவம் சமைக்கவாராய்!

உன்வருகை உலகத்தை
உயர்த்த வேண்டும்
ஊனமுற்ற நெஞ்சங்கள்
துஞ்ச வேண்டும்
கன்னலெனக் காசினியே
களிக்க வேண்டும்
கலையாளும் கருப்பொருளாய்
மிளிர வேண்டும்!

உழவதனால் உலகுதனை
உயர்த்த வேண்டும்
உண்மைநிலை உலகமது
உணர வேண்டும்
பழிநிலைமை பாரைவிட்டு
பறக்க வேண்டும்
பக்குவமாய் பகலவன்தாள்
பரவ வேண்டும்!

செய்தொழில்கள் என்றென்றும்
சிறக்க வேண்டும்
சீரிளமை நாளெல்லாம்
ஆள வேண்டும்
மெய்வருத்தம் பாராது
உழைக்க வேண்டும்
மேதினியே மேன்மைதனால்
சூழ வேண்டும்!

கல்விதமைக் கருத்துடனே
கற்க வேண்டும்
காலமெலாம் அதன்வழியே
ஒழுக வேண்டும்
பல்லினமும் பாரினிலே
வாழ் வமைக்கப்)
பாங்குடனே பக்குவமும்
ஓங்க வேண்டும்!

வி.சி.குஞ்சிதபாதம்

## சித்திரையாள் வருகிறாள்

இன்பங்கள் பொங்கட்டும்
இனியநாள் பிறக்கட்டும் – எம்
இன்னல்கள் நீங்கட்டும் – நல்ல
இனிய நாளே வருக.

புதிய சிந்தனைகள் எழுக – நாம்
புன்னகையுடன் மலர
புனிதம் நிறைந்த ஆண்டே – எமக்கு
புதுமைகளைத் தருக.

வாழ்வில் வசந்தம் வீசட்டும்
வானம் மழை பொழியட்டும்
வண்ண வண்ணக் கனவுகளுடன்
வளங்கள் பெற்று நாம் ஒளிர்வோம்.

விண்ணும் மண்ணும் சிறக்க
விளம்பி வருடம் உதயமாகிறது

ஊரெல்லாம் சிறக்க
உலகம் எல்லாம் வாழ
உன்னதமான நாளாம் எம்
சித்திரையாள் வருகிறாள்

சிவரம்யா





## விளம்பியே வருகவே...

விளம்பி வருடப் புத்தாண்டு நங்காய்!
எழுந்திட்டாயா? எங்கள் மத்தியிலே
விழுந்து கிடந்து முனுகுவோருக்கு
கரங்கள் தரவே அம்மா நீ வருக

சல்லிக் காசுமே தேடிட வழியில்லாது,
கலங்கி நிற்போருக்கு வழிகள் சமைக்க வருக
மிகையான ஆடம்பரங்களில் மயங்கி
நிற்போருக்கு,
தகை சான்ற தராதரங்கள் உணர்த்திட நீ வருக

பொன்னிலும் பெறுமதிமிக்க நேர காலங்கள்,
கண்ணியமாய் கழிவதற்கு
உதவிடவே நீ வருக.
நெற்றி வியர்வை சிந்தி உழைத்த பணங்களை,
சற்றுமே யோசிக்காது கரைத்திடும்
மனங்களுக்கு,
அறிவூட்டி ஆற்றல் அளிக்க அம்மா நீ வருக
அல்லவை நீக்கியே நல்லவை நடக்க வைக்க,
விளம்பி நங்காய் நீ எழுந்து வருக வருகவே.

மீசாலையூர் கமலா

# நியாயத்துக்கு துணையாக...

நியாயமான காரியங்களில் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து, துணை நிற்க வேண்டும். அநியாயமான காரியங்களில் யாரும் யாருக்கும் உதவி செய்வதின் வழியாக பாவத்துக்குத் துணை போகக் கூடாது. இதுதான் இஸ்லாத்தின் உயர்வான கூற்றாகும்.

இது குறித்து திருக்குர்ஆன், 'நன்மையிலும், பயபக்தியிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள்; பாவத்திலும், பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டாம்' என்று குறிப்பிடுகிறது. நன்மையான காரியங்கள் என்றால், எவற்றை செய்யும்படி இஸ்லாம் கட்டளையிட்டுள்ளதோ அத்தகைய அனைத்துவிதமான நற்செயல்களுக்கும் உதவி செய்வது ஆகும். பாவமான காரியங்கள் என்றால், எவற்றை முற்றிலும் விட்டுவிடும்படி இஸ்லாம் கட்டளையிட்டுள்ளதோ அத்தகைய அனைத்து விதமான கெட்ட செயல்களையும் விட்டுவிடுவது ஆகும்.

ஒரு முறை நபிகள் நாயகம் ஸல், "உனது சகோதரன் அநியாயம் செய்பவனாக இருந்தாலும் சரி, அல்லது அநீதி இழைக்கப்பட்டவனாக இருந்தாலும் சரி, அவனுக்கு நீ உதவி செய்" என்றார். உடனே நபியிடம் "அல்லாஹ்வின் தூதரே, அநீதி இழைக்கப்பட்டவனுக்கு உதவி செய்வது சரி. அது எப்படி அநியாயக்காரனுக்கு நான் உதவி செய்வது?" என ஒருவர் கேட்டார். அதற்கு நபியவர்கள், "அநீதி செய்வதில் இருந்து அவனை தடுத்து நிறுத்துவதே நீ அவனுக்கு செய்யும் உதவியாகும்" எனக் கூறினார்.

"அநியாயக்காரனுக்கும் உதவி செய்" என்று இஸ்லாம் கூறுகிறது. இது அவன் செய்யும் அநியாயத்திற்காக அல்ல. அநியாயத்தை அவன் விடுவதற்காக. அநியாயத்திலிருந்து அவன் விடுதலை பெற்று, நியாயவாதியாக மாறுவதற்காக.


"ஒரு முஸ்லிம் பிற முஸ்லிமுக்கு சகோதரர் ஆவார். அவர் மற்றவருக்கு அநியாயம் செய்ய மாட்டார். அவர் மற்றவருக்கு உதவி செய்வதையும் கைவிடமாட்டார். யார் தமது சகோதரனின் தேவையை நிறை வேற்றுவாரோ, அவரின் தேவையை இறைவன் நிறைவேற்றுகிறான். யார் ஒரு முஸ்லிமுடைய கஷ்டத்தை நீக்குவாரோ, அவரின் மறுமைநாளின் கஷ்டங்களை இறைவன் நீக்கிவிடுகின்றான். யார் ஒரு முஸ்லிமுடைய குறையை மறைக்கிறாரோ, அவரின் குறைகளை இறைவன் மறுமை நாளில் மறைத்துவிடுவான்" என நபி குறிப்பிடுகிறார்.

ஒரு முஸ்லிம் பிறமுஸ்லிமுக்கோ அல்லது பிற மனிதருக்கோ அவர் செய்யும் உதவி என்பது மற்றவருக்கு அவர் அநியாயம் செய்யக்கூடாது. மூன்றாம் நபர் கெடுதியிலிருந்து இவரை பாதுகாக்க வேண்டும். பிறரின் தேவைகள் எதுவாயினும் அது நன்மையான காரியமாக இருந்தால், அவரின் தேவைகளை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். அவருக்கு ஏற்படும் கஸ்டங்களிலிருந்து அவரை விடுவிக்க வேண்டும். அவரிடம் குறைகள் ஏதேனும் தென்பட்டால் அதை பெரிதுபடுத்தாமல் அவற்றை மறைத்துவிட வேண்டும். இவ்வாறு பிறருக்கு பயன்தரும் மனிதரே இறைவனுக்கு மிகவும் பிரியமான வராக இருக்கிறார் என இஸ்லாம் கூறுகிறது.

ஒரு மனிதர் நபியிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! மக்களில் இறைவனுக்கு மிகவும் பிரியமானவர் யார்?" எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள் "மக்களுக்கு மிகவும் பயன்தரும் நபரே இறைவனுக்கு மிகவும் பிரியமானவர்" எனக் கூறினார். பிறருக்கு உதவி செய்வதற்கு எந்த வகையில் வாய்ப்பு கிடைத்தாலும் அதை வீணடித்து விடக்கூடாது. நபியும் அவரின் தோழர்களும் பிறருக்கு உதவிட வாய்ப்பு அமைந்த சமயங்களில், உதவிகள் பல புரிந்த நிகழ்வுகளை வரலாற்று நெடுகிலும் காணமுடிகிறது.

இஸ்லாமிய வெள்ளி


நன்மைதரும் விடயங்களில் ஒருவருக்கொருவர் உதவிட வேண்டும். பயபக்தியான காரியங்களிலும் உதவ முன்வரவேண்டும். பாவம் மற்றும் பகைமை, வரம்பு மீறுதல், உரிமை மீறல் போன்றவற்றில் யாரும் யாருக்கும் உதவ முன்வரக்கூடாது. நியாயத்திற்குத் துணை நிற்போம்.











# மண்வாசனை தளும்பத் தளும்ப கொல்லன்கலட்டியில் இடம்பெற்ற பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள்

'தமிழ்' குமரன்

கொல்லன்கலட்டி இளைஞர் மீளெழுச்சிக் கழகத்தின் ஏற்பாட்டில் வருடாந்த புத்தாண்டு விளையாட்டு விழா புதுவருட தினத்தன்று இடம்பெற்றது. பாரம்பரிய விளையாட்டுக்கள் மற்றும் வீர விளையாட்டுக்கள் என சிறப்பாக விழா ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

**ஆரம்பம்**

கொல்லன்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து பூசை வழிபாடுகளின் பின்னர் விருந்தினர்கள் மாலை அணுவித்து அழைத்துவரப்பட்டனர். ஸ்ரீவத்சன் தலைமையில் மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. சிறுவர்களுக்கான நிகழ்வுகள் ஆரம்பத்தில் நடைபெற்று முடிந்தன. அதைத் தொடர்ந்து பாரம்பரியங்களைப் பறைசாற்றும் வகையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. முட்டி உடைத்தல், கிடுகு பின்னுதல், தேங்காய் துருவுதல், தலையணைச்சண்டை, கயிறு இழுத்தல், சறுக்கு மரம் ஏறுதல் என்பன நடைபெற்றன. இருபாலாரும் முழு ஆர்வத்துடன் நிகழ்வில் கலந்துகொண்டமையானது விழாவுக்கு மேலும் அணி சேர்த்தது. கயிறு இழுத்தல், சறுக்குமரம் ஏறுதல் ஆகிய விளை யாட்டுக்கள் இறுதியில் நடைபெற்றன.

சறுக்குமரம் ஏறுதல் போட்டி பங்கேற்பாளர்களை விடவும் பார்வையாளர்களை மிகையாகக் கட்டிப்போட்டது. சின்னச் சிறுசுகளில் புருவங்களை உயரச் செய்தது இந்த நிகழ்வு. இன்றைய தலைமுறை பாரம்பரியங்களைத் தொலைத்துப் பயணித்துக் கொண்டிருக்கிறது என்பதற்கான மற்றொரு எடுத்துக் காட்டுத்தான் சிறார்களின் இந்த அதீத வியப்பு. ஏற்பாட்டுக் குழு, 'இன்னிசை இரவு' நிகழ்வுக்கும் ஏற்பாடு செய்திருந்தது. ஆக, ஆகச்சிறந்த புதுவருடத்தை கொண்டாடி மகிழ்ந்தது கொல்லன்கலட்டி.

# யாழ்ப்பாணம் ஆறுமுகசுவாமிச் சித்தர்

கவிமகன்



## இன்று சுவாமிகளின் குருபூசை தினம்

## ஆறுமுக நாவலர் காலம் சார்ந்த ஆன்மிக ஞானி

ஆன்மிக பூமியாக துலங்கும் இந்தியாவில், தஞ்சைமாவட்டம்கும்பகோணம் தாலுக்காவைச் சேர்ந்த திருப்புறம்பயம் என்கிற வயல் வெளிகள் சூழ்ந்த கிராமத்தில் 'ஸ்ரீ சாட்சி நாதர் சுவாமி' ஆலயம் அமைந்துள்ளது. சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என சமய குரவர்களின் திருவாய் மலர்ந்த தேவார, திருவாசகப் பாடல்களின் மகத்துவம் கண்ட திருத்தலமாக விளங்குகிறது. இத்திருத்தலத்துக்கு அண்மிதமாகவே மகான் ஸ்ரீ யாழ்ப்பாண ஆறுமுக தேசிகர் சுவாமிகளின் சமாதிக் கோவிலும் அமைவு கொண்டுள்ளது.

இவருடைய பூர்வீகம் பற்றிய தகவல்கள் அறியக்கிடைக்காத போதும், இவர் யாழ்ப்பாண ஆறுமுகசுவாமிச் சித்தர் என்றே திருப்பு றம்பயம் கிராமத்தில் குறிப்பிடப்படுகின்றார்.

**ஆறுமுகசுவாமிச் சித்தரின் வருகை**

கி.பி. 1843 ஆம் ஆண்டுக்கு முன்பதாகவே அதாவது, 19 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியின் நடுப்பகுதிக்கு முன்பான காலத்தில் இவர் தமிழகத்தை சென்றடைந்தார். மதுரை ஆதினத்தில் தீட்சையும், சந்நியாசமும் பெற்று, கட்டளைத் தம்பிரானாக இருந்துள்ளார். சந்நியாசம் ஏற்றல், சைவ சமயப் பிரசாரம் செய்தல், 63 நாயன்மார்களது ச்ரித்திரங்களை வெளியுலகுக்குக் கொண்டு வருதல், சைவசமய உண்மைகளை மக்கள் உணர வைத்தல் போன்றன தமிழகம் நோக்கிய இவரது பயணத்தின் முதன்மை நோக்கங்களாக இருத்தன. இவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரது காலத்தைச் (கி.பி 1822 - கி.பி 1879) சேர்ந்தவர் என்றே கருதப்படுகிறார்.

**ஆன்மிகப் பணி**

மேலும் மதுரை ஆதீனத்தில் சந்நியாசம் பெற்றபின்பு கும்பகோணம் வருகை தந்த ஆறுமுக தேசிர், 'அறுபத்து மூவர் குருபூசை மடம், மௌனசாமி மடம் மற்றும் திருப்புறம்பயம் மடம்' என மூன்று மடங்களை நிறுவினார்.

பின்பு கும்பகோணத்தில் பெரும் நிலக்கிழாராகவும், பரோபகாரியாகவும் திகழ்ந்த குருநாதபிள்ளையிடம் சொந்தமாக நிலத்தை கொள்வனவு செய்து, கி.பி 1843 ஆண்டு காலப்பகுதியில் அறுபத்து மூவர் குருபூசை மடத்தைத் நிறுவினார். இங்கு அறுபத்து மூன்று நாயன்மார்களது உருவங்கள் சிலைகளாக அன்றி படங்களாக அவர்களோடு தொடர்புடையதான நிகழ்வுகளுடன் வரையப்பட்டுள்ளன. இங்கு இடம்பெறுகின்ற ஒவ்வொரு குருபூசை தின நிகழ்வின் போதும் அந்த நாயனாரின் வரலாற்றைப் படித்து பூசை வழிபாடுகள் இயற்றி அடியவர்களுக்கு அன்னதானம் செய்து வந்துள்ளார்.



கும்பகோணத்தையடுத்த திருப்புவனத்தில் இருந்த அவதூதரான மௌனசுவாமிகள் ஒருவர் அடியவர்கள் சிலரது வேண்டுகோளுக்கு இணங்க வருகை தந்து, மடாலயத்தில் வீற்றிருந்து அருள் பாலித்தமையால் இம்மடம் மௌனசாமி மடம் என்று அழைக்கப்பட்டதாக வரலாறுகள் குறிப்பிடுகின்றன. 'அன்னி பெசன்ற் அம்மையார், விவேகானந்தர்' போன்றோர் இம்மடாலயத்துக்கு வருகை தந்து மௌன சாமிகளைத் தரிசித்துள்ளனர்.

**சமய அறிவுடமை**

யாழ்ப்பாணம் ஆறுமுக தேசிகர் சுவாமிகள், 'திருஷ்டாந்த தாஷ்டாந்த விளக்கம்', 'நவநீதி சாரம்' முதலான நூல்களை எழுதியுள்ளார் என அறியமுடிகிறது. இவர் வேதாந்த சாஸ்திரங்களில் வல்லுநராகவும், சிவானுபூதிச் செல்வராகவும் விளங்கினார்.

**குருபூசை தினம்**

ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் மகான் ஸ்ரீ யாழ்ப்பாண ஆறுமுக சுவாமிச் சித்தரது சமாதிக் கோவிலில் பௌர்ணமி பூசை இடம்பெறுகிறது. அண்ணளவாக 150 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த மகான் ஸ்ரீ யாழ்ப்பாண ஆறுமுக சுவாமிச் சித்தரது சமாதிக் கோவில் பல வருடங்களின் பின்பு மறுசீரமைப்புச் செய்யப் பெற்று, கடந்த 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அதேவேளை கார்த்திகை நட்சத்திரம் அமிர்த்தயோகம் கூடும் சுப தினமான இன்று சுவாமிகளது சமாதிக் கோவிலில் குருபூசை இடம்பெறவுள்ளதுடன் கோமாதா பூசை, அபிஷேக ஆராதனைகள், அன்னதானம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

நாளைய தினம் திருவிளக்குப் பூசை இடம் பெறவுள்ளது.

**பயண வழித்தடம்**

கும்பகோணம் நகரப் பேருந்து நிலையத்தில் இருந்து இவ்வாலயத்தை சென்றடைவதற்கு இரு பேருந்து வழித்தடங்கள் உள்ளன. ஒன்று, திருப்புறம்பயத்தை பேருந்து இலக்கம் - 16 இல் பயணித்து புளியஞ்சேரி, இன்னம்பூர் ஊடாக திருப்புறம்பயம அடையாலம். மற்றையது, திருப்புறம்பயம் பேருந்து இலக்கம் - 18 இல் பயணித்து அகூர், கடிச்சம்பாடி ஊடாகவும் திருப்புறப்பயத்தை சென்றடையாலம்.

**ஈழத்துச் சித்தர்கள் பற்றிய குறிப்பு**

"கர்நாடக மாநிலம் மாதேஸ்வரன் மலையில் மாதேஸ்வர சித்தர் எனும் ஒருவரும், அவரைத் தொடர்ந்து ஈழத்துச் சித்தர் எழுவரில் ஒருவரான யோக சுவாமிகள், யாழ்ப்பண ஆறுமுகச் சித்தரும் ஒளிவடிவம் எடுத்து மறைந்தனர். (யோகசுவாமிகள் என்று இங்கே குறிப்பிடுவதை ஆறுமுகச் சித்தரை விசேடிக்கும் சொல்லாகவே கருத வேண்டும்.) 'ஈழத்துச் சித்தர் எழுவர்' எனும் ஓலைச்சுவடியில் இந்த யாழ்ப்பாணம் ஆறுமுகச் சித்தர் எனும் யோக சித்தர் சுவாமிகள் கும்பகோணம் அருகாமை திருப் புறம்பியத்தில் சாட்சிநாதர் அருள் பெற்று சொரூப சமாதியும் அடைந்துள்ளார். யோக சித்தர் சுவாமிகள் எனும் யாழ்ப்பாண ஆறுமுகச் சித்தர் யாழ்ப்பாணத்திலும் 'சொரூப சமாதி' அடைந்துள்ளார். இந்த ஈழத்துச் சித்தர்கள் ஏழுபேரில் மீதம் உள்ள ஆறுபேர் முறையே யாழ்ப்பாணம் கதிர் வேல் சுவாமிகள் பாண்டிச் சேரியில் உள்ள சித்தன்குடியில் சொரூபமாகவும், திருப்புறம்பியத்திலும் விருத்தாசலத்திலும் ஒளியாகவும், வாலைச் சித்தர் எனும் வேலாயுத யாழ்ப்பாண சுவாமிகள் திருப்பத்தூர் சிவகங்கைச் சாலையில் காட்டாம்பூரில் சொரூபமாகவும், ஸ்ரீ கதிர்காம சுவாமிகள் சீர்காழி மயிலாடுதுறை சாலையில் தென்பதி கிராமம் உப்பனாற்றங்கரையிலும், யாழ்ப்பாணம் வடவன்பட்டி சுவாமிகள் எனும் நாகநாதசுவாமிகள் தற்போதைய சிவகங்கை மாவட்டம் ஏரியூர் கீழவளவு சாலையில் இருக்கும் வடவன் பட்டியில் (இவ்வூருக்குத் தொன்மைப் பெயராகத் திருக்காக்கை புரம் என்று இருந்தது) சொரூபமாகவும் அருள்பாலிக்கின்றனர்." போன்ற விடயங்கள் யோகி கைலாஷ்நாத் அவர்கள் எழுதிய "சித்தர் களஞ்சியம்" (இறுதிப்பதிப்பு - மே- 2016 கற்பகம் புத்தகாலயம்) எனும் நூலருவின் 173 ஆம் பக்கத்தில் ஈழத்துச் சித்தர்கள் பற்றி குறிப்பாக அமைந்துள்ளது. மேலும், "தஞ்சை நீடா மங்கலம் மன்னார் குடிச் சாலையில் 6 ஆவது கிலோ மீற்றரில் கானூர் கிராமத்தில் கோரையாற்றங்கரையில் யாழ்ப்பாண சுவாமிகள் எனும் முருகன் சுவாமிகள் சொரூபமாக எழுத்தருளி அருள்பாலிக்கின்றார்.

இறுதியாக ஆறுமுகச் சித்தர் எனும் பெயர் கொண்ட கதிர்காமச் சித்தர் தில்லைச் சிதம்பரத்தில் உள்ள ஆதி பதஞ்சலி முனிவர் சந்நிதானமான ஸ்ரீ ஆனந்தீஸ்வரரிடத்தில் ஒளிவடிவில் ஐக்கியமாகிவிட்டார்." போன்ற விடயங்களும் மேற்படி யோகி கைலாஷ்நாத்தின் நூலுருவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

**தெய்வீக தரிசனம்**

தவிர, கடந்த 2012 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்ற மாலைநேரப் பூஜை வழிபாட்டின் போது, யாழ்ப்பாணச் சித்தர் சுவாமியின் சமாதிக் கோவிலினுள் அவரது சமாதியின் மீது அமைந்துள்ள சிவலிங்கத்தின் மீது நாகஜோதி ரூபமாக அவர் காட்சி கொடுத்தமைக்கான சான்றுகளும் உள்ளன. இந்த நிகழ்வு, சுவாமிகளின் தெய்வீக தரிசனமாக அமைவதோடு, யாழ்ப்பாண ஆறுமுகச் சித்தர் ஒளிவடிவம் எடுத்து மறைந்தார் எனும் மேற்படி புத்தகக் குறிப்போடு ஒப்பு நோக்கத்தக்கது.

"ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் மகான் ஸ்ரீ யாழ்ப்பாண ஆறுமுக சுவாமிச் சித்தரது சமாதிக் கோவிலில் பௌர்ணமி பூசை இடம்பெறுகிறது. அண்ணளவாக 150 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த மகான் ஸ்ரீ யாழ்ப்பாண ஆறுமுக சுவாமிச் சித்தரது சமாதிக் கோவில் பல வருடங்களின் பின்பு மறுசீரமைப்புச் செய்யப் பெற்று, கடந்த 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

## கலாசாரம்

எந்தவோர் இனத்துக்கும்
எவ்விதமாயினும்
இருக்குமோர் கலாசாரம்- அது
அந்தந்த இனங்கள் பின்பற்றும்
அசைத்திட
முடியாத ஆச்சாரம்
சொந்தமாய் சுயமாய் சுகமாய்
வாழ்ந்திட
வகுத்தனர் கலாசாரம்- அதுவே
எந்த இனம் எம்மதம் என்பதைக்
காட்டிட
செய்திடும் பிரச்சாரம்

செவ்வனே வகுத்தனர் செந்தமிழர்
தமக்கென
சிறந்ததோர் கலாசாரம்- அது
எவ்வினத் தவராலும் எழிதினில்
எட்டிட
முடியாத பெரும் தூரம்
எம் தமிழ் கலாசாரம்
எவ்வித் தாலுமதை மாற்றிட
முடியாதந்த
தேசத்தின் கலாசாரம்

எப்படியும் வாழலாம் என்பதனை
உணர்த்தும்
மேல்நாட்டு கலாசாரம்- நாம்
இப்படித்தான் வாழ்ந்திட வேண்டும்
என்பது
நம் தமிழ் கலாசாரம்
செப்படி வித்தைபோல் காண்பிக்கும்
பொருளல்ல
சிறந்த இக் கலாசாரம்- ஒரு
தம்பிடியும் பிசகாது பண்டைத்
தமிழரின்
வழிவந்த கலாசாரம்

*டே.த.எட்வின்*



## தாலத்தின் கோலம்



தமிழகம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பண்ணந்தூர் கிராமத்தில் 200 ஆண்டுகள் பழமையான, 100 கிளைகளுடன் கூடிய அதிசய பனைமரத்தை பலரும் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர். இந்த மரத்தை 7 தலைமுறையாக பராமரித்து வருகின்றனர் விவசாயி அப்பாஜி குடும்பத்தினர்.

"எங்க முன்னோர் காசியில் இருந்து ஒரு பனை விதை எடுத்து வந்து, இங்கு இருக்கிற பெருமாள் கோயில் எதிரே நட்டு வளர்த்தாங்க. இந்த பனை மரத்தில் கிளைகள் படர்ந்து, ஒவ்வொரு கிளையிலும் ஒரு மரம் வளர்ந்தது. இப்போது 7 தலைமுறைகளைத் தாண்டி, 100 கிளைகளுடன் பரப்பி நிற்கிறது. கடந்த ஆண்டு பெய்த கடும் மழை, சூறாவளிக் காற்றில் பல மரங்கள் வேரோடு சாய்ந்தன. இந்த பனைமரத்துக்கு சிறு சேதாரம்கூட இல்லை" என்று பெருமிதப்படுகிறார் அப்பாஜி.

"இந்த அதிசய பனை மரத்தால்தான் எங்கள் ஊருக்கு பண்ணந்தூர் என்கிற பெயரே வந்திருக்கும்' என்கின்றனர் கிராமத்து இளைஞர்கள். தொடர்ந்து அவர்கள் கூறும்போது, 'விஞ்ஞானிகள் பலர், இதன் விதைகளை எடுத்துச் சென்று பதியமிட்டனர். ஆனால் செடி வரவில்லை. அதேநேரம் மற்றொரு செடி இந்த பனைமரத்தின் கீழே முளைத்தது. அதை தாய் மரத்தின் எதிரே நட்டு வளர்த்தோம். அதிலும் கிளைகளுடன் மரம் வளரத் தொடங்கியது. வேறு இடத்தில் நட்டு வைத்த எந்த விதையும் வளரவில்லை" என்கின்றனர் அவர்கள்.

"எங்க முன்னோர் காசியில் இருந்து ஒரு பனை விதை எடுத்து வந்து, இங்கு இருக்கிற பெருமாள் கோயில் எதிரே நட்டு வளர்த்தாங்க. இந்த பனை மரத்தில் கிளைகள் படர்ந்து, ஒவ்வொரு கிளையிலும் ஒரு மரம் வளர்ந்தது.

*நன்றி- த ஹிந்து*

## பௌர்ணமி கவியரங்கில் பவ்வியமாய் கவிசொட்டிய "வகவ"க் குயில்கள்

தலைநகர் கொழும்பில், ஒவ்வொரு பௌர்ணமியன்றும் பல கவிஞர்களை ஒன்றிணைத்து ஒரு கவி சாம்ராஜ்யத்தை உருவாக்கி வெற்றி கண்டிருக்கிறார்கள் வலம்புரி கவிதா வட்டத்தினர்.
அதுவே-வகவம்-எனும் கூட்டமைப்பு.
'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என தரணி எங்கும் தாயகமாய்க்கொண்டு, கொழும்பு அல் ஹிக்மா கல்லூரியில் உலக கவிதை தினம் கொண்டாடப்பட்டது. நாம் எனும் தத்துவத்தை 'வகவம்' சரியாக அனுசரித்து நடைமுறைப்படுத்தி 47 அரங்குகளைச் செவ்வனவே ஒப்பேற்றியிருக்கிறார்கள். சபாஷ்! வளர்க! கடந்த 31ஆம் திகதி சனியன்று கலந்து கொண்ட சகோதரர் எம்மிடையே, அற்புதமான அன்னியோன்னிய கவித்துவ சகவாழ்வினையும், சகோதர பாசமுகம் கனிந்த சகோதாரத்துவ அன்பினையும், வரவேற்பினையும் நிஜமாகக் கண்டு வியந்தேன்.
பலே!









சுவிஸ் புங்குடுதீவு மக்கள் விழிப் புணர்வு ஒன்றியத்தின், இருபத்தோராவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற, 'வேரும் விழுதும் 2018' கலைமாலை நிகழ்வு சூரிச்சில் அண்மையில் இடம்பெற்றது.

## வரலாற்றில் இன்றைய தினம் 18.04.2018



*1983 - பெய்ரூட்டில், அமெரிக்கத் தூதரகம் மீது லெபனான் தற்கொலைத்தாரி நடத்திய தாக்குதலில் 63பேர் உயிரிழந்தனர்.*

1897 - கிரீஸ் மற்றும் துருக்கி இடையே ஓட்டோமன் பேரரசால் போர் அறிவிக்கப்பட்டது.

1902 - கௌதமாலாவில் 7.5 ரிச்டர் அளவிலான நிலநடுக்கத்தில் சுமார் இரண்டாயிரம் பேர் உயிரிழந்தனர்.

1945 - சுமார் 400 போர் வானூர்திகள் ஜேர்மனி மீது தாக்குதல்.

1949 - பிரிட்டனில் இருந்து பிரிந்து தனி நாடானது அயர்லாந்து.

1954 - கமால் அப்துல் நஸார் எகிப்தில் ஆட்சிக்கு வந்தார்.

1980 - முன்னைய றொடீசியா சிம்பாப்வே என பெயர் பெற்றது.

2013 - பாக்தாத்தில் உணவகம் ஒன்றின்மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில், 27 பேர் சாவடைந்தனர்.

வாடிக்கையாளர் அனைவருக்கும் அக்ஷய திருதியை திருநாள் வாழ்த்துக்கள்



வாடிக்கையாளர்களுக்கு ஓர் மகிழ்ச்சியான செய்தி

கடந்த 40 வருடகாலமாக யாழ் கஸ்தூரியார் வீதியில்
புகழ்பெற்ற எமது ஸ்தாபனம் தற்போது
யாழ் ஆஸ்பத்திரிக்கு முன்பாக



அ.ந.ஆனந்தராசா
(அப்பா)

462, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது
என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்



நியூ லலிதா நகை மாளிகை

யாழ்ப்பாணம் கிளிநொச்சி

தங்கத் திருநாளாம்
அக்ஷய திருதியை
இன்று (18.04.2018)
எம்மிடம்
தங்கத்தினை
கொள்வனவு செய்து
ஐஸ்வரியத்தை
பெருக்கிடுங்கள்

அந்த நாள் ஞாபகத்திற்கு என்னவொரு வசீகரம்
பாரம்பரியத்தின் அழகுக்கும் தரத்திற்கும்
சின்னமாக விளங்கும் கைராசியான ஸ்தாபனம்

462, Hospital Road, Jaffna. (Opposite of Jaffna Hospital) Tel: 021 222 4648 / 021 222 2552



சகல செல்வங்களும் அனைவரது
வாழ்விலும் நிறைவாய் பொழிந்திட
பிரார்த்திக்கின்றோம்



தங்கத் திருநாளாம்
அக்ஷய திருதியை
இன்று 18.04.2018



மங்காத செல்வத்தை
அள்ளித்தரும்
அக்ஷய திருதியை இன்று
எம்மிடம் தங்கத்தை கொள்வனவு
செய்யும் வாடிக்கையாளர்களுக்கு
விசேட கழிவு வழங்கப்படும்.

Anusha Jewellers
அனுஷா ஜூவல்லர்ஸ்

497/3 கண்டி வீதி, கிளிநொச்சி.
Kandy Road, Kilinochchi.

Tel: 021 228 4144



## ஏழாலை, களபாவோடை, வசந்தபுரம்
## அருள்மிகு
## ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்
## பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்வு - 2018



**காலம் : 13.04.2018 தொடக்கம் 27.04.2018 வரை**
**(காலை, மாலை இருவேளையும் - 18, 000 பாடல்கள்)**

உலகத்தில் சமாதானம் நிலைபெற வேண்டியும் சஞ்சலங்கள், துக்கங்கள், அவலங்கள் யாவும் நீங்கவும் யாழ். மண்ணின் வினை கடியவும் மண்ணில் நிம்மதி உருவாகவும் மக்கள் யாவரினதும் மனம் அமைதி பெறவும் நோய், வறுமை, கவலை, போர், அக்கிரமம், அடாவடிகள், அநியாயங்கள் யாவற்றில் இருந்தும் மீட்சி பெறவும். இத் திருமுறை முற்றோதல் நிகழ்த்தப்படுகிறது. அனைத்து அடியவர்களும் இந் நிகழ்வில் கலந்துகொண்டு பிறப்பின் பயனை அடைவதாக!

**தேவஸ்தானம்**

---

SPORTS EXHIBITION & AESTHETIC FIESTA
VANNI REHABILITATION ORGANIZATION FOR THE DIFFERENTLY ABLED
VAROD 'SEA' FIESTA 2011 - 2017

| பங்குபற்றியோர் | மருதம் [கிளிநொச்சி] | | | | | | | நெய்தல் [முல்லை] | | | | | | | குறிஞ்சி [வவுனியா] | | | | | | | ஒளி இல்லம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
| ஆண் | 41 | 56 | | 65 | 60 | 40 | 55 | 30 | 50 | | 147 | 80 | 44 | 67 | 13 | 65 | | 57 | 84 | 33 | 87 | 35 | 31 | | 20 | 25 | 56 | 25 |
| பெண் | 47 | 46 | | 111 | 75 | 62 | 65 | 20 | 30 | | 102 | 118 | 53 | 85 | 05 | 45 | | 64 | 104 | 35 | 76 | 21 | 15 | | 31 | 53 | 43 | 36 |
| கலை இலக்கியம் | 56 | 131 | 120 | 60 | 85 | 60 | 18 | 40 | 50 | 60 | 43 | 75 | 48 | 20 | 11 | 65 | 30 | 43 | 90 | 30 | 30 | 14 | 22 | 16 | 15 | 12 | 15 | 10 |
| கண்காட்சி | 20 | 122 | | 42 | 35 | 20 | 20 | 10 | 85 | | 35 | 36 | 40 | 15 | 14 | 33 | | 10 | 30 | 20 | 10 | 35 | 60 | | 30 | 60 | 60 | 15 |
| அரங்கப் போட்டிகள் | 19 | | 50 | 101 | 35 | 60 | 15 | 12 | | 50 | 70 | 60 | 45 | 12 | 11 | | 24 | 35 | 40 | 36 | 08 | 12 | | 10 | 14 | 15 | 12 | 20 |



## மாற்றுத்திறனாளிகளும் மனவலிமையூட்டும் விளையாட்டுக்களும், செயற்பாடுகளும் விளையாட்டுப் போட்டி 2018

VAROD

மாற்றுத் திறனாளிகள் என்பவர்கள் 'நிரந்தரமான அல்லது நீண்ட கால அளவுக்குக் குறைபாடுகள் உடையவர்கள் உதாரணமாக உடல் ரீதியான, மனரீதியான, சமூக ரீதியான, அறிவு ரீதியான குறைபாடுகள் மற்றும் மக்களின் கண்ணோட்டம், கலாசாரம், இயற்கைத்தடைகள் மற்றும் சட்டங்கள் போன்ற காரணங்களினால் சமுதாயத்தில் இணைந்து செயற்பட தடையாக உள்ள காரணத்தின் அடிப்படையில் உள்ளவர்கள்" (ஐக்கிய நாடுகளின் சாசனம்) மாற்றுவலுவுள்ளோர்க்கான வலுவூட்டல் அமையம் வன்னி V/DPS/NGO/G/2009/ii என்ற பதிவிலக்கத்துடன் 2009 ஆண்டு மே மாதம் தொடக்கம் (VAROD) தனது பணிகளை மாற்றுவலுவுள்ளோர் மத்தியில் பன்மைத்துவ வலுவூட்டல் செயற்பாடுகளை மாற்றுவலுவுடையோருக்கு, சிறந்த ஒழுங்கமைக்கப்பட்ட ஆன்மீக, கல்விசார், மருத்துவ, பொருளாதாரச் செயற்பாடுகள் மூலமாக எவ்வித மான பாகுபாடுமின்றி நிறைவான வாழ்வு வாழ வழிகாட்டல் என்ற இலக்கும் நோக்குடன் செயற்பட்டு வருகின்றது. இருவகையான நிகழ்ச்சித்திட்டங்களை ஆற்றி வருகின்றது. சமூகம் சார் வலுவூட்டல் திட்டம்

வரோட் அமையமானது வவுனியா மாவட்டத்தில் 52 சமூகம் சார் வலுவூட்டல் குழுக்களைச் சேர்ந்த 818 பயனாளிகளையும். கிளிநொச்சி மாவட்டத்தில் 137 சமூகம் சார் வலுவூட்டல் குழுக்களைச் சேர்ந்த 2806 பயனாளிகளையும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 113 சமூகம் சார் வலுவூட்டல் குழுக்களைச் சேர்ந்த 1603 பயனாளிகளையும் மொத்தமாக 302 குழுக்களும் 5227 பயனாளிகளையும் கொண்ட சமூகம் சார் வலுவூட்டல் திட்டத்தின் கீழ் நடத்தி வருகின்றது.

நிலையம் சார் நிகழ்ச்சித்திட்டம் நிலையம் சார் நிகழ்ச்சித்திட்டம் வரோட் அமையத்தினுள் இடம்பெறுகின்றது. இத்திட்டத்தின் கீழ் ஆண்கள் நிலையத்தில் 41 பயனாளிகளும் பெண்கள் நிலையத்தில் 46 மற்றும் வலுவூட்டல் மையத்தில் 20 பயனாளிகளும் காணப்படுகின்றனர் அவர்கள் நுண்ணறிவு மாற்றாற்றல் கொண்ட பயனாளிகளே பெரும்பாலான வீதத்தில் காணப்படுகின்றனர். அந்த வகையில் மக்களுடன் சமூகத்தில் ஒருங்கிணைப்புக்கான ஒரு கொள்கையாக விளையாட்டுத்துறையை தெரிவு செய்துள்ளது. மனிதனது ஆளுமைகளை வெளிக்கொணர்வதற்கும் அறிவுகளை வளர்ப்பதற்குமான ஓர் மூலமாகவிளையாட்டுத்துறை காணப்படுகின்றது. இதனை பெற்றோர்கள் உணர்தல் வேண்டும். குறிப்பாக இதுவே மாற்றாற்றல் கொண்ட பிள்ளைகளின் திறனை வளர்க்கவும் உதவுகின்றது. வாய்ப்புக்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் எடுத்து கொள்ளும்போதே உடல் சார்ந்த அனுகூலங்களாக நல்ல இரத்த ஓட்டம், வலுவான தசைகள் என்பன ஏற்பட்டு தனிநபர் சுகாதாரமான ஆரோக்கியமான வாழ்க்கையில் ஈடுபட முடியும். அதே போல உளம் சார் அனுகூலங்களான சமூக மற்றும் உணர்வு ரீதியான தன்மைகளை அவர்கள் நல்ல முறையில் எடுத்தியம்புவதற்கு வழிவகுக்கும். அதேபோல் விளையாட்டுக்களில் ஈடுபடும் போது மாற்றுவலுவுள்ள உள்ளங்களில் கவலைகளை மறந்து விளையாட்டில் உற்சாகமாகக் கலந்து சிறப்பித்து தங்களது திறன்களை அடையாளம் கண்டு தமது சுயமதிப்பீட்டை உயர்த்துவார். இருந்தபோதிலும் வறுமை காரணமாக மக்கள் விளையாட்டுக்கு முன்னுரிமைப்படுத்தாத நிலை காணப்படுகின்றது. மற்றும் வறிய சமூகங்களில் அவர்களுக்கான வடிவமைப்பு விளையாட்டுக் களங்கள் இல்லாமை போன்ற காரணங்களினால் விளையாட்டை மக்கள் தெரிவு செய்யாத தன்மை காணப்படுகின்றது. உட்கட்டுமான வசதி ஏற்படுத்தல். நிலையம் சார் நிகழ்ச்சித்திட்ட பயனாளிகள் நலன்கருதி. எமது நிலையப்பயனாளிகளுடன் பயணிக்கும் எமது பணியாளர்கள் அன்றாடம் விளையாட்டு நிகழ்வுக்காக உள்வாங்கப்படுகிறார்கள் இவர்கள் நலன் கருதி.

வரோட் அமையப்பகுதியில் மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் கூடைப்பந்தாட்டம் மற்றும் ரெனிஸ் விளையாட்டு பிரதேசங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விளையாட்டுப்போட்டி விளையாட்டுக்கள் ஒரு சிலரை மட்டும் பங்கு பெறச்செய்வதாகக் காணப்படுகின்றது. இத்தகைய வாய்ப்புக்கள் அனைவருக்குமே ஏற்படுத்திக் கொடுப்பது ஒரு சிறப்பான செயலாகும். அந்த வகையில் வரோட் நிறுவனமானது தன்னகத்தே வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி பயனாளிகளை உள்வாங்கி 2010ஆம் ஆண்டில் இருந்து விளையாட்டுப்போட்டி நிகழ்வை மேற்கொள்கின்றது. இவ்வாறு இணைந்த பயனாளிகளின் அடுத்த கட்ட நகர்வுகளுக்காக அரசு அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு படுத்தி மாவட்ட ரீதியான தேசிய, ரீதியில் பங்குபெறுவதற்கு உந்துசக்தியாக எமது நிறுவனம் தொழிற்பட்டது. இவ்வாறு மற்றைய மாற்றுவலுவுள்ளோரின் நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படுவதன் மூலம் இவர்களிடையே ஒற்றுமை சமாதானம், நல்லுறவு, தன்னார்வம் போன்றவற்றை நாங்கள் வலுவூட்டி அவர்களுடைய மேலான திறன்களை வளர்ப்பதன் மூலம் ஆரோக்கிய வாழ்வுக்கு வழிகாட்ட முடியும். அந்த வகையில் இவ்வாண்டு சித்திரை மாதம் 20 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் 'தன்னிறைவுடன் கூடிய குழுக்களின் வளர்ச்சியும் சமூக அபிவிருத்தியும்" தொனிப் பொருளில் நடத்த இருக்கின்றது. அந்த வகையில் குழுக்களானது ஆன்மீக, கல்விசார், மருத்துவ, பொருளாதாரச் செயற்பாடுகளில் விருத்தி பெற்று தங்களால் ஆன பங்களிப்பை சமூகத்துக்கும் பகிரப்பட வேண்டும் என்பதனை நோக்காகக் கொண்டு இவ்வருட விளையாட்டுப் போட்டியானது நடத்தவுள்ளது. இதற்கான செயற்பாடுகளின் முதற்கட்டமாக கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அதிபரைத் தொடர்பு கொண்டு மைதான ஒழுங்குகள் மற்றும் தங்குமிட ஒழுங்குகள், ஒப்டெக் நிறுவனத்தில் தங்குமிட ஆயத்தங்கள், நிதி திரட்டலுக்காக அதிஷ்ட லாபச்சீட்டுக்கள் விநியோகம் ஒலி, ஒளி அமைப்புக்கள் ஒழுங்கு, மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவையான ஆதரண உபகரண ஒழுங்கு மற்றும் மருத்துவ ஒழுங்குகள் போன்றன மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாற்றுவலுவுள்ள நபர்களை அவர்களுக்குப் பொருத்தப்பான நிகழ்வுகளில் பங்கு பெறச்செய்து அவர்களின் விருத்திச் செயற்பாடுகளை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொருவருடைய மாற்றுவலுவுக்கும் தகுந்த வகையில் சர்வதேச பரா ஒலிம்பிக் நியமத்துக்கு அமைவான விளையாட்டுக்களைத் தெரிவு செய்து விளையாட்டுப் போட்டியை நடத்தவுள்ளது. இருந்த போதிலும் நுண்ணறிவு மாற்றாற்றல் கொண்ட பயனாளிகளுக்காகவும் நிகழ்வுகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

மாற்றாற்றல் வகைகள் : *முழங்காலுக்கு கீழ் கால் அகற்றப்பட்டவர். *முழங்காலுக்கு மேல் கால் அகற்றப்பட்டவர். *கை வலது குறைவு. *பார்வை குறைந்தவர். *முற்றாகப் பார்வை அற்றவர். *சக்கர நாற்காலி பயன்படுத்துபவர். *மன வளரச்சி குன்றியவர். *கேட்டல், பேச்சு குறைபாடு உடையவர்.

விளையாட்டு நிகழ்ச்சி 1.குண்டு போடுதல் 2. நீர் நிரப்புதல் 3. 100 m சாக்கோட்டம்

சுவட்டு நிகழ்ச்சி 1.100m ஓட்டம் 2.200 m ஓட்டம் 3. 400 m ஓட்டம் 4. 800 m ஓட்டம் 5.அஞ்சல் ஓட்டம்

பொது நிகழ்வு 1.சக்கர நாற்காலி ஓட்டம் (வீதி) ஆண் 2.மரதன் ஆண்கள் மரதன் பெண்கள் 3. சைக்கிள் ஓட்டம் ஆண்கள், பெண்கள் 4. சக்கர நாற்காலி பயன்படுத்துவோருக்கான கூடைப்பந்தாட்டம் 5. கரம், டாம், செஸ்

இவ்வருடம் 500 பயனாளிகள் விளையாட்டுக்களில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். அவர்களின் விளையாட்டுத்தேவை பூர்த்தி செய்து மனநிறைவான பங்கேற்பை ஏற்படுத்தி அவர்களின் திறன்களை வளர்க்க உதவுவதாகும். 2010 ஆண்டிலிருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் பாரிய நிதி வசதியை வெளிநாட்டு நிதியனுசரணையாளர்களான மானோஸ், யுனிதாஸ், ஜேர்மன், ஹரிராஸ், மீசேரியோர் நிதிப்பங்களிப்பை வழங்குள்ளனர். இருந்த போதிலும் எமது உள்நாட்டு தன்னார்வம் கொண்ட உறவுகளும் நிதிப்பங்களிப்பை தொடர்ந்தும் ஆற்றிவருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வாழ்வாங்கு வாழ வழி சமைப்போம் என்ற வரோட் அமையத்தினுடைய மகுட வாக்கிற்கமைவாக எமது பயனாளிகள் தனிநபர் வலுவூட்டம் பெற்று குழுக்களை வலுவுடையச் செய்து சமூகத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கு வரோட் அமையமானது தொடர்ந்தும் தனது செயற்பாடுகளை மேற்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

20.04.2018 அன்று கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவிருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப்போட்டி நிகழ்வில் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாற்றுவலுவுள்ளோர்க்கான வலுவூட்டல் அமையம்
வன்னி 4ஆம் கட்டை மன்னார் வீதி, பம்பைமடு, வவுனியா.

# அதிர்ஷ்டத்தில்...

வவுனியா வடக்கு பிரதேச சபைக்கான தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவுக்கான சபை அமர்வு நேற்றுக் காலை 10 மணிக்கு, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 3 உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 2 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் 3 உறுப்பினர்களும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் 5 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 3 உறுப்பினர்களும், மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த தலா ஒவ்வொரு உறுப்பினர்களுமாக சபையின் 26 உறுப்பினர்களும் அமர்வில் பங்கேற்றனர்.

தவிசாளர் தெரிவுக்குப் பெயர்களை முன்மொழியுமாறு உள்ளூராட்சி ஆணையாளர் கோரினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ச.தணிகாசலமும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் ஜெ.ஜெயரூபனும் முன்மொழியப்பட்டனர். இருவரும் தலா 11 வாக்குகளைப் பெற்றனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 3 உறுப்பினர்களும், மக்கள் விடுதலை முன்னணியின் ஒரு உறுப்பினரும் நடுநிலமை வகித்தனர்.

இருவரும் சமமான வாக்குகளைப் பெற்றதால், அதிர்ஷ்டத்தில் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ச.தணிகாசலம் வெற்றி பெற்றார்.

**உபதவிசாளர் தெரிவு**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் து.தமிழ்ச்செல்வனை அதே கட்சியைச் சேர்ந்த ச.இரயசுலோசனா முன்மொழிய, சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் த.பார்த்தீபன் வழிமொழிந்தார். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி சார்பில் காமினி விக்கிரமபாலாவை அதே கட்சியைச் சேர்ந்த பிமல் தர்மதாச முன்மொழிய, விஜேதுங்க வழிமொழிந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் ந.யோகராஜாவை அதே கட்சியைச் சேர்ந்த சோ.சத்தியேந்திரன் வழிமொழிய, அந்தக் கட்சியின் ம.செந்தூரன் முன்மொழிந்தார்.

இந்த நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் முன்மொழியப்பட்டது. தமிழ்ச் செல்வன் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். ஏனைய இரு உறுப்பினர்களுக்கும் இடையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

கூட்டமைப்பின் சார்பில் முன்னிறுத்தப்பட்ட ந.யோகராஜா 14 வாக்குகளைப் பெற்றார். கூட்டமைப்பின் 8 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 3 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும், ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் ஒரு உறுப்பினரும் ஆதரவளித்தனர்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் சார்பில் முன்னிறுத்தப்பட்டவருக்கு 6 வாக்குகளே கிடைத்தன. அவரது கட்சியைச் சேர்ந்த 5 பேரும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் உறுப்பினரும் ஆதரவாக வாக்களித்திருந்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் 3 உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும், மக்கள் விடுதலை முன்னணியின் ஒரு உறுப்பினரும் நடுநிலைமை வகித்தனர்.

கூட்டமைப்பின் உறுப்பினர் ந.யோகராஜா உபதவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

(ґ-5,110)

# கூட்டமைப்புக்கு...

புக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவுவழங்கியது.

வவுனியா வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உபதவிசாளர் தெரிவு நேற்றுக் காலை இடம்பெற்றது. தவிசாளர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிர்த்து தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்டது. அப்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடுநிலமை வகித்திருந்தது.

உபதவிசாளர் தெரிவின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறுத்திய வேட்பாளருக்கும், மகிந்தவின் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி நிறுத்திய வேட்பாளருக்கும் இடையே வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 3 உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்தனர்.

இதேவேளை, வவுனியா தெற்கு பிரதேச சபையின் உபதவிசாளர் தெரிவின்போது, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான போட்டியின்போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடுநிலமை வகித்தது. உப தவிசாளர் பதவி சுதந்திரக் கட்சிக்குச் சென்றது.

வெண்கலச்செட்டிக்குளம் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு நேற்று முன்தினம் இடம்பெற்றது. கூட்டமைப்புக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான போட்டியின்போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடுநிலமை வகித்திருந்தது. கூட்டமைப்பை ஓர் வாக்கால் தோற்கடித்து தவிசாளர் பதவியை சுதந்திரக் கட்சி கைப்பற்றியிருந்தது.

(ґ-5,110)


## நாகபூஷணி திருமண சேவை

**பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்.** நீங்கள் விரும்பும் அரச உயர்பதவியில் உள்ளவர்கள், வங்கியாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், தனியார்துறையினர், வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப்பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

**47/ 1, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.**
**(தம்றோக்கு முன்பாக)**
**077 138 7596, 071 8945 692**


## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
### பாடசாலை அபிவிருத்திச்சங்க பொதுக்கூட்டம்

கல்வி அமைச்சின் 2013/7 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 2018/2019 ஆம் ஆண்டிற்கான பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் **30.04.2018 திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு** கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் நடைபெறும் எமது கல்லூரியின் அனைத்துப் பெற்றோர்களும் 17.03.2018 இல் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பழைய மாணவர் பிரதி நிதிகளும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.** (IN 6500) (14.17)
**சதா நிமலன்**
**அதிபர்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
16 . 03 . 1960

விண்ணில்
18 . 04 . 2017

**அமரர் பாலசிங்கம் ஜோர்ஜ் ரட்ணகுமார்**

*எம் அப்பா எம்மை விட்டு நீங்கி ஓராண்டு கடந்தாலும் என்றும் எம் நினைவில் வாழ்வீர்கள்*

**இல.09, மருதடிலேன்,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.** (CS 15748) (14.17)
**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைக்கான அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு
09 . 07 . 1944

உதிர்வு
20 . 03 . 2018

**அமரர் சின்னத்தம்பி கயிலைமகான்**

**(ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் வலிகாமம் கல்வி வலயம்**
**முன்னாள் உபதலைவர் பல.நோ.கூ.ச)**

கடந்த 20.03.2018 எமது குடும்பத்தலைவர் இறைபதமடைந்த செய்திகேட்டு உடன் வந்து உதவியோர், தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தோர், நேரில் வந்து அன்னாரின் ஈமைக்கிரியைகளில் பங்குகொண்டோர், உதவியோர், பதாதைகள், அஞ்சலிப் பிரசுரங்கள், மலர் வளையங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோர் மற்றும் பல்வேறு வகைகளில் எமக்கு உதவி புரிந்தோர் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு இன்று (18.04.2018) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மட்டத்தடி, கொல்லங்கலட்டி,**
**தெல்லிப்பழை.**
**மனைவி,**
**குடும்பத்தினர்.**


## விற்பனைக்கு

நியூ மொடல் இத்தாலி சீவல் மிசின் பட்டறை.

**077 468 3291, 077 110 3261**

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வேலை ஆள்தேவை.
**01) விற்பனைப்பிரதிநிதிகள்** (Sales Rep)
**02) வாகன சாரதி** (Driver)

**077 386 7696**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

நுணாவில் எல்லை ஒழுங்கையில் கண்டி வீதிக்கு அண்மையில் 6 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

**076 379 0322** (CS/15660) (11.17)

## வேலையாள்கள் தேவை

கடையில் வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள வேலையாள்கள் (ஆண்) தேவை. (வயது 18 - 21)

**தொடர்பு - 077 158 9506**

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் சிட்டை போடுபவர் ஆண்/ பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.

**- 077 348 2634, 077 526 9182**

## வேலையாள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

- களஞ்சியக்காப்பாளர்
- கணக்கு உதவியாளர்

**077 623 1295 - முகுந்தன்**
**மகாத்மா வீதி, யாழ்ப்பாணம்.**


## பெயர்மாற்றம்

*கோண்டாவில், குட்செட் வீதியில் தற்போது வசித்து வரும் **வயிரவன் சண்முகராசா** ஆகிய எனது **பிறப்புச் சான்றிதழில் சண்முகநாதன்** என உள்ளது. என்னால் இதுவரை பயன்படுத்தி வரப்பட்ட எனது **சண்முகராசா** என்ற பெயரையே தொடர்ந்தும் பயன்படுத்தி வருவேன் என இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.*

(CS/15746)(11.17)
**- வ.சண்முகராசா -**

## கண்ணீர் அஞ்சலி



**எமது பாடசாலை அதிபர்**
**சி.பவளகுமாரன் அவர்களின்**
பாசமிகு மாமியார்
**இலங்கையர் தில்லைநாயகி**
அவர்கள் இறைபதம் அடைந்துள்ளார். அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிசங்கம்,**
**யா/ நாவற்குழி மகாவித்தியாலயம், கைதடி நாவற்குழி.**

(CS/15741)(11.17)

## மரண அறிவித்தல்

### திருமதி சாந்தகுமாரி சோதிலிங்கம்



முதலாம் வட்டாரம், அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தகுமாரி சோதிலிங்கம் நேற்று (17.04.2018) செவ்வாய்க்கிழமை அகால மரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருணாச்சலம் - திருப்பதி தம்பதிகளின் அன்பு மருமகளும் சோதிலிங்கத்தின் அன்பு மனைவியும் யோகநாதன், லலிதாம்பிகை, வசந்தலீலா, ஐங்கரன், காலஞ்சென்றவர்களான புஸ்பகலா, றங்கநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயமலர் (லண்டன்), காலஞ்சென்ற வேலாயுதம் (நவாலி) மற்றும் அருள்நாதன் (நாரந்தனை), ஜெகதீஸ்வரி (ஏழாலை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2018) புதன்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 383 7508**
**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தினூடாக தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி தமிழ் சிறப்புப் பட்டம் (B.A) பெறும் வாய்ப்பு !

- க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தி (பழைய பாடத்திட்டம் 4 பாடங்கள்)
- உயர்தரத்தில் எத்துறையில் பயின்றவர்களும் பட்டப் படிப்பைத் தொடரமுடியும்.
- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (Grants Commission) அங்கீகரிக்கப்பட்டது.
- இலங்கையில் இருந்தவாறே பட்டப்படிப்பை நிறைவு செய்ய முடியும்.
- வயதுக்கட்டுப்பாடு இல்லை
- எதிர்வரும் மேமாதம் 06 ஆம் திகதி விரிவுரைகள் ஆரம்பமாகும்.

பதிவுகளை மேற்கொள்ளும் இறுதித்திகதி 30.04.2018 வரை நீக்கப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு :
077 805 1173
070 305 1173

தமிழ் இணையக்கல்விக்கழகம்
பாரதி இன்ஸ்ரியூட்
மீசாலை மேற்கு, மீசாலை, சாவகச்சேரி.

# வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவி வெற்றிடங்களை நிரப்புதல்-2018

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01 ஆம் திகதி தொடக்கம் வலிகாமம் வடக்கு பிரதேசசபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கமைய தற்பொழுது கீழ்க்காணும் பதவியில் காணப்படும் வெற்றிடத்தினை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்துவிண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல | பதவிப்பெயர் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சுகாதாரத் தொழிலாளி | 01 |

### ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள்

1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள் / தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் 3 வருட தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

### பொதுவானஅடிப்படைத்தகைமைகள்

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் அத்துடன் வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் தொடர்ச்சியாக 5 வருடங்கள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட வதிவிட சான்றிதழ் பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப் படவேண்டும்.அல்லது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் வாக்காளர் பட்டியலின் மூலப்பிரதி மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
3. நன்னடத்தை உடையவராகவும் சிறந்ததேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. சேவை தொடர்பானமுன் அனுபவம் கருத்திற் கொள்ளப்படும்.

### கல்வித்தகைமைகள்

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு:** போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத நிலையில் 08ஆம் வகுப்புசித்தி கவனத்தில் கொள்ளப்படும்.

### சம்பள அளவுத்திட்டம்

பொது நிர்வாக சுற்றறிக்கை இல: 03/2016 இதற்கமைவாக சம்பளத்தொகுதி PL - 1- 2016 இற்கு ஏற்ப சம்பள விகிதமானது 24250-10x250-10x270-10x300-12x330 - 36410 அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

### தெரிவுசெய்யப்படும் முறை

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினரால் நடத்தப்படும் நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர். விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்குரிய ஒழுங்குவிதிகளுக்கு அமைந்து ஒழுகுதல் வேண்டும்.

### விண்ணப்பிக்கும் முறை

1. வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் ரூ 100.00 ஐ செலுத்தி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப் பட்ட பிரதிகளுடன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
2. விண்ணப்பத்தில் உரியமுறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக்கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு **செயலாளர், வலிகாமம் வடக்குபிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
4. தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்படல் வேண்டும்.
5. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின் படிவிண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ நியமனத்திற்குப் பின்னரோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப் படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் இந்நியமனம் நிறுத்தப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி:** 2018.05.09 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**இராமலிங்கம் பகீரதன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்குபிரதேச சபை,காங்கேசன்துறை.**
**2018.04.18.**

(C)(11,17)

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு: 021 493 1111
advt@uthayan.com
உதயன்

வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், முல்லைத்தீவு மாவட்டச் செயலகமும் மற்றும் கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும்

## மாபெரும் தமிழ் சிங்களப் புத்தாண்டு விழா - 2018

இடம் - முல்/ சிலாவத்தை இளம்பறவை விளையாட்டு மைதானம், சிலாவத்தை
காலம் - 19.04.2018 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.00 மணி முதல் மாலை வரை

**பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள்**

**காலை 6.00 மணிக்கு மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம்**

**இருபாலாரும் கலந்துகொள்ளலாம்**

- முதலாம் பரிசு - 25000/-
- 2ஆம் பரிசு - 20000/-
- 3ஆம் பரிசு - 15000/-

**மற்றும் பத்து ஆறுதல் பரிசுகள் தலா 3000/- வீதம்**

சைக்கிள் ஓட்டம். மரதன் ஓட்டம் நிகழ்வுகளுக்கு மருத்துவ சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**காலை 8.30 மணிமுதல் ஆண், பெண், முதியோர் பங்குபற்றும் பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகள்**

கயிறு இழுத்தல். கிளித்தட்டு. போர்த்தேங்காய் உடைத்தல். கைக்கொடிச்சவாரி. வழுக்குமரம் ஏறுதல். சாக்கோட்டம். தயிர்முட்டி உடைத்தல். தலையணைச் சண்டை. நீத்துப்பெட்டி பின்னுதல். கிடுகு பின்னுதல். பலூன் ஊதி உடைத்தல். யானைக்குக் கண் வைத்தல். தேசிக்காய் கரண்டி ஓட்டம். தோரணம் பின்னுதல். மாலை கட்டுதல். வேக நடை. நீர் நிரப்புதல்.

**மாலை 2.30 மணிமுதல் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.**
**போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்.**

(IN/6502)(11,17)

# மரண அறிவித்தல்கள்

## யோன் ஞானமுத்து துரைராசா



பிறப்பு 23.02.1926 இறப்பு 12.04.2018

யாழ். பழைய பூங்கா வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாவும் கொண்ட ஜோன் ஞானமுத்து துரைராசா அவர்கள் 12.04.2018 வியாழக் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார். காலஞ்சென்றவர்களான ஜோன் - மேரி தம்பதிகளின் மூத்த புதல்வரும் காலஞ்சென்ற இரத்தினம்மா இன் அன்புக் கணவரும் குணேந்திரன்(பிரான்ஸ்). குணசீலி(பிரான்ஸ்). ஜேந்திரன்(பிரான்ஸ்). தர்மா(பிரான்ஸ்). ஜெயா(பிரான்ஸ்). விஜி(பிரான்ஸ்). கிளேன்(டென்மார்க்). தயா(சுவிஸ்). சந்திரசிறீ(கனடா). மரீன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான அருளம்மா. ஞானம்மா(மணி). ராசதுரை. வேவிராசா மற்றும் வேவி(யாழ்ப்பாணம்). ரூபி(கொழும்பு). தங்கராசா(கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் நிர்மலா. ஃபீலிக்ஸ் மனோதாஸ். தயாளினி. காலஞ்சென்ற ஜெயராஜா. ஆரோக்கியராஜா. ஜெயா. வலன்ரைன். அம்புரோஸ். மொறின். கமிலஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான ஞானம். சரஸ்வதி மற்றும் நடராசா. வடிவம்மா. செல்லமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜூலியன். ஜெனிஃபர். சுஜோ. கிலிற்றஸ். க்ளறன்ஸ். சூரியா. மேரிஜா. தெபோரா. சாமுவேல். எஸ்தர். எப்சிபா. டொறின். தனுஷன். ஜெனுஷன். பானு. லீனு. றேனு. லினோஷா. பிரவீன். ஸ்ரெஃபானி. ஷரோமி. டானியேல். நிக்கோலாஸ். ஸ்ரெஃபான். அலேனா. லிடியா. ஒலிவர். ஏஞ்சலின். பெனுவா. கமலின் ஆகியோரின் அன்புப் பேரனும் அமோலினா. நோவான் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.04.2018) புதன்கிழமை மு.ப 8.30 மு.ப 10.00 மணி வரை Cimetire Inter communal des Joncherolles. 95 Rue Marcel Sembat. 93430 Villetaneuse. France என்னும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு மு.ப 11.00 மணிக்கு SainteLouisedeMarillac. 5 Rue Anatole France. 93700 Drancy. France இல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


(IN 6503) (14.17)

**தகவல்: யோன் தங்கராசா**

**தங்கராசா(இலங்கை) - +94766712763,+94769251834**

## காசிப்பிள்ளை விவேகானந்தன்

**(அன்ரியப்பா)**



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கைதடி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை விவேகானந்தன் நேற்று (17.04.2018) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்புமகனும் மானார் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற உத்திராடம்மாவின் (செல்லம்மா) அன்புக்கணவரும் தயாபரனின் (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) அன்புத்தந்தையும் சுஜாதாவின் (ஆயுர்வேத வைத்தியர் மாவட்ட சித்த வைத்தியசாலை புதுக்குடியிருப்பு) அன்பு மாமனும் அஸ்விகா வின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான இராசநாயகம், செல்வநாயகம், இராசம்மா, தம்பிஐயா, தங்கம்மா, மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான திரிபுரியம்மா, பத்மாவதி துரைசிங்கம் மற்றும் பத்மநாதன், கோபாலசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17.04.2018) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரியான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கைதடி மேற்கு. கைதடி.**

**தகவல்: வி.தயாபரன் (மகன்)**

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை – காங்கேசன்துறை
## கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2018

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடைகளினை வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்கமைய மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :-18.04.2018 தொடக்கம் 08.05.2018 பிற்பகல் 3.00 மணி வரை

கேள்விப் பத்திரம் ஏற்கப்படும் இறுதித்திகதி:- 09.05.2018 புதன் கிழமை நண்பகல் 12.00 மணி வரை

கேள்விப் பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:- 09.05.2018 புதன் கிழமை பிற்பகல் 1.00 மணி

கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியினை தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 09.05.2018 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். மறு பிரதியினை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் , யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்படல் வேண்டும்.

01.கேள்விப் பத்திரங்கள் கேள்வி கோரும் ஒவ்வொரு வியாபார நிலையங்களுக்கும் தனித்தனியாக கீழ்க் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணங்கள், மீளளிக்கக்கூடிய கேள்விவைப்புப் பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ளவேண்டும்.

02. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் ஏதும் மீளளிக்கப்படமாட்டாது.

03.ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.

04. இக் கேள்வியானது வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்குட்டபட்ட பகுதியில் நிரந்தர வதிவிடத்தினை கொண்ட கேள்வியாளர்களுக்கு மட்டும் வழங்குவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கேள்வியாளர்கள் கேள்வியுடன் வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் இறுதியாக 03 வருடங்கள் வசித்-தமையினை உறுதிப்படுத்தி கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச்சான்றிதழ் அல்லது வாக்காளர் பட்டியலின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி சமர்ப்பிக்க வேண்டும். வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்காத கேள்விகள் நிராகரிக்கப்படும்.

05. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.

06. கேள்வி நிபந்தனைகள். அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்விதாரரை காரணம் காட்டாது ஏற்கவோ / நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.

07. இவ் வியாபார நிலையங்களுக்கான மாதாந்த வாடகை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் தொகைக்கேற்ப சித்திபெறும் கேள்விதாரரிடமிருந்து பிரதேச சபையால் அறவிடப்படும். அத்துடன் காலத்திற்கு காலம் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் வாடகை செலுத்தப்பட வேண்டும்.

08. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே கடை நடாத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். எனினும் வாடகைக்கு பெற்றவரின் இயலாமை, இறப்பு போன்ற காரணங்களினால் அவரது வாழ்க்கை துணை, வாரிசு நடத்த அனுமதிக்கப்படுவர்.

09.கடை கட்டடத்தில் புனரமைப்பு வேலைகள், மாற்றங்கள், சேர்ப்புகள் எதுவும் சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.

10.சித்திபெறாத கேள்விதாரரின் கேள்விவைப்புப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்க முடியும்.

11.தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத்திற்குள் பிரதேச சபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினை பெற்று வியாபாரம்/ தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

12.பெற்றுக்கொள்ளும் கடைகளில் ஏற்படும் பாதிப்புகளுக்கு குத்தகைக்கு எடுத்தவரே பொறுப்புடையவராவார்.

13.சித்திபெறும் கேள்விதாரர் பிரதேச சபையால் அங்கீகரிக்கப்படாத பொருள்களை விற்பனை செய்வதோ, மதுபான வகைகளோ, போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்த பொருள்களையோ விற்பனை செய்வது தடைசெய்யப்படுவதுடன் . கடைக்கட்டடம் வேறு எந்த சட்டவிரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.

14.வாடகைப்பணம் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். தவறின் மீதித் தண்டப் பணமும் சேர்த்து அறவிடப்படும் என்பதுடன் வாடகைப்பணம் மூன்று மாதங்கள் தொடர்ந்து செலுத்த தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.

15.ஒப்பந்தத்திற்கான முத்திரைச் செலவுகளையும் சித்தி பெறும் கேள்விதாரர் ஏற்றுக்கொள்ளவேண்டும். சித்தி பெற்ற கேள்விதாரரால் பிரதேச சபைக்கு செலுத்தப்பட்ட திறப்பு பண தொகை எச்சந்தர்ப்பத்திலும் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.

16.கேள்வி சம்மந்தமாக மேலதிக விபரங்களை/தகவல்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| விபரம் | பரப்பளவு (சதுர அடி) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) | கேள்விப் பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு |
|---|---|---|---|---|
| தெல்லிப்பளை | | | | |
| கடை இல 1 முதலாம் மாடி | 3170 சதுர அடி | 6,000,000.00 | 2000.00 | 600,000.00 |
| வீமன்காமம் | | | | |
| கடை இல1 | 370 சதுர அடி | 1,000,000.00 | 2000.00 | 100,000.00 |
| கடை இல2 | 180 சதுர அடி | 500,000.00 | 2000.00 | 50,000.00 |
| கடை இல3 | 180 சதுர அடி | 500,000.00 | 2000.00 | 50,000.00 |
| கீரிமலை | | | | |
| கடை இல1 | 435 சதுர அடி | 1,000,000.00 | 2000.00 | 100,000.00 |
| கடை இல2 | 220 சதுர அடி | 500,000.00 | 2000.00 | 50,000.00 |
| கடை இல3 | 220 சதுர அடி | 500,000.00 | 2000.00 | 50,000.00 |
| கடை இல4 | 220 சதுர அடி | 500,000.00 | 2000.00 | 50,000.00 |

**சோமசுந்தரம் சுகிர்தன் தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.** **18.04.2018**


**இராமநாதன் கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுச்சபைக்கூட்டம்**

**இடம் - அருணாசலமண்டபம்**
**திகதி - 29.04.2018 ( ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம் - மு.ப. 10.00 மணி**

அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

**அதிபர், யா/ இராமநாதன் கல்லூரி மருதனார்மடம்.**

**விசேட கூட்டம்**

அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலய வருடாந்த சித்திரைப் பௌர்ணமியை முன்னிட்டு வியாபார நிலையம் அமைப்பவர்கள், காவடி வாடகைக்கு விடுபவர்களையும் 20.04.2018 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆலயத்தில் நடைபெறும் விசேட கூட்டத்தில் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**077 837 9262,**
**077 623 2968** **- ஆலய பரிபாலன சபையினர் -**

(00315)(11,17)

**வேலைவாய்ப்பு**

**Easy Accounting As** நிறுவனத்தின் புதிதாக தொடங்க இருக்கும் கிளைக்கு கணக்காளர்கள் **(Accountants)** தேவை.

**தகைமை - Charter Account CIMA, B.Sc Accounting, HNDA/ M/BA/BS/BF, DICA. MS Office, ACCA சான்றிதழ் பெற்றவர்களும் வேறேதேனும் கணக்காளர் சம்பந்தமாக படித்துக் கொண்டிருப்போரும் வரவேற்கத்தக்கது. ஆங்கிலம் கட்டாயம் எழுத வாசிக்க தெரிந்திருக்கவேண்டும்.**

**அடிப்படைச்சம்பளம் - 30, 000 /=**
**விண்ணப்பமுடிவுதிகதி - 28.04.2018**

**தொடர்பு - Thesee@easya.no**
**Tel : 077 488 6999 தெல்லிப்பழை.**

வடக்கில் முன்னணியில் திகழும் கிறீன்கிறாஸ் ஹோட்டலில் உடனடி

**வேலைவாய்ப்பு**

- சமையலாளர்
- சமையலறை உதவியாளர்
- உணவு பரிமாறுபவர் (Waiter)
- சுத்திகரிப்பாளர்

கவர்ச்சிகரமான சம்பளத்துடன் தங்குமிடம் மற்றும் உணவு இலவசமாக வழங்கப்படும்

இல 33,ஆசீர்வாதம் லேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
greengrassjaffna@gmail.com

சனிக்கிழமை (21.04.2018)
காலை 9 மணி தொடக்கம்
3 மணிக்கிடையில்
நேரில் வரவும்


**மரண அறிவித்தல்**

**செல்லத்துரை சத்தியசீலன்**

*(ஓய்வு பெற்ற அஞ்சலர், யாழ் தபாலகம்)*



G.P.S றோட், கல்வியங்காட்டினைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சத்தியசீலன் 15.04.2018 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் வரதராசா, சதீஸ்வரி, செல்வராணி, சசிக்குமார் ஆகியோரின் தகப்பனாரும் காலஞ்சென்றவர்களான வைரவநாதன், பூமணி, இராசமணி மற்றும் அன்னமுத்து, வேலாயுதபிள்ளை, அரசபிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.04.2018 சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**G.P.S றோட்,**
**கல்வியங்காடு.** (CS 15743) (14)

**தகவல்: ஐ.அரசபிள்ளை (மைத்துனர்)**

**077 472 0971**

# வடக்கில் விருந்தோம்பல் முகாமைத்துவத் துறையில் இணைந்து பணியாற்றும் இளையோரின் வெற்றிக்கதைகள்

கதை–1

"தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன் மெய் வருத்தக் கூலிதரும்" என்றார் வள்ளுவர். கடின முயற்சியால் மலையையும் தகர்க்க முடியும் பாறைக் குள்ளும் பனிப்பூக்களை விதைக்க முடியும் என்று வாழ்க்கையின் துன்ப காண்டங்களை அதிகமாகக் கொண்டு வெற்றிச் சரித்திரம் படைத்த ஓர் படைப்பாளியை இக்கட்டுரை அலச வருகிறது.

ஆயகலைகள் அறுபத்துநான்கு என்பர். இக்கலைகளில் சிறந்த தனித்தன்மை வாய்ந்த கலைகளைத் தான் சமூகம் நாள்தோறும் உட்கொள்கிறது. அதன்படி நாம் நாள் தோறும் உயிர் வாழப் புசிக்கும் உணவு என்பதும் கூட ஒரு கலை வடிவம்தான். இவ்வுலகில் வாழும் ஜீவராசிகள் அனைத்தின் அடிப்படை ஆதாரம் உணவுதான். இதற்காகத்தான் மனிதன் இத்தனை போராட்டத்தைக் கடக்கிறான். இவ்வளவு வேதனைகளைச் சுமந்து உழைக்கிறான். இவ்வாறு கஸ்டப்படுபவர்களுக்கு ஆறுதல் தரும் உணவுகளை சுவையாகவும் தரமாகவும் கொடுக்கும் பட்சத்தில் அவன் அடையும் ஆனந்தம் என்பது அலாதியானது. அதன்படி இன்று நாம் பார்க்க இருக்கும் கட்டுரையில் நம் சிந்தனைகளுக்கு புத்துணர்வளிக்க வருகிறது சின்னத்துரை ஜெயக்குமார் என்னும் சமையல் கலைஞரின் வாழ்க்கை.

யாழ் மாவட்டம் சுன்னாகம் மேற்கு பகுதியைச் சேர்ந்த ஊரெழு என்னும் கிராமத்தில் சின்னத் துரை புஸ்பதேவி தம்பதிகளின் 4ஆவது மகனாகப் பிறந்தவர்தான் சின்னத்துரை ஜெயக்குமார். அப்பா துவிச்சக்கர வண்டி பழுதுபார்ப்பவர். அம்மா தோட்ட வேலை செய்பவர். வீட்டில் 4 பிள்ளைகள் என்பதால் வறுமையும் உடனே தொற்றிக் கொள்ள அப்பாவின் உழைப்பை மட்டுமே நம்பி இருந்த இக் குடும்பத்திற்கு எப்படி ஜெயக்குமார் ஓர் உதவியாளனாக மாறினார் என்பதைப் பார்ப்போம்.

யாழ் மானிப்பாய் மெமோரியல் கல்லூரியில் தனது பள்ளிப் படிப்பைத் தொடங்கிய ஜெயக்குமார் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் நல்ல மதிப்பெண் பெற்று தனது உயர் கல்வியை சுன்னாகம் ஸ்கந்ரோதயா கல்லூரியில் பயின்றார். சிறுவயது முதலே விளையாட்டில் மிகவும் ஆர்வமான மாணவராக திகழ்ந்த ஜெயக்குமாருக்கு மிகவும் பிடித்த விளையாட்டு கால் பந்தாட்டம். அப்பகுதியில் இயங்கிவரும் சுன்னாகம் ரோயல்ஸ் கால்பந்தாட்ட கழகத்தில் சிறுவயது முதலே அங்கத்தவராக திகழும் ஜெயக்குமார் தனது பள்ளி காலங்களின் ஓய்வு நேரங்களைக் கூட கால்பந்தாட்டத்திலே செலவு செய்து இருக்கிறார். மேலும் குடும்பச் சூழல் காரணமாக பகுதி நேரங் களில் தோட்டவேலைகளுக்கு சென்றும் குடும்ப பொருளாதார நிலை உயர்வுக்கு உதவியாக இருந்திருக்கிறார்.

சிறுபராய மாணவர்களிடம் உங்களின் எதிர்கால இலட்சியம் என்ன என்று கேட்டால் அவர்கள் எப்படி வெடுக்கென உடனடி பதில் கொடுப்பார்களோ அதே போல இப்போது நாங்கள் கேட்ட போதும் துடிப்புடன் பதில் சொல்கிறார். தனக்கு மிகவும் பிடித்த பணி ஆசிரியப்பணி என்றும் ஆனால் சூழ்நிலைகளால் பிடித்த வேலையை தன்னால் தொடர முடியாமல் போனது என வேதனை தெரிவிக்கிறார்.

கல்வி பொதுத்தராதர உயர் தரப் பரீட்சையில் பல்கலைக் கழகம் செல்லும் அளவுக்கு மதிப்பெண் கிட்டவில்லை என்ற விரக்தியில் நாள்கள் உருண்டோடிக் கொண்டிருக்கிறது.

இந் நேரத்தில் குடும்பத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்காக நகரில் உள்ள உணவு விடுதி ஒன்றில் வேலைக்கு அமர்கிறார். சாப்பாட்டு மேசை துடைத்தல், உணவுகள் பரிமாறுதல் என்று படிப்படியாக தனது வேலையை செய்து மாதங்களின் முடிவில் சமையல் செய்யும் பணியில் அமர்த்தப்படுகிறார். அப்போது துரித உணவுகளான ( Chicken Rice ) சிக்கன்ரைஸ், கொத்துரொட்டி போன்றவை மிகவும் பிரபல்யமானதால் அதனை எவ்வாறு சுவையாக சமைத்துத் தருவது என்பதை கற்றுக்கொள்கிறார். நாள்கள் உருண்டோட அப் பகுதியில் சற்று உயர்ந்த தரத்திலான மேற்கத்திய உணவுகளை செய்து தரும் கடை ஒன்றில் தனது பணியைத் தொடருகிறார். அப்போது பீட்ஷா எப்படி செய்வது என்பது குறித்த பயிற்சியை பெறுகிறார். இவ்வாறு ஆசிரியப்பணியை தொடரவேண்டும் என விரும்பிய ஒரு மனிதரின் தொழில் சமையல் கலையாக மாறிப்போகிறது.

எந்த நேரமும் அடுப்பில் நிற்கிற வேலைதான் என்றாலும் கூட ஒரு தொழிலை முறையாக பயின்று ஆர்வமாக வேலைபார்க்கும் போது அதில் இருந்து பெறுகிற ஆனந்தம் என்பது சற்று வித்தியாச மானது தான். எனவே இதனை கருத்தில்கொண்டு தனது பணியை சிறப்பாக செய்கிறார். ஒரு அளவு போதுமான சம்பளம் கிடைக்கவே பொருளாதார சரிவில் இருந்து குடும்பம் சற்று மேலே எழுவது போலவே தோன்றியது என்கிறார்.

"நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக" கடந்து கொண்டிருந்த ஜெயக்குமாரின் வாழ்க்கையில் அந்த நாள் தான் மாற்றத்தைக் கொடுக்கப் போகிறது என்பது அவருக்கு தெரியாது.

அப்போது யாழ் மண்ணில் மிகவும் பிரபலமான பத்திரிக்கை ஒன்றில், காரை நகரில் உள்ள இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் ( VTA) பயிற்சி நிலையத்தில் Deutsche Gesellschaft für Internationale Zusammennarbeit (GIZ), மற்றும் ஜெட்விங்க்ஸ் குழுமம் விருந்தோம்பல் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிகளை வழங்கி வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்ப தாக அறிவிப்பு வெளியிடப்படுகிறது. இதனை பார்த்ததும் ஜெயக்குமாருக்கு தானும் ஓர் தொழில் முறை சமையல் கலைஞராக வரவேண்டும் என்ற ஆர்வம்பிறக்கிறது. ஆனால் இதனை கற்க வேண்டும் என்று சொன்னால் தற்போது பெற்றுக் கொண்டிருக்கும் சம்பளத்தையும் இழக்க நேரிடும். மேலும் ஆறுமாத சம்பளம் இல்லாமல் பயிற்சி பெறப் போகிறேன் என்றால், வீட்டில் என்ன சொல்லுவார்களோ தெரியாது என்ற பயத்துடன் தனது விருப்பத்தை வீட்டில் உள்ளவர் களிடம் சொல்கிறார்.

பலமான எதிர்ப்புவரும், அம்மா நிச்சயமாக இதற்கு உடன்பட மாட்டார் என்ற எண்ணத்தில் பயந்து சொன்ன விடயத்துக்கு வீட்டில் எதிர்பாராத விதமாக ஆதரவுகிட்டியது. உனது எதிர்காலம் இதில் தான் அடங்கியுள்ளது, இப்பயிற்சியை நீ பெற்றால் நிச்சயம் உன் வாழ்க்கை மாறும் என்ற நம்பிக்கையை வீட்டு அங்கத்தவர்கள் கொடுக்கின்றனர். மேலும் இதனால் பொருளாதார இழப்பு ஏற்படும் என்று சொன்னதற்கு ஜெயகுமாரின் அண்ணன் தானாக முன்வந்து வீட்டு சூழ்நிலையை நான் சமாளித்துக்கொள்கிறேன் என உறுதி மொழி அளிக்கிறார். இதுதான் தக்க சமயம் என எண்ணிக்கொண்டு தான் பணிபுரிந்த உணவு விடுதியில் இருந்து வேலையை பணி நிராகரிப்பு செய்துவிட்டு பத்திரிக்கையில் உள்ள விண்ணப்பத்தை பூர்த்திசெய்து அனுப்புகிறார்.

யாழில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ஜெட்விங்ஸ் குழுமத்தினர் தம் நிறுவனத்துக்குத் தேவை யான ஊழியர்களை யாழ்மண்ணில் இருந்து திரட்டும் பணியில், தன்னார்வத் தொண்டு நிறுவனமான GIZ, மற்றும் VTA கல்வி நிறுவனங்களுடன் இணைந்து பயிற்சி அளிப்பதாக அப்பத்திரிக்கையில் பிரசுரமாகி இருந்தது. இதற்கான வேலைகளில் இறங்கிய ஜெயக்குமார் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்வதற்கு தகுதியானவர் என அறிவிக்கப்பட்டு ஆறுமாத பயிற்சியில் ஈடுபடுகிறார்.

இதற்கிடையில் "அரசனை நம்பி புருசனைக்கை விடுவதா?" இருக்கிறத விட்டுட்டு ஏன் பறக்கிறதுக்கு ஆசைப்படுறீங்க என்று ஜெயக்குமாரின் அம்மாவிடம் அக்கம்பக்கத்தார் கேட்க இவற்றையெல்லாம் புறம்தள்ளி என் மகன் கண்டிப்பாக ஒருநாள் வாழ்க் கையில் சாதித்துக் காட்டுவான் எனசவால் விடுகிறார் அவரது தாய்!

ஆறு மாதங்கள் பயிற்சி மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. எதிர்பார்த்தது போலவே பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் கிட்டுகிறது, பின் ஆறுமாத மேலதிக பயிற்சிகாக ஜால பகுதியில் உள்ள ஜெட்விங்க்ஸ் நிறுவனத்தின் மற்றுமொரு கிளையில் பயிற்சிக்காக ஜெயக்குமார் புறப்படுகிறார். தமிழைத் தவிர வேறு மொழிகள் தெரியாது. தெரிந்த முகங்கள் என்று யாரும் அங்கு இல்லை. தன்னம்பிக்கையை மட்டுமே துணையாகக் கொண்டு பயிற்சியை அங்கு தொடர்கிறார்.

2015 டிசம்பர்மாதம் 26ஆம் திகதி முழுமையான பயிற்சியை முடித்துவிட்டு யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பட்டுள்ள ஜெட்விங்க்ஸ் தங்கும் விடுதியின் சமையல் கலைஞராக பணியில் அமர்கி றார். இந்திய உணவு வகை, மேற்கத்திய உணவு வகை , சீன உணவுகள் மற்றும் இலங்கை உணவுகளை நல்ல சுவையாக சமைத்துக் கொடுப்பதில் கை தேர்ந்த ஒருவராக தன்னை வளர்த்துக் கொண்டதோடு யாழ் ஜெட்விங்க்ஸ் என்றால் அதில் ஜெயக்குமாரின் சமையல் தனியானது என்று சொல்லும் அளவுக்கு தொழிலின் நுணுக்கங்களை மெருகேற்றிக் கொண்டார்.

இன்று Action Food என்று சொல்லப்படும் சமையல் முறையில் மிகவும்கை தேர்ந்து காணப்படுகிறார். அதாவது தேவையான உணவை கேட்பவர்கள் முன்னிலையிலே அழகாகவும் கவர்ச்சியாகவும், சுவையாகவும் செய்து கொடுக்கும் ஓர் முறை. இதில் தற்போது ஜெயக்குமார் அனுபவம் வாய்ந்த ஓர் கலைஞ ராக மட்டுமல்லாது புதிதாக இத்துறைக்குள் வருபவர களுக்கு சொல்லிக்கொடுக்கும் அளவுக்கும் உயர்ந் துள்ளார்.

**இந் நிலையில் தங்களின் எதிர்கால நோக்கம் என்ன என்று கேட்டபோது :**

சாதாரண தொழிலாளியாக இந்த குழுமத்துக்குள் அடி யெடுத்து வைத்த நான் இன்று என் படிப்படியான முயற்சியின் மூலம் முன்னேறிச் செல்கிறேன். இத் துறையில் முழுமை யான பூரண அனுபவம் பெற்ற ஓர் சமையல் வல்லுனராக வருவது எனது ஆசையும் எதிர்கால இலக்குமாகும். மேலும் வெளி நாடுகளில் உள்ள உயர்தர உணவகங்களில் பல்வேறு தரத்திலான விதவிதமான உணவுகள் தயார்படுத்தப் படுகின்றது. இவை எவ்வாறு தயார் படுத்தப்படுகிறது என்பதையும் சமையலின் கடைசி எல்லை வரை உள்ள அனைத்து கலைகளையும் கற்கவேண்டும் என்கிறார். ஜெயக்குமார். மேலும் இது தொடர்பாக வெளி நாடுகளுக்குச் சென்று தகுந்த பயிற்சிகள் பெறுவதோடு வெளி நாடுகளின் உயர்தர உணவகங்களில் சமையல் வல்லுனராக பணி புரிவதே தனது எதிர்கால இலட்சியம் எனவும் அவர் வரைவு தீட்டுகிறார்.

**நீங்கள் விரும்பி சமைக்கும் உணவு எது ?**

நான் பெரும்பாலும் எல்லா உணவுகளையும் விரும்பித்தான் சமைக்கிறேன். எனது தொழிலை நான் நேசிப்பதால் அதன் மூலம் வெளிவரும் உற்பத்திகள் தரமானதாகவும் உணவுப் பிரியர்களின் நாவைப் பதம் பார்க்கும் ஒன்றாகவும் இருக்க வேண்டும் என்பதில் எப்போதும் நான் தெளிவாக இருக்கிறேன். அதில் குறிப்பிட்டுச் சொல்லும்படி என்றால் என்னால் கொத்து ரொட்டியைச் சொல்லமுடியும். மேலை நாட்டவர்கள் மற்றும் இதர சுற்றுலா பயணிகள் இப்பகுதியில் உள்ள உணவு முறைகளையே பெரிதும் விரும்பி வருகின்றனர். இவர்களின் உணவுத் தாகத்தைத் தீர்க்கும் விதமாக கொத்துரொட்டியை செய்கிறேன். இது எங்கள் நாட்டில் பிரபல்யமான உணவு என்பதால் இதை தரமாகவும், சுவையாகவும் செய்து கொடுக்க வேண்டும் என்பதில் அதிகப்படியான கவனம் செலுத்துகிறேன் என்று கூறி சிரிக்கிறார்.

**சமையல் துறையை ஒரு கலை என்று சொல்கிறீர்கள்! இந்தக் கலையை புதிதாக பயில விரும்பும் மாணவர்கள் மற்றும் இது தொடர்பாக அறிந்து கொள்ள விரும்புபவர் களுக்கு தாங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

உணவு சமைப்பது என்பது அடுத்தவரின் வயிற்றை சுவையால் நிறைக்கும் ஒன்று. இது அடுத்தவரின் பசியை மட்டும் போக்குவது அல்ல மாறாக சமையல் செய்கின்ற எங்களின் பசியையும் போக்குகிறது. அத்தோடு நாங்களும் சாப்பிட்டுக்கொண்டே வேலை செய்ய முடியும் என்று நகைச்சுவையாகவும் பதிலளிக்கிறார். மேலும் தனது பேச்சைத் தொடர்ந்த அவர் இத்தகைய உணவகங்களுக்கு வெளிநாட்டவர்கள் வருகை தருவதால் உள்ளூர் விடுமுறைகளும் ஏனைய விடு முறை நாள்களும் இங்கு வேலைசெய்பவர்களைப் பாதிக்காது. மேலும் ஆண்டு முழுவதும் வேலை செய்யமுடியும். கொடுக்கப்பட்ட நேரத்தை கடந்து அதிகப்படியாக செய்யும் வேலைகளுக் கும் சம்பளத்தை பெற்றுக்கொள்ள முடியும் எனவே அதிகம் உழைப்பதற்கு இது ஒரு சாதகமான காரணியாக அமையும் என ஜெயக்குமார் குறிப்பிடுகிறார். மிகப் பெரிய பிரபலங்களும் இங்கு வந்து செல்வதால் அவர்களை சந்திக்கும் வாய்ப்புகிட்டுகிறது. திரைப்பட நடிகர்கள்அரசியல் பிரமுகர்கள், வெளிநாட்டினருடன் சரளமாக உரையாடவும் முடிகிறது. இந்த கலையைக் கற்றுக் கொண்ட பின் சுயமாக தொழில் தொடங்க கூட முடியும் எனவே இதனை கற்பதற்கும் இத்துறையில் உள்ள வேலைவாய்ப்புகள் மற்றும் சம்பாதிக்கும் யுக்திகளைத் தெரிந்து கொள்வதற்கும் மாணவர்கள் முயலவேண்டும் எனவும் கூறி முடிக்கிறார்.

**உங்களுக்கும் இங்கு பணிபுரியும் ஏனைய ஊழியர்களுக்கும் இடையிலான உறவு பற்றி குறிப்பிடுங்கள்!**

ஆரம்பத்தில் இங்கு பணிபுரியும் சகபணியாளர்கள் யாரையும் எனக்குத் தெரியாது. இங்கு வந்துதான் அவர்களுடன் பழகும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஆனால் இப்போது இங்கு பணிபுரியும் 80 பேரும் எனக்கு மிக நெருக்கமான நண்பர்கள். குறிப்பாக அவர்களது சொந்த பிரச்சனைகளை என்னிடம் பரிமாறிக் கொள்ளும் அளவுக்கு அவர்களுக்கும் எனக்கும் இடையிலான உறவு இருக்கிறது. குறிப்பாக 2016 ஆம் ஆண்டு 12ஆம் மாதம் எனது தந்தை உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். அப்போது எனக்கு முழு பக்கபலமாக இருந்ததும் அப்பாவின் இறுதிச்சடங்குகளை சிறப்பாக முடிப்பதற்கும் உதவியவர்கள் என் நண்பர்கள் தான் . அந்த நேரத்தில் திடீரென ஏற்பட்ட பணப் பிரச்சினையைக்கூட தங்களது சொந்த பிரச்சினையாக கருதிபணம் கொடுத்து உதவியதோடு மேலும் என் குடும்பச் செலவுகளுக்காக அவர்களது சொந்த பணத்தை திரட்டி ஏறத்தாழ 75000 ஆயிரம் ரூபாய் கொடுத்தார்கள், ஆக சக மனிதனாக, சக சகோதரனாக என்னை அவர்கள் பார்க்கும் விதமும், நடந்துகொள்ளும் விதமும் என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது.

**இந்த தொழிலை நீங்கள் கற்றுக் கொண்டதன் மூலமாக உங்களுடைய சுயவளர்ச்சி என்பது எவ்வாறு உள்ளது.**

எனது வாழ்க்கையில் பல மாற்றங்களை இந்தத் தொழில் ஏற்படுத்தியுள்ளது. எனது அப்பாவின் இறப்பிற்குப் பின் எங்கள் குடும்பத்தின் எதிர்காலம் என்ன என்ற கேள்விக் குறி எழுந்த நிலையில் அதனை நிவர்த்தி செய்யும் விதமாக இத்தொழில் உள்ளது. இன்று எனது அக்காவின் திருமணத்தை நான் சம்பாதித்துதான் நடத்திவைக்கிறேன். இப்பொழுது குடும்பத்தில் பொருளாதாரப் பிரச்சினை என்பது இல்லாமல் போய்விட்டது. எனது சுயவளர்ச்சி என்பதில் நான் முக்கியமாக சொல்ல வேண்டியது எனது மொழிவளம் என்பது சற்று உயர்ந்துள்ளது. ஆங்கிலமும் சிங்களமும் என்னால் இப்போது சரளமாக பேச முடிகிறது. எனது ஆளுமைத் திறன் வளர்ந்து உள்ளது. பிரச்சினைகளைக் கண்டு பயந்து ஓடிய நான் இப்போது எல்லா பிரச்சினைகளையும் எதிர்கொள்ள கற்றுக்கொண்டுள்ளேன். ஒரு பிரச்சினை என்றால் அதில் 'இருந்து எப்படி வெளிவருவது என்பது எனக்கு நன்றாகவே தெரியும். என்னால் இப்போது சொந்தக் காலூன்றி நிற்க முடியும். எனவே இந்த சமையல்கலை எனக்கு சமையலை மட்டும் கற்றுக் கொடுக்கவில்லை மாறாக வாழ்க்கையையும் கற்றுக்கொடுத்து இருக்கிறது.

இன்று மாதம் முப்பத்தைந்தாயிரத்திற்கும் அதிகமாக சம்பளம் பெறும் ஜெயக்குமாரின் வாழ்க்கை யில் பல மேடு பள்ளங்கள் இருந்து வந்துள்ளது.

ஒரு சாதாராண ஏழைக் குடும்பத்தில் பிறந்து தன்னுடைய வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதைக் கூட வடிவமைக்கத் தெரியாத ஓர் இளைஞன், எப்படி இன்று பல மாணவர்களுக்கு முன்னுதாரணமாக மாறினான் என்பதை இந்த வாழ்க்கைக் குறிப்பு நமக்கு தெளிவாக புலப்படுத்தி இருக்கிறது. பாதைகள் இருட்டாக இருப்பதால் அதில் பயணிக்க முடிவதில்லை என்று சொல்வதை விட வெளிச்சத்தை நோக்கி பாதைகளை அமைக்கும் மனிதர்களாக நம்மை நாமே மாற்ற முன்வர வேண்டும். அதற்கு ஜெயகுமார் போன்ற இளைஞர்களின் வாழ்க்கையை நாம் முன்னுதாரண மாக மாற்றிக்கொள்ள வேண்டும். இத்தலை முறையின் மற்றுமொரு திறனாளியை அடையாளம் காணும் பயணத்தில் மேலும் இணைந்திருப்போம்.

(யாவும் உண்மை)

**வடக்கில் விருந்தோம்பல் முகாமைத்துவத் துறையில் இணைந்து பணியாற்ற விரும்பும் இளையோர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்**

**தொ.பே: 021 4927 025**

(IN 6504)(10)

## வலி கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி
## அறிவித்தல் 18.04.2018
## கிளைப்பொதுச்சபைக் கூட்டம்

எமது சங்கத்தில் பின்வரும் கிளைகளின் கிளைப்பொதுச்சபைக் கூட்டம் 21.04.2018 ஆம் திகதி சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அந்த அந்தக் கிளை அமைந்துள்ள பிரதேசங்களில் நடைபெறும். தங்களுடைய பெயர் பட்டியல் கிளைநிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. தங்களுக்குரிய அறிவித் தல் உரிய கிளைக்குழுவின் செயலாளரால் அனுப்பப்பட்டுள்ளது. ஆயினும் தங்களுக்குரிய அறிவித்தல் கிடைக்காத பட்சத்தில் உரிய கிளைகளின் வாக்களிக்கத் தகுதியுள்ள பட்டியலில் பெயர் உள்ளவர்கள் இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று 21.04.2018 ஆம் திகதி நடைபெறவுள்ள கிளைப்பொதுச் சபைக் கூட்டத்துக்கு சமுகமளித்து ஒத்துழைப்பு நல்குமாறு தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

| கிளை | கூட்டம் நடைபெறும் இடம் | நிகழ்ச்சி விடயம் |
|---|---|---|
| ஆவரங்கால் தெற்கு கிளை இல.10 | ஆவரங்கால் தெற்கு கிளை 10 மேல்மாடிக் கட்டடம் | தற்போது மாதிரி விற்பனை நிலையமாக இயங்கும் வளர்மதி கிளையினை ஆவரங்கால் தெற்கு கிளை இல.10 இல் இருந்து பிரித்துக் கிளை அந்தஸ்துள்ள கிளையாக மாற்றம் செய்வது தொடர்பாகவும் அங்கத்தவர்கள் பிரித்து செல்லுதல் தொடர்பாகவும் ஆராய்தலும் தொடர் நடவடிக்கையும். |
| புத்தூர் மேற்கு கிளை இல. 13 | புத்தூர் மேற்கு சிவன் கோயிலடி பொதுநோக்கு மண்டபம் | தற்போது மாதிரி விற்பனை நிலையமாக இயங்கும் கலைமதி கிளையினைப் புத்தூர் மேற்கு கிளை இல.13 இல் இருந்து பிரித்துக் கிளை அந்தஸ்துள்ள கிளையாக மாற்றம் செய்வது தொடர்பாகவும் அங்கத்தவர்கள் பிரித்துச் செல்லுதல் தொடர்பாகவும் ஆராய்தலும் தொடர் நடவடிக்கையும். |
| சூரியோதயக் கிளை இல.15 | சூரியோதயக் கிளைக் கட்டடம் | தற்போது மாதிரி விற்பனை நிலையமாக இயங்கும் ஜனசக்தி கிளையினை சூரியோத யம் கிளை இல.15 இல் இருந்து பிரித்துக் கிளை அந்தஸ்துள்ள கிளையாக மாற்றம் செய்வது தொடர்பாகவும் அங் கத்தவர்கள் பிரித்துச் செல்லுதல் தொடர் பாகவும் ஆராய்தலும் தொடர் நடவடிக் கையும். |
| புத்தூர் கிழக்கு கிளை இல.22 | புத்தூர் கிழக்கு பொது நோக்கு மண்டபம் (கருகப்பை ஈஸ்வரன் கோயிலடி) | தற்போது மாதிரி விற்பனை நிலையமாக இயங்கும் கருகப்பை ஈஸ்வரன் கிளை யினைப் புத்தூர் கிழக்கு கிளை இல.22 இல் இருந்து பிரித்துக் கிளை அந்தஸ் துள்ள கிளையாக மாற்றம் செய்வது தொடர்பாகவும் அங்கத்தவர்கள் பிரித்துச் செல்லுதல் தொடர்பாகவும் ஆராய்தலும் தொடர் நடவடிக்கையும். |

**கூட்டுறவு சேவையிலுள்ள தலைவர்.**

(18/6498)(11,17)







## நரைன் 100 இலக்குகள்

ஐ.பி.எல். தொடரில் 100 இலக்குகளைக் கைப்பற்றிய முதலாவது வெளிநாட்டு வீரர் என்ற அடைவைப் பெற்றார் மேற்கிந்தியத் தீவுகளின் சுனில் நரைன்.

கொல்கத்தா அணி டெல்லியை எதிர்த்து நேற்று முன்தினம் விளையாடியது. இந்த ஆட்டத்தில் நரைன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். இதைடுத்து ஒட்டுமொத்த ஐ.பி.எல். இலக்குகளின் எண்ணிக்கையை 102ஆக அதிகப்படுத்திக் கொண்டார் நரைன். இதையடுத்து, ஐ.பி.எல். தொடரில் 100 இலக்குகள் என்ற மைல் கல்லை எட்டிய முதலாவது வெளிநாட்டு வீரர் என்ற அடைவை அவர் வசப்படுத்தினார் நரைன். (ம)





# பெங்களூரை தோற்கடித்து மும்பைக்கு முதல் வெற்றி

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரைத் தோற்கடித்து, இந்தத் தொடரில் முதலாவது வெற்றியைப் பதிவுசெய்தது மும்பை.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. மும்பை அணியின் ஆரம்ப வீரரான சூரியக்குமார் யாதவை முதல் பந்திலேயே போல்ட் முறையில் வீழ்த்தினார் யாதவ். இரண்டாவது பந்தில் இசான் கிசானும் போல்ட் முறையில் ஆட்டமிழக்க ஓட்டமெதையும் பெறாத நிலையில் இரு இலக்குகளை இழந்தது மும்பை. எனினும் அணித் தலைவர் ரோகித், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் லூயிஸ் இணைந்து ஆட்டத்தில் மாற்றத்தைக் கொண்டு வந்தனர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது மும்பை. அணி 108 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 65 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் லூயிஸ். தொடர்ந்து அபாரமாக விளையாடிய ரோகித் 94 ஓட்டங்களைச் சேர்க்க மும்பை அணி 7 இலக்குகளை இழந்து 213 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்குக் களமிறங்கிய பெங்களூருக்கு கோக்லி ஓர் முனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையில் அவருடன் இணைந்து போராட்டத்தை வெளிப்படுத்த எவரும் தயாராகவில்லை. குறிப்பாக முன்வரிசையில் வில்லியர்ஸ் ஓர் ஓட்டத்துடனும் மத்திய வரிசையில் அன்டர்சன் ஓட்டமெதையும் பெறாமலும் ஆட்டமிழந்தமை பின்னடைவாகியது. கோக்லி அரைச்சதம் கடந்தார். அவரின் அதிரடி தொடர்ந்தது. முடிவில் 8 இலக்குகள் இழப்புக்கு 167 ஓட்டங்களையே பெங்களூரால் எடுக்க முடிந்தது. 46 ஓட்டங்களால் வெற்றிபெற்றது மும்பை. கோக்லி 92 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். (ம)

## நண்பர்கள் கழகத்தின் கரப்பந்து, துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் கரப்பந்தாட்டம் மற்றும் மென்பந்துத் துடுப்பாட்டத் தொடர் ஆகியவற்றை விரைவில் நடத்தவுள்ளது.


துடுப்பாட்டத் தொடர் அணிக்கு 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்டதாக 7 வீரர்கள் பங்குபற்றக்கூடிய வகையில் அமையும். ஒரு கழகம் ஏ, பி, சி என்ற அடிப்படையில் எத்தனை அணியையும் உட்சேர்க்க இயலும். கரப்பந்தாட்டம் ஓவர் கேம், செற்அப் என்ற இரு பிரிவிலும் நடத்தப்படவுள்ளது. கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் ஏற்பாட்டாளர்களுடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும். (ம)

## கேலப் முதலிடம்

பன்னாட்டு ரென்னிஸ் சம்மேளனத்தின் தரப்படுத்தலில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் ருமேனிய வீராங்கனை கேலப் முதலிடம் பிடித்தார்.

8 ஆயிரத்து 140 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார் கேலப். டென்மார்க் வீராங்கனை வோஸ்னியாக்கி 6 ஆயிரத்து 790 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். ஸ்பெயின் வீராங்கனை முகுருசா 6 ஆயிரத்து 65 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், உக்ரைன் வீராங்கனை ஸ்வெட்டலினா 5 ஆயிரத்து 630 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், லத்விய வீராங்கனை ஒஸ்டபென்கோவ் 5 ஆயிரத்து 307 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

ஆறாவது இடத்தில் செக்குடியரசின் கரோலினா பிளிஸ்கோவா, ஏழாவது இடத்தில் பிரான்ஸ் வீராங்கனை கரோலின், எட்டாவது இடத்தில் அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ், ஒன்பதாவது இடத்தில் அமெரிக்க வீராங்கனை ஸ்ரீபன்ஸ், 10ஆவது இடத்தில் செக்குடியரசின் வீராங்கனை கிவித்தோவா ஆகியோர் உள்ளனர். (ம)



## வசந்தசிறி வென்றது

யாழ்ப்பாணம், ஏப். 18

தையிட்டி திருவள்ளுவர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வசந்த சிறி அணி வெற்றி பெற்றது.

திருவள்ளுவர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில், வசந்தசிறி அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதியது. 8:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வசந்தசிறி அணி வெற்றி பெற்றது. (ம-23)

## அறிவொளி அசத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 18

தேசிய புத்தாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட தாச்சித் தொடரில் பெண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணிமோதியது. 6:1என்ற புள்ளிகளின் அடிப்படையில் பண்டத்தரிப்பு அறிவொளி அணி வெற்றிபெற்றது. (ம-23)

# ரியல் மட்ரிட் மீண்டும் கிண்ணம் வெல்லும் தலைவர் சேர்ஜியோ ராமோஸ் நம்பிக்கை




ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், இந்த வருடமும் ரியல் மட்ரிட் அணி கிண்ணம் வெல்லும் என்று நம்பிக்கை தெரிவித்தார் அந்த அணியின் தலைவர் சேர்ஜியோ ராமோஸ்.

2016, 2017ஆம் ஆண்டுகளில் சம்பியன்ஸ் லீக் தொடரில் ரியல் மட்ரிட் கிண்ணம் வென்றது. இந்த வருடமும் அந்த அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது. அரையிறுதியில் பெயர்ன் மூனிச்சை மட்ரிட் எதிர்கொள்கிறது. இதில் வெற்றி பெற்றால் மற்றொரு அரையிறுதியில் விளையாடும் அணிகளான லிவர்பூல், றோமா ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை இறுதியில் மட்ரிட் எதிர்கொள்ளும். தற்போதுள்ள எஞ்சிய மூன்று அணிகளை விட மட்ரிட் பலமானது என்றே கருதப்படுகிறது. இந்த நிலையில் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார் ராமோஸ்.

"சம்பியன்ஸ் லீக் தொடரில் இந்த வருடமும் கிண்ணம் வெல்ல வேண்டும் என்ற முனைப்புடன் உள்ளோம். சம்பியன்ஸ் லீக்கில் நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்தைத் தக்கவைக்க இயலும் என்றே கருதுகிறோம். காலிறுதி ஆட்டங்களில் றொனால்டோ சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் உட்பட ஏனைய வீரர்கள் காயமடையாமல் இருப்பது அணிக்கு மிகவும் அவசியம். அதில் கவனத்துடன் உள்ளோம்" என்று ராமோஸ் மேலும் தெரிவித்தார். (ம)

## சரஸ்வதி போராடி வென்றது

யாழ்., ஏப். 18

தேசிய புத்தாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட தாச்சித் தொடரில் ஆண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 5:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சரஸ்வதி அணி வெற்றிபெற்றது. (ம-23)



# பிங்பொங் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 18

கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில், அம்மன் பிங்பொங் அணி கிண்ணம் வென்றது.

கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அம்பன் பிங்பொங் அணியை எதிர்த்து வெள்ளிநிலா விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வெள்ளிநிலா அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக தர்சன் 19 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சயந்தன் 3 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அம்பன் பிங்பொங் அணி 9.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது. தேவதாஸ் அதிகபட்சமாக 21 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் யாழிசன், றஞ்சித் இருவரும் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.

(ம-23)

## இன்றைய மோதல்கள்


தையிட்டி திருவள்ளுவர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவற்குழி சரஸ்வதி 'ஏ' அணியை எதிர்த்து நவாலி தென்றல் அணி மோதவுள்ளது. (ம-23)

# சென்றலைட்ஸ் கழகம் பல்கலையை வென்றது

யாழ்ப்பாணம், ஏப். 18

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென்றலைட்ஸ் அணி வெற்றிபெற்றது.

சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணி மோதியது. 84:51 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சென்றலைட்ஸ் அணி வெற்றி பெற்றது. (ம-23)



# இந்திய அணியின் கோக்லி கிரிக்கெட்டின் றொனால்டோ

## சொல்கிறார் பிராவோ

"இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி, கிரிக்கெட்டின் கிறிஸ்ரியானோ றொனால்டோ" என்று தெரிவித்தார் மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை வீரர் பிராவோ.

கால்பந்து உலகில் ஆகச் சிறந்த வீரராகத் தொடர்ந்து தெரிவாகி வருகிறார் றொனால்டோ. உடற் தகுதியையும் சிறப்பாகத் தக்கவைத்து வருகிறார். இந்திய அணியின் தலைவர் கோக்லியும் கிரிக்கெட் உலகில் ஆகச் சிறந்த வீரராக திகழ்வதுடன் உடற்தகுதியையும் மேம்படுத்தி வருகிறார். இவ்வாறிருக்க கோக்லி, கிரிக்கெட்டின் கிறிஸ்ரியானோ றொனால்டோ என்று தெரிவித்துள்ளார் பிராவோ.

"விராட் கோக்லியைக் கிறிஸ்டியானோ றொனால்டோவுன் ஒப்பிடுவது சிறந்தது. விராட் கோக்லி 19 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் எனது இளைய சகோதரரான டேரன் பிராவோவுடன் விளையாடியுள்ளார். நான் விராட் கோக்லியைப் பார்க்கும்போது, கிரிக்கெட்டில் றொனால்டோவைப் பார்க்கிறேன். ஒரு கிரிக்கெட் வீரராக கோக்லியின் திறமையை நான் கட்டாயம் பாராட்டுவேன். கோக்லி அனைத்துச் சாதனைகளுக்கும் தகுதியானவர்" என்று பிராவோ மேலும் தெரிவித்தார்.

(ம)

# ரசலின் அதிரடியால் தோல்வியடைந்தோம்

## ஏற்கிறார் கம்பீர்



"ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நாம் தோல்வியடைந்தமைக்கு ரசலின் அதிரடி முக்கிய காரணமாக அமைந்தது" என்று தெரிவித்தார் டெல்லி அணியின் தலைவர் கம்பீர்.

கொல்கத்தா அணியின் துடுப்பாட்ட வரிசையை டெல்லி ஓரளவு கட்டுப்படுத்தியே வைத்திருந்தது. ஆனால் ரசல் 12 பந்துகளில் 41 ஓட்டங்களைக் குவிக்க ஆட்டம் கொல்கத்தாவின் பக்கமாகச் சென்றது. ரசலின் அதிரடியே கொல்கத்தா 200 ஓட்டங்களைக் குவிக்க காரணமாக அமைந்தது. இதையடுத்தே இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் கம்பீர்.

"ஒரு கட்டத்தில் கொல்கத்தா அணி 175 ஓட்டங்களைக் கூட எடுக்காது என்று நினைத்தேன். ஆந்த்ரே ரசலுக்கு எதிராக திட்டம் வைத்திருந்தோம். ஆனால் அவர் ஆட்டத்தை மாற்றி விட்டார். கையில் இருந்த வெற்றியை கொல்கத்தாவிடம் பறிகொடுத்து விட்டோம்" என கம்பீர் மேலும் தெரிவித்தார். (ம)




# சென். சேவியர் வி.கழகம் இறுதிக்குத் தகுதிபெற்றது

யாழ்ப்பாணம், ஏப். 18

கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது தேவன்பிட்டி சென். சேவியர் விளையாட்டுக் கழகம்.

சென். மேரிஸின் மைதானத்தில் நேற்று இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து தேவன்பிட்டி சென். சேவியர் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் கோல்கள் எதுவும் பதிவாகாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:1 என்ற கோல் கணக்கில் சென். சேவியர் அணி வெற்றிபெற்றது. (ம-23)



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில், நாளை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் அத்லெட்ரிக் பில்பையோ அணியை எதிர்த்து ரியல் மட்ரிட் அணி மோதவுள்ள நிலையில் இந்த ஆட்டத்துக்காக ரியல் மட்ரிட் அணி நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது. (ம)

## NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.

NALIN Information Technologies Pvt Ltd.

hp

வட மாகாணத்தில் இன்
ஒரே ஒரு வர்த்தக பங்காளர்
Commercial Partner



**புதுவருடத்தை முன்னிட்டு நவீன மடிக்கணினிகள்**

புதிய வெளியீடுகள்
8th GENERATION
2018 New Models
விசேட விலைக்கழிவுடன்

மேலும் பல தெரிவுகள்
Core i3 7th Gen with win 10
Core i5 8th Gen with win 10
Core i7 8th Gen with win 10

இலவசப் பரிசுகள் (Free Gifts)
1. Pen Driver 16GB ADATA (01 Year Warranty)
2. 1 Year K7 Anti Virus Licence
3. Laptop Bag Free
4. 3 Years Service Support
5. Free Delivery (Around 10 Km in Jaffna City)

**HP 15 - BW535AU**
AMD Dual Core 1.5GHz (E2-9000E)
4GB DDR4
500GB HDD
DVD/RW+DL
15.6" HD Screen
AMD R2 Graphics
Genuine Windows 10 Home 64Bit
2 Years Warranty + 3 Years' Service

Windows 10 Genuine

2 வருட உத்தரவாதத்துடன்



~~Rs.51,000/-~~
**Rs.47,000/-**

இச்சலுகை இருப்புள்ள வரை மட்டுமே.

*Cash Purchase only*

மேலதிக பக்கேஜ் விபரங்களுக்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.
No.195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121, 077 766 7975, 021 222 4994

## புதிய கிளைகளுக்கான பதவி வெற்றிடம்

வணிகத்துறையில் முன்னணியில் திகழும் எமது நிறுவனமானது புதிய கிளைகளுக்குப் பல பதவி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யவுள்ளது.

**பதவி**

▼ அலுவலர் ▼ களஞ்சியப் பாதுகாவலர் ▼ மேற்பார்வையாளர் ▼ முகாமையாளர்

2017ஆம் ஆண்டு O/L பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு சிறந்த பயிற்சியினூடாக உயர்ந்த பதவிகள் வழங்கப் படவுள்ளன.

**தகைமை**

O/L, A/L மேற்தகைமையுடையோர் **குறிப்பு:-** தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு. பயிற்சியின்போது 12.000 - 20.000 சம்பளம் வழங்கப்படும். பயிற்சியின் பின் 35.000 - 65.000 வரை வழங்கப்படும்.

077 695 3242, 077 062 1631

## உடனடி வேலைவாய்ப்பு

**01) சுப்பர் மார்க்கட் (லேபர், கிளீனர்)** SR 65000+ OT, உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.
**02) ஏயார்ப்போட் (லேபர், கிளீனர்) (ஆண், பெண்)**
SR 65000+ OT, உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.
**03) றைவர் (கெவி வேக்கிள், லைட் வேக்கிள்)** SR 65000 தொடக்கம் 85000 வரை, உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.
**(மற்றும் வீட்டுப் பணிப்பெண்கள், மேசன், பிளம்பர், வெல்டர், காப்பெண்டர், வயறிங் உடன் தேவை)**
LL NO:- 2772

077 551 5051, 076 379 3828

## குஜராத், அகமதாபாத், நேப்பாள் காசி யாத்திரை

நாள்கள்:- 16 ஆரம்பம்:-25.05.2018 யாத்திரீகர் :- 15

### மிகவும் புனிதமான யாத்திரை

**செல்லும் இடங்கள் :- குஜராத்தில்:** பாவ்நகர், கடலுக்குள் பஞ்சலிங்கம், சோமநாதர், ஜோதிலிங்கம், தையூர், கங்கேஸ்வரர் பஞ்சலிங்கம் அம்பாஜி 51 கலசமுடைய சக்தி பீடம் (பெரிய ஆலயம்).காபர்மலை பார்வதிதேவியின் இருதயம் விழுந்த இடம். 51 சக்தி பீடங்களில் முதன்மையான ஆலயம். **காசி:** விஸ்வநாதர், விசாலாட்சி, அன்னபூரணி, காலபைரவர் உட்பட 15 இடங்களைத் தரிசிக்கலாம். **கயா:** முன்னோர்களுக்கு சிரார்த்தம் செய்யுமிடம். **அலகாபாத்:** கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணி சங்கமம். வேறு இடங்களும் காணலாம். சீத்தா மடியும் காணலாம். **நேப்பாள்:** கோரப்பூர், லும்பினி, புத்தபிரான் பிறந்த இடம். **காத்மண்டு:**கமக்கயா, போக்ரா, சுயம்புநாதர், பெரியகுகை, ஜெல்நாராயணர், தண்ணீரில் மிதக்கும் விஷ்ணு, குச்சேஸ்வரர், பசுபதிநாதரையும் தரிசிக்கலாம். **சென்னை : இராமேஸ்வரம்:** நவபாஷாணம், திருப்புலானி, உத்திரகோசமங்கை, **மதுரை :-** மீனாட்சி சுந்தரேஸ்வரரையும் தரிசிக்கலாம்.

**தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை**

விமானப் பயணச்சீட்டு 4. மூன்றுவேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, குடிநீர், A/C வாகன வசதி, 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன் கொமட், குளியலறை இணைந்த அறைகள் இவை அனைத்தும் எமது சேவை. இத்துடன் ஒருநாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம். பிராமண சமூகத்தினரும் தயக்கமின்றி கலந்துகொள்ளலாம். விருப்பமுடையவர்கள் உடன் பதிவு செய்யவும்.

விஸ்வப்பிரம்மஸ்ரீ கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
No.59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு -11
T.P: 077 768 0102, 077 736 2154

(IN)(11.17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் அழைப்பும்

ஆயிரம் பிறை கண்ட அன்னை

காரைநகர் நட்டுப்பாளி கோவளம் பூத்த குலமங்கை

**திருமதி இராசலட்சுமி சதாசிவம்**





அம்மையாரின் ஓராண்டு திவச நாளில்
வாழ்த்தி வணங்கும் பிள்ளைகள்

கோவளம் பூத்த குலமங்கை இராசலட்சுமித் தாயார்
கொடி மலர்ந்த குடிதழுவிக் குலம்வாழ
சீவனநாள் சீர்திகழ் சதாசிவத்தின் வாழ்வின் துணையாகி
சிறந்த இல்லற மாதரசியாய் செங்கோல் தாங்கி
பூவனத்தில் புகழோங்க புத்திரர்கள் தாயாகி முடிசூட்டி
புவிவாழ்வினில் போதுமென்று பூந்தண்டிகைப் பயணம் கொண்டு
மேவிய ஓராண்டுத் திவச நாளில் திக்கெட்டுத் தேவரும் வாழ்த்த
தேவனடி சேர்ந்த அன்னையரின் சேவடிக்கு வணக்கம்

எங்கள் அன்புத் தாயாரின் ஓராண்டு திவசநாள் இன்று (18.04.2018) புதன்கிழமை அன்னையாரின் இல்லத்தில் (8, மாவடி வீதி, ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்) நண்பகல் 12.00 மணிக்கு மோட்ச ஆராதனையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

08, மாவடி வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன் வாழும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.